வாரப் பதிப்பு விலை சதம் 25

தமைத் தபால் நிலையத்தில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது

# சுதந்திரன்
SUTANTIRAN


194 A, BANDARANAIKE STREET, COLOMBO-12.

194 ஏ, பண்டாரநாயக்க வீதி, கொழும்பு 12.




புத்தகம் 20 | திருவள்ளுவர் ஆண்டு 1997 ஆனி திங்கள் 18-ம் நாள் (2-7-1966, சனிக்கிழமை ரபி: அவ்வல் 13 | இதழ் 5

## கல்முனையில் திரண்ட மக்கள் சமுத்திரத்தின் ஒரு பகுதி



கல்முனையில் நடைபெற்ற தமிழரசுக் கட்சியின் 10-வது தேசிய மாநாட்டின் இறுதி நிகழ்ச்சியான பொதுக்கூட்டம் ஆரம்பமாவதற்கு பல மணி நேரத்துக்கு முன்பே கூட்டம் நடைபெறவிருந்த கல்முனை கடற்கரை மைதானத்தில் சனத்திரள் பல்லாயிரக் கணக்கில் திரள ஆரம்பித்துவிட்டது. கூட்டம் ஆரம்பமாக சரியாக ஒரு மணி நேரத்துக்கு முன்பு காணப்பட்ட சனசமுத்திரத்தின் ஒரு பகுதி மேலே காணப்படுகிறது. அதன் பின்னர்தான் இரண்டு பெரிய ஊர்வலங்கள் மைதானத்தை வந்தடைந்தன. பிரதமருடன் மட்டக்களப்பிலிருந்து ஊர்வலமாக வந்த பலநூறு கார்கள் மைதானத்தை நெருங்க வழியில்லாமல் திரும்பிப்போகவேண்டியதாயிற்று அலைகடலெனத் திரண்டிருந்த மக்கள் கூட்டம் கண்ணியத்துடன் அமைதி காத்தது கண்டு ஆச்சரியமடைந்த பிரதமர் கூட்டத்திலிருந்து வெளியேறும்போது தனது 30 வருட கால அரசியல் வாழ்வில் இப்படிக் கட்டுப்பாடான மக்கள் கூட்டத்தைக் கண்டதில்லையெனக் குறிப்பிட்டார்.

# யு. என். பி. - தமிழரசு உறவு நிலைக்கட்டும்

## கல்முனையில் பிரதமர்

“திரு. செல்வநாயகம் யோக்கியமுள்ளவர்—நேர்மையானவர்—கண்ணியவான் என்ற காரணத்தால் தான் இந்த தேசிய அரசாங்கத்தை அமைப்பதற்காக அவரது கரத்தைப் பற்றினேன்”

“இன்று எங்களுக்கிடையில் ஏற்பட்டிருக்கும் நட்பு தற்காலிகமானதாக இருக்காமல் நிரந்தரமானதாக இருக்கவேண்டுமென விரும்புகிறேன்”

“எனது 30 வருட அரசியல்வாழ்வில் மிக்க மகிழ்ச்சியைத் தரும் நிகழ்ச்சிகளும் மிக்க துன்பத்தைத் தரும் நிகழ்ச்சிகளும் இடம் பெற்றுள்ளன. இந்த மகிழ்ச்சியைத் தரும் நிகழ்ச்சிகளில் ஒன்று தமிழரசுக் கட்சிமேடையில் நின்று உங்களுக்கு

(9-ம் பக்கம் பார்க்க)

## டாக்டர் மாநாயக்க கலந்துரையாடல்

சயாம் நாடு சென்று திரும்பியதும் பிரதமர் டட்லி சேனநாயகாவுடன் தமிழ் பல்கலைக் கழகக் கோரிக்கைபற்றி பேச்சுவார்த்தை நடாத்தப் போவதாக மல்வத்தை மடாதிபதி மாநாயக்க

(9ம் பக்கம் பார்க்க)

## அடிமைகளாக வரவேற்கவில்லை

## தமிழரசுத் தந்தை பேச்சு

★ “தமிழ் பேசும் மக்கள் அடிமைகள் அல்லர் நாமும் சம உரிமை பெற்ற மக்கள் என்ற நிலையிலேயே பிரதமர் அவர்களை வரவேற்கின்றோம்”

★ “இன்று ஏற்பட்டிருக்கும் நட்புறவு நீடிக்க வேண்டுமென்று விரும்புகிறேன்”

(9-ம் பக்கம் பார்க்க)

**இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களின் உரிமைக் குரல்**

அடுத்த இதழ் வெளியூரில் 8-7-66 காலை தலை நகரில் 7-7-66 மாலை கிடைக்கும்

# வளர்மதி

## சுதந்திரன் மாணவர் மன்றம்

## லீவர் பூல் இருக்கும் இடம்

பிரிட்டனின் கடற்றுறை முகங்களில் லண்டனுக்கு இரண்டாவது ஸ்தானத்தை பெற்றுள்ளது லீவர் பூல். இது முதலாவது ஸ்தானத்தை பெற்ற ஏற்றுமதி துறைமுகமாகவும் திகழ்கிறது. கப்பல் தங்குதுறையின் முழுப்பரப்பு 2000 ஏக்கர். உலகின் மிகப் பெரிய துறைமுகங்கள் யாவும் தத்தம் ஆரம்ப இடங்களிலுள்ள பலனளிக்கக்கூடிய சூழ்நிலையிலேயே, வளர்ந்து வந்தன. அனேகமாக இவை யாவும் இயற்கைத் துறைமுகமாகவோ அல்லது சிறிய வள்ளங்கள் வந்து இறங்கு துறைமுகமாகவோ இருந்து வந்தன. வடமேற்கில் இருந்து ஐறிஸ்கடலில் விழும் மேசி ஆறின் கழிமுகம் தகுந்த முறையில் பாதுகாக்கப்படவில்லை. கழிமுகத்தின் வடகிழக்குப் பாகத்தில் இதற்கு இணைந்ததாக, பாறைகளடங்கிய ஓர் இயற்கைத் துறைமுகமிருந்தது. இத்துறைமுகம்தான் லீவர் பூல் என்றழைக்கப்படுகிறது. இதற்கு அருகாமையில் மக்கள் வாழக்கூடிய ஓர் நிலப் பிரதேசம் காணப்பட்டது. இப்பிரதேசம்தான் இப்பொழுது லீவூர் பூல் என்ற நகரமாகத் திகழ்கிறது. இப்பிரதேசத்தின் பாறையொன்று புதிய அங்கிலிக்கத் தேவாலயமொன்றிற்கு மேலாக எழும்பி நிற்கிறது. அத்துடன், கத்தோலிக்க தேவாலயமும், லீவர் பூல் தேவாலயமும் இதற்கு அருகாமையில் காட்சியளிக்கின்றன.

லீவர்பூல் துறைமுகம் இன்னும் பாவிக்கக்கூடிய துறைமுகமாக இயங்கி வருகின்றது. கழிமுகத்தின் கரையோரங்களில், மணற்பாறையின் இரு மருங்கிலும், நிலம் பதிவாகவும் சேற்றுத் தன்மை கொண்டுள்ளதாகவும் காட்சியளிக்கின்றன. லீவர் பூல் வளர்ந்து வந்த போது கழிமுகத்தின் எதிர் பாகம் ஒருமைலுக்கப்பால் பேர்க்கன் ஹெட் என்ற கைத்தொழில் நகரத்துடன் வளர்ந்தது. இந் நகரம் கப்பல் அமைப்புத் துறைக்கே முக்கிய கவனம் செலுத்தியது. இவ்விரு இடங்களையும் பாதைகள் இணைத்தன. ஆயிரக்கணக்கான உத்தியோகத்தர்கள் தினமும் பாதைமூலம் சென்றனர். லீவர் பூலைச் சுற்றிய இடம் சற்று உயரமாகவிருக்கின்றது, இன்று மேசிசைட், லீவர் பூல் பேர்க்கன் ஹெட், இவைகளைச் சேர்ந்த இணை நகரங்கள் யாவும், 1,400,000 மில்லியன் மக்களைக்கொண்ட இணை நகரங்களாகும்.

—புங்கநகர்,
ஆ. விஜயரெத்தினம்.

## விளையாட்டுப் பொருட்கள் மூலம் கணிதம் கற்பிக்கும் நவீனமுறை

பாடசாலைச் சிறுவர்களுக்கு பிடிக்காத ஒரு பாடமென்றால் அதுகணிதம் தான். கூட்டல், கழித்தல், பெருக்கல், பிரித்தல் போன்ற கணிதப் பிரச்சினைகள் விளங்கிக்கொள்வதென்றால் சிறுவர்களுக்கு இது சிரமமான விஷயம்.

சிறுவர்களுக்கு கணிதத்தில் ஆவலைத் தூண்டிவிட்டு, கணிதப் பிரச்சினைகளை இலகுவில் அறிந்து கொள்ள பிரிட்டிஷ் ஆசிரியர்கள் சிலர்புதிய வழிமுறை ஒன்றை கண்டு பிடித்திருக்கிறார்கள். விளையாட்டுப் பொருட்கள் மூலம் இதனை இலகுவில் சாதித்துவிடலாமென இந்த ஆசிரியர்கள் நம்புகிறார்கள்.

உள்ளூர் கல்வி இலாகா நடத்திவரும் பரிசோதனையின் ஒரு அம்சம்தான் இது.. கணிதப்பாடங்களமீது சிறார்களுக்கு ஆர்வத்தை ஏற்படுத்துவதுதான் இதன் நோக்கம்.

பிரிட்டனைச் சேர்ந்த நியூ போர்ட் என்னும் நகரத்தில் 'விளையாட்டு மூலம் கற்பித்தல்' என்ற பாடத்திட்டம் இப்பொழுது நடைமுறையிலிருந்து வருகிறது.

யதார்த்த பூர்வமான விளையாட்டுப் பொருட்களையும் சின்னங்களையும் சிறுவர்கள் கையாளச் செய்வதன் மூலம் கணிதப்பிரச்சினைகளை அவர்களே ஆராய்ந்து அதற்கான விடையையும் அவர்களே காணக்கூடியதான புதிய முறை இது.

உதாரணமாக ஒரு சிறுவனிடம் விளையாட்டுப் புகைவண்டி ஒன்று கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்த ரயில் கடந்துசென்றதண்டவாளத்தின் நீளம், இதனைக் கடப்பதற்கு அது எடுத்த நேரம் ஆகியவற்றை அச்சிறுவன் கணித்துச் சொல்லவேண்டும். ஆசிரியர் ஒருவரின்மேற்பார்வையிலேயே இது நடைபெறுகிறது. இவ்வித கணக்கு விபரங்களை அச்சிறுவன் உற்சாகமாக மிக ஆவலுடன் செய்து முடிக்கிறான்.

பந்துகளை உருட்டிவிட்டு அது செல்லும் தூரத்தையும் நேரத்தையும்கணிப்பது, மிட்டாய்களை நிறுத்து அவற்றின் எடையைக் காண்பது, இப்படி பல ரகமான விளையாட்டுக் கணித முறைகள் இப்பாடசாலைகளில் கையாளப்படுகின்றன. போத்தல்கள், பழைய நாணயங்கள், விளையாட்டுக்காரர்கள், மாடல் படகுகள் இவைபோன்ற பல விளையாட்டுச்சாமான்கள் கணிதம்கற்பிக்கும் இந்த நவீன பாடத்திட்டத்தில் இடம்பெறுகின்றன.

இந்த புதிய முறை சிறார்களுக்கு கணிதத்தில் பெரும் ஆவலைத்தூண்டி அவர்களின் கணித அறிவை விருத்தியடையச்செய்ய பெரிதும் உதவுகிறது.

## கணக்குத் தந்த வால்!

ராஜு குறும்புக்காரன். ஆனால் அவனது குறும்பு சிலவேளைகளில்படிப்புக்கும் அப்பால் ஒருபடி முன்னேறிவிடும். அவன் சென்ற வருடம் எங்களோடு கல்வி கற்றுக்கொண்டிருந்தான்.

ஒருநாள் கணக்கு ஆசிரியர் வகுப்புக்குள்ளே நுழைந்தார். ராஜுவுக்குக் கணக்கென்றால் சுத்த சூனியம். இதனால் கணித ஆசிரியரும் ராஜுவை ஒரு கணித நிபுணராக்கவிரும்பினார். அதனாலே அவனுடைய குறும்புகளையும் ஏற்றுக் கொள்ளச் சித்தமானார். இதனாலே எங்களுக்கும் ராஜுவின் குறும்பு நாளாந்தம் ஆனந்தத்தை அளித்து வந்தது.

கணக்கு ஆசிரியர் கணக்கொன்றை விளக்குவதற்காக கரும்பலகையைஅணுகினார். அவருடைய முன்வாய்ப் பற்கள் இரண்டைப் பறிகொடுத்திருந்தார் ஆசிரியர். இதைக்கண்ட ராஜு 'என்னசார் உங்களுடைய முன்வாய்ப் பற்கள் இரண்டைக் காணவில்லையே? யாரிடம் உதைவாங்கினீர்கள்' என்று குறும்புத்தனமான கேள்வி ஒன்றைப் போட்டான். இவனுடைய குறும்புக் கேள்விஅவ்வகுப்பு மாணவர்களைக் 'கொல' எனச் சிரிக்கத் தூண்டிவிட்டது.

பின்பு, ஒரு புது முறையான கணக்கொன்றை எங்களுக்கு ஆசிரியர் விளக்கிக்கொண்டிருந்தார். ராஜு இதனைக் கவனிக்காது மேலே பார்த்தவாறு எதையோ உற்று நோக்கிக்கொண்டிருந்தான். இதைக்கவனித்த ஆசிரியர் ராஜுவைப் பார்த்து 'என்னத்தடா பார்த்துக்கொண்டிருக்கே, கணக்கு முழுவதும் புகுந்துவிட்டதா' என்று கேட்டார். இதைக் கேட்ட ராஜுவின் முகத்தில் மகிழ்ச்சி இழையோடியது, 'ஓ அதுவா சேர். எல்லாம் புகுந்துவிட்டது. இன்னும் எலியினுடைய வால்மட்டும்தான் புகவில்லை' என்று மகிழ்ச்சி பொங்க விடை கொடுத்தான். இதைக் கேட்ட எங்களுக்கோ சிரிப்பு எல்லையை மீறிவிட்டது. மேசையில் உருண்டு உருண்டு சிரித்தோம். இத்விடையில் ஆசிரியருக்கும் தனது சிரிப்பை அடக்கமுடியாத நிலையில் இடைவிடாது சிரித்துக்கொண்டிருந்தார். அன்று முழுவதும் பாடசாலையில் சிரிப்பு மயந்தான். அன்றுமுதல் அவனுடைய பெயரும் கணக்குத் தந்த வாலாகமாறிவிட்டது. இதை நினைக்கும்போது இன்றும் சிரிப்பு என்னை அறியாமலே வெளிவருகிறது!

—செட்டிநகர்,
மதியரசு.

## 'ஓடிப் போனவன்'

நவசோதி

எழுதும்

புதிய தொடர் கதை

யூலை 16ம் திகதி இதழில் ஆரம்பமாகிறது.

## விடுகதைகள்

1. மழைக்கும் தோழன்
வெயிலுக்கும் தோழன்
அது என்ன?

2. ஆடலரசினயக் கண்டு
அடிக்க கை ஓங்கும்
அவள் யார்?

3. வயிற்றில் பிறக்காமல்
வாயில் பிறந்தான்
அது என்ன?

4. உடலில்லா பெண்
இல்லாவிட்டால்
உலகத்தில் ஒருவரும்
இல்லை
அது என்ன?

5. கல்லு மனதுஉள்ள பெண்
கண்ணீர் பட்டாள்
கணநேரத்தில்
மறைந்தாள்
அவள் யார்?


6. அவனை நறுக்கினால்
இவன் அழுகிறான்
அவன் யார்?

விடைகளைக் கண்டுபிடிக்க முயலுங்கள் முடியாவிட்டால் விடைகளை அடுத்த வாரம் பாருங்கள்.

## வயிற்றுவலி தந்த பதவி

1940-ம் ஆண்டு யுத்த காலத்தில், வின்ஸ்டன் சாச்சில் பிரிட்டிஷ் பிரதம மந்திரி ஆனதற்கு ஒரு வயிற்றுவலியே காரணம்!

இரண்டாவது உலக யுத்தம் ஆரம்பித்து ஒருவருஷம் இருக்கும். பிரிட்டனுக்குத் தோல்வி மேல் தோல்வி: காரணம் ஹிட்லர் சண்டை போட மாட்டார் என்று பிரிட்டிஷ் பிரதம மந்திரி சேம்பர்லேன் நம்பி ஏமாந்து போனதுதான். சேம்பர்லேனை நீக்கிப் புதிய பிரதமரைத் தேர்ந்தெடுக்க வேண்டும் என்ற உணர்ச்சிபலமாக இருந்தது. அவருக்குபதிலாக ஹாலிஃபாக்ஸ் பிரபுவைப் பிரதமர் ஆக்க முயற்சி நடந்தது. ஹாலிஃபாக்ஸ் சாது, நல்லவர், நிதானமானவர். முன்னர் இர்வின் பிரபுவாக இருந்து, இந்தியாவில் வைஸ்ராய் பதவி வகித்து, காந்தி இர்வின் ஒப்பந்தம் செய்தவர். ஆனால் சேம்பர்லேனுடைய அந்நிய மந்திரியாக இருந்து ஹிட்லரை நம்பியவர் என்று அவர்மீதும் சற்று அதிருப்தி இருந்தது. எது எப்படியானாலும் இர்வின் பிரபுவுக்குப் பிரதமர் பதவியில் துளியும் ஆசையில்லை. ஆசை இல்லாதது மட்டுமல்ல. அப்பதவியை நினைத்தாலே அவருக்கு வயிற்றைச் சங்கடப்படுத்தியது. அதனால், கடுமையான வயிற்றுவலி அவரைப் பீடித்தது. அதன் பலனாக சேம்பர்லேனுடைய கட்சியிலே தீவிரவாதியான வின்ஸ்டன் சர்ச்சிலைப் புதிய பிரதம மந்திரியாகத் தேர்ந்தெடுத்தார்கள். ஹாலிஃபாக்ஸுக்கு வயிற்றுவலி, சர்ச்சிலுக்குப் பதவியாக முடிந்தது!



பிரிட்டிஷ் மாணவர்கள் சிறு பராயத்திலிருந்தே விஞ்ஞான வைத்திய துறைகளில் அதிக அக்கறைகாட்டி வருகிறார்கள். வைத்தியசாலைகளுக்கு பயன்படுத்தப்படும் விஞ்ஞான உபகரணங்களை செய்வதில் பாடசாலைகளில் அவர்களுக்கு ஊக்கமளிக்கப்பட்டு வருகிறது. இதோ இந்தப் படத்தில் பிரிட்டிஷ் பாடசாலை ஒன்றின் மாணவர்கள் இருவர் சிறுநீரக நோய்களுக்கு பயன்படுத்தப்படும் இயந்திர கருவிகள் செய்யும் முறையை ஆசிரியரிடமிருந்து கற்றுக்கொள்கிறார்கள்.




எஸ். ஆனந்த சுப்பிரமணியம்,
நீர்கொழும்பு.

கே: ஆசிரியை, ஆசிரியரை மணம்செய்துகொள்ள விரும்புவதேன்?

ப: தொழிலின் ஒற்றுமை குடும்பத்தில் ஒற்றுமையை ஏற்படுத்துமென்பதற்காக!

°°

சி. சின்னத்துரை,
நல்லூர்.

கே: தனிப்பெருந் தலைவர் தமிழ்ப் பல்கலைக்கழகத்திற்கு மாறில்லையாமே? அப்படியாயின் ஏன் எதிர்த்துப் பிரசாரம் செய்கிறார்?

ப: அவரது பிரசாரம் சூடு தணிந்துவிட்டது. அது இப்பொழுது அபசுவரமாக ஒலிக்கிறது.

°°

க. பார்த்தசாரதிராஜா,
தாவடி.

கே: வடக்கு-கிழக்கு மாகாணங்களில் ஓடும் பஸ்களில் ஒட்டப்பட்டிருக்கும் அரசாங்க விளம்பரங்கள் யாவும் சிங்களத்திலும் ஆங்கிலத்திலும் இருக்கின்றன. தமிழில் இல்லாதது ஏன்?

ப: பெருங்காய டப்பாவிலிருந்து பெருங்காயத்தை அகற்றிய பிறகும் டப்பாவில் பெருங்காய வாடை போகாதல்லவா? அடுத்து அந்த வாடையையும் அகற்றவேண்டியிருக்கிறது.

°°

'நாரனூர் லிங்கன்',
நாரந்தனை தெற்கு.

கே: கேள்விகள் வராத பத்திரிகைகள்தான் பரிசு கொடுத்து கேள்விகளை வரவழைப்பதாக கேள்விப்பட்டிருக்கிறோம். நீங்கள் எதற்காக பரிசு கொடுக்கிறீர்கள்?

ப: என்னிடம் வந்து குவியும் கேள்விகளில் 95% தகுதியற்றவை. சிலர் குயுக்தியாரிடம் ஏதோ ஒரு கேள்வியைக் கேட்டாலே போதுமென்று எண்ணுகிறார்கள். இந்த நிலையைமாற்றி சிறந்த கேள்விகளைக் கேட்பதற்காகச் சிந்தனையைத் தூண்டுவதே இப்பரிசுத் திட்டத்தின் நோக்கம்.

● கே: தமிழரசு மாநாட்டில் பிரதமர் கலந்துகொண்டது பற்றி த. காங்கிரஸ் கட்சியினர் என்ன நினைத்திருப்பார்கள்?

ப: உடனே தாங்களும் ஒரு போட்டி மாநாட்டை நடத்தி ஏட்டிக்குப் போட்டியாகப் பிரதமரையும் அம் மாநாட்டுக்கு அழைக்க வேண்டுமென்று நினைத்திருப்பார்கள்.

°°

எஸ். செல்வராணி,
ஏருஜூர்.

கே: ஒரு பெண்ணுக்கு வாழ்க்கைச் சிறப்பாக அமைய தேவையானது எவைகள்?

ப: இக்காலத்தில் தேவை அழகும உடற்கட்டும்தான். அவை பணத்தையும் இதர வசதிகளையும்சப்ளை செய்யும்.

கே: கொலை, கொள்ளை போன்ற விஷயங்களை முதல் பக்கத்தில் கொட்டை எழுத்தில் வெளியிடும் தினசரி பத்திரிகைகளைப் பற்றி என்ன நினைக்கின்றீர்கள்?

ப: மக்களிடை காணப்படும் கீழ்த்தர உணர்ச்சிகளைப் பயன்படுத்தி பணம் திரட்டும் கீழ்த்தர முயற்சி இது. இதனால் சமுதாயத்தில் குற்றங்கள் அதிகரிக்கும்.

°°

'குமாரச்செல்வன்',
ஏழாலை மேற்கு.

கே: விசேட பஞ்சப்படிக்கு 17.50 சதம் தருமாறு கோரி மலையகத் தொழிலாளர் செய்யும் வேலை நிறுத்தத்திற்குத் தொண்டமான் காங்கிரஸ் ஏன் ஆதரவு நல்கவில்லை?

ப: அந்த வேலை நிறுத்தம் தொண்டமான் காங்கிரசின் தலைமைக்கு விடுக்கப்பட்ட ஒரு சவாலாக இருப்பதால்.

°°

கு. ஆ. நா தம்பிராசா,
வியாபாரிமூலை.

கே: இலங்கை தமிழரசுக்கட்சியின் 10-வது தேசிய மாநாட்டுக்கு எங்கள் பிரதமர் கலந்து கொண்டதால் தமிழ்பேசும் மக்களுக்கு விடிவுகாலம் பிறக்குமா?

ப: அவர் கலந்துகொண்டதால் சிங்களவர்-தமிழர் உறவு வலுவடைந்துள்ளது உரிமைகள் கிடைப்பதற்கு இது உத்தரவாதமாகும். தமிழ்பேசும் மக்களின் உரிமைகளை வழங்குவதற்குத் தேசிய அரசாங்கம் இணங்கியிருப்பதால், பிரதமர் மாநாட்டில் கலந்துகொள்ளாவிட்டாலும்கூட உரிமைகள் கிடைப்பது நிச்சயமே.

கே: இராஜாங்க அமைச்சர் திரு. ஜே. ஆர். அவர்கள் மாநாட்டில் கலந்துகொள்ளாமல் விட்டதையிட்டு உங்கள்அபிப்பிராயம் என்ன?

ப: நாட்டின் பிரதமர் தனியே மாநாட்டில் கலந்து கொள்வதால் தனதுவிஜயம் அத்தியாவசியமானதல்ல என்று அவர் கருதியிருக்கலாம்.

°°

தாமரை மணாளன்,
கொழும்பு-6.

கே: கற்புக்கரசி கண்ணகியின் பெயரால் பாலுணர்ச்சி ஊட்டும் சினிமாப்படங்களையும், சினிமாச் செய்திகளையும் விநியோகிப்பவர்கள் பற்றி என்ன நினைக்கிறீர்கள் குயுக்தியாரே?

ப: இது கண்ணகியின் பெயருக்கு இழுக்கு. தயவு செய்து புனைப்பெயரை மாற்றிக் கொள்க!

°°

அ. குமரகுரு,
கல்முனை.

கே: இலங்கை வானொலி பற்றி சில வார்த்தை கூறுங்கள் பார்க்கலாம்?

ப: தமிழரசு மாநாட்டிற் கலந்துகொள்வதற்காகப்பிரதமர் கிழ்மாகாணத்துக்கு விஜயம் செய்த செய்தியைத் 'தமிழரசு' என்ற பெயரை உச்சரிக்காமல் கோழைத்தனமாக ஒலிபரப்பி வந்த இந்த வானொலி மாநாட்டின் இறுதிநாளன்று 'தமிழரசுக் கட்சி', 'செல்வநாயகம்' என்ற சொற்களையும் உதிர்க்கவேண்டிய நிர்ப்பந்தத்துக்காளாயிற்று. இந்த வானொலியை ஏதோ ஒரு பிசாசு பிடித்தாட்டுகிறதுபோலும்!

°°

கே. எஸ். இராசநாயகம்,
கொழும்பு-6.

கே: திரு. ஜீ. ஜீ. யின் இந்துக் கலாச்சாரப் பல்கலைக்கழகம் கிடைக்குமானல் தமிழ்பேசும் கிறீஸ்தவ, இஸ்லாமிய, மற்றும் மதங்களைப் பின்பற்றும் மக்களின் நிலை என்ன?

ப: ஆளுக்கொரு பல்கலைக் கழகம் கேட்கவேண்டியது தான். கேட்பதிலுமா 'கஞ்சத்தனம்'?

°°

க. பரமநாதன்,
வெள்ளவத்தை.

கே: தமிழரசார் ஆண்டு தோறும் மாநாடு நடத்தி தமது செயல்முறையை விளக்குவது போன்று தமிழ் காங்கிரசாரும் மாநாடு நடத்தினாலென்ன?

ப: அது ஆண்டுதோறும் உயிர்வாழ்ந்தால் நடத்தலாம்.

கே: என் மனைவி மாலா மணிபுரிச் சேலை வாங்கித் தரும்படி ஒற்றைக்காலில் நிற்கிறாள். நீங்கள் எனக்கு உதவி செய்வீர்களா?

ப: வீட்டில் ஒற்றைக் காலில் நிற்பதில் பயனில்லை, புறக்கோட்டையில் 10000 பேர் பங்குபற்றும் 3 மைல் நீளமுள்ள கியூவரிசையில் ஒற்றைக்காலில்நிற்கச்சொல்லுங்கள். அப்படி நின்று போலிஸ் தடியடிகளும் தப்பி, மயங்கி விழாமலும் இருந்தால் ஒரு மா ம. சேலை கிடைக்கலாம். கியூவரிசைக்குப் போகமுன்பு எதற்கும் தனது ஜாதகத்தை ஒரு முறை பார்த்துக்கொள்ளச் சொல்லுங்கள் அதிர்ஷ்டம் இருக்கிறதாவென்று.

கே: உத்தியோக நியமனம் பெற்று மாதம் பலவாகுமுன் கலியாணத்திலேயே தங்கள் சிந்தனையைச் செலுத்தும் வாலிபர்களுக்கு நீங்கள் கூறும் புத்திமதி என்ன?

> திருவாளர்
> குயுக்தியார்
> மே/பா சுதந்திரன்
> த. பெ. இல. 1188
> கொழும்பு-12.
>
> இம் முகவரியைக் கத்தரித்து தபால் அட்டையில் ஒட்டியனுப்பப்படும் வினுக்கள் மட்டுமே கவனத்திற்கு எடுக்கப்படும்.

ப: உத்தியோகத்துக்கு முழுக்கு போட்டுவிட்டு வியாபாரத்திலோ, கைத்தொழிலோ, விவசாயத்திலோ ஈடுபடுங்கள் என்பதுதான் எனது புத்திமதி.

°°

செல்வி. ராகினி சச்சிதானந்தம்,
கொழும்பு-12.

கே: தேர்தலுக்கு முன்னும் பின்னும் வட்டமேசை மாநாடு வேண்டி பிரச்சாரம் செய்த திரு. பொன்னம்பலம், தனது வட்டமேசை மாநாட்டை நடத்த முயற்சிப்பாரா?

ப: முயற்சி செய்தாலும் பயனில்லை. தேசிய அரசாங்கம் தமிழ்பேசும் மக்களுக்கு உரிமைகளை வழங்கி வருவதால் அவரது வட்டமேசை ஏற்கனவே சுக்கு நூறாக உடைந்துவிட்டது.

கே: தேசிய அரசாங்கத்தைப் பொன்னம்பலக் கட்சி நிபந்தனையின்றி ஆதரிப்பதனால் அக்கட்சியின் இன்றைய அரசியல்நிலை என்ன?

ப: எதையும் தட்டிக் கேட்க முடியாத 'அனுதை நிலைதான்" அதன் அரசியல் நிலை.

°°

வே. க. தங்கவேலு,
காங்கேசன்துறை.

கே: எதிர்க்கட்சியினரால் தேசிய அரசாங்கத்திற்கு நெருக்கடி கொடுக்கவேண்டும் என்ற காரணத்தால் நடாத்தப்படும் வேலைநிறுத்தத்தில் அரசாங்கத்தை ஆதரிக்கும் தமிழரசுக் கட்சியின் ஆதரவில் உள்ள தொழிலாளர் கழகம் வேலை நிறுத்தம் செய்ய உத்தேசிப்பது தற்போதைய நிலையில் உகந்ததல்ல.

ப: உகந்ததல்ல என்பதானுல் இ தொ. கழகம் வேலை நிறுத்தத்தை வாபஸ்வாங்கிக்கொண்டது.

கே: கல்முனை மாநாட்டில் தோட்டத் தொழிலாளரின் பஞ்சப்படி விசயமாக ஒரு தீர்மானமும் காண்டுவரவல்லையேன்?

ப: இது தொழிற்சங்க மாநாடொன்றில் கொண்டுவரப்படவேண்டிய ஒரு தீர்மானமல்லவா?

°°

வி. சடகோபன்,
கண்டி.

கே: என் நண்பனை விட்டுப் பிரிந்திருக்கும அவன் மனைவி வசதியுடன் வாழ்வதற்குப் போதிய பணமும் சொத்தும் உள்ளவள். அப்படியிருந்தும் ஜீவனாம்சம் கேட்டு கணவன்மீது வழக்குத்தொடர்ந்திருக்கிறாளே ஏன்?

ப: இன்னொருத்தியுடன் குடும்பம் நடத்துவதற்குப் போதிய பணம் அவனிடம் விட்டுவைக்க கூடாது என்பதற்காக...

°°

ஜனக குமாரி சரவணமுத்து,
கண்டி.

கே: அதிகம் பேசுவது ஆணு? பெண்ணு?

ப: பெண்தான்! ஆண் எதைப் பேசினாலும் வாயாலல்லவா பேசவேண்டியிருக்கிறது? அதைப்போல பததுமடங்கு பெண் கண்ணால் பேசிவிடுகிறாளே!

°°

இ. செல்லப்பா,
புன்னாலைக்கட்டுவன்.

கே: நான் காலை மூன்று மணிக்கு எழுந்து படித்துக் கொண்டு இருக்கும்போது தூங்கி விடுகிறேன் அப்படி தூங்காமல் படிப்பதற்குஎன்ன செய்யவேண்டும்.

ப: நீங்கள் அதிர்ஷ்டசாலி. உங்களுக்குப் படிப்பு தூங்குவதற்குப் பயன்படுகிறது. தூக்கம்வரும்போதெல்லாம் தூங்குங்கள் தூக்கமில்லாத போதெல்லாம் படியுங்கள். படிக்கும்போது தூங்காதிருக்கவும் தூங்கித் தூங்கிப் படிக்காதிருக்கவும் இதுதான்வழி.

°°

கு. ஆ. நா. தம்பிராசா,
வியாபாரிமூலை.

கே: எனது நண்பர் ஒருவர் வட-கிழக்கு மாகாணங்களுக்கு சமஷ்டி எப்போது கிடைக்குமென்று கிண்டல் செய்கிறாரே?

ப: கிண்டல் செய்து கொண்டிருந்தால் எப்போதுமே கிடைக்காது. அதற்காகப் பாடுபட்டாற்தான் அதனைப் பெற முடியும்.

°°

பொ. சபாபதிப்பிள்ளை,
பருத்தித்துறை.

கே: பேச்சுக்கு இனிமையாகவும், கேட்பதற்குக் கவர்ச்சியாகவும் காட்சி அளித்து, அனுபவத்திலும் நடைமுறையிலும் நித்திய கண்டம் பூரணயுள் என்ற தன்மையாக விளங்குவதே ஜனநாயக ஆட்சிமுறை என்கிறார் ஒருவர். இதைப்பற்றி உங்கள் அபிப்பிராயம்?

ப: 'ஜனநாயகம்' என்பதற்கு யார் எந்த விளக்கத்தைக் கொடுத்தாலும் ஆட்சேபிப்பவர் யாருமில்லை. உங்களின் விளக்கமே விளங்கவில்லை. விளங்காத விளக்கமே ஜனநாயகம் என்று நீங்கள் கூறினாலும் அதுவும் விளங்காது.

● இந்த அடையாளத்தை யுடைய கேள்வி கேட்ட வாசகர் மூன்று ரூபா பரிசு பெறுகிறார்.



# இலங்கைத் தமிழரசுக் கட்சி

## முதல் நாள்

திருக்கோயிலில் இருந்து வந்த நீண்ட ஈருருளி ஊர்வலத்தைப் பாத்திமா கல்லூரி முன்றலில் வைத்து வரவேற்றதுடன் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பத்தாவது தேசிய மாநாடு ஆரம்பமாகியது. கட்சித் தலைவர் டாக்டர் நாகநாதன் கட்சியின் மூவர்ணக் கொடியைப் பறக்க விட்டார். திருமதி மங்கையற்கரசி அமிர்தலிங்கம் அவர்களின் தமிழ்த்தாய் வணக்கப் பாடலை அடுத்து முழக்கம் முருகப்பா தமிழரசுத் தந்தை அவர்களை வாழ்த்திப் பாடினார்கள்.

இச்சடங்குகள் நடைபெற்றுக்கொண்டிருக்கையில் மேடையில் நடுநாயகமாக தமிழரசுத் தந்தை நின்று கொண்டிருந்தார். அவரின் வலதுபுறத்தில் பொதுச் செயலாளர் திரு. அமிர்தலிங்கமும் இடப்புறத்தில் தலைவர் திரு. இ. மு. வி, நாகநாதனும் நின்று கொண்டிருந்தார்கள். மேடையில் தமிழரசுக் கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர்களும், மூதவை உறுப்பினர்களும் நின்று கொண்டிருந்தார்கள். இதைத் தொடர்ந்து வரவேற்புக் குழுத் தலைவர் ஜனாப் மசூர் மௌலானா அனைவரையும் வரவேற்றுப் பேசினார்.

வரவேற்புரையைத் தொடர்ந்து கட்சியின் நடப்பு வருடத் தலைவராகத் தெரிவுசெய்யப்பட்டிருக்கும் டாக்டர் நாகநாதன் அவர்கள் தமது தலைமையுரையை (7-ம் பக்கம்) நிகழ்த்தினார்கள். டாக்டர் அவர்கள் சிறிது நேரம் பேசிய பின்னர் உடல் நலம் குன்றியிருப்பதால் தமது உரையைப் பொதுச்செயலாளர் திரு. அ. அமிர்தலிங்கம் அவர்கள் தொடர்ந்து படிப்பார் என்று கூறியதும் மிகுதி உரையைத் திரு. அமிர்தலிங்கம் வாசித்தார்.

### தொழிலாளர் மாநாடு

தலைமைப் பேருரையின் பின்னர் தியாகங்கள் அரங்கில் இ. தொ. கழகத் துணைத்தலைவர்களில் ஒருவரான திரு. பி. சாமன் அவர்கள் தலைமையில் தொழிலாளர் மாநாடு ஆரம்பமாகியது. திரு. சாமன் தமது தலைமையுரையில் தமிழரசுக் கட்சி மலைநாட்டு மக்களை நல்வழியில் நடாத்திச்செல்லும் என்ற நம்பிக்கை மலையக மக்களுக்கு உண்டு. எந்தப் போராட்டத்தையும் நடாத்த நாம் தயாராக இருக்கிறோம். எமக்குத் தமிழ் மொழி வேண்டும். தமிழ் மொழி மூலம் கல்வி வேண்டும். பிரசாஉரிமை வேண்டும். இதற்காகத் தியாகம் வேண்டுமென்றால் அதற்கும் நாம் தயாராக இருக்கிறோம்'' என்றார்.

திரு. க. துரைரத்தினம் பா.உ. பேசுகையில்''நமது' மொழிவழி பிரிந்தால் வாழ்வோம் அன்றேல் வீழ்வோம் என்ற தத்துவம் ஏதோ அத்திவாரம் அற்ற ஒன்றல்ல. நிலைமையை யதார்த்த பூர்வமாக நோக்கிய பின்னரே இந்தக் கோட்பாட்டை தமிழ் தொழிலாளர் முன் வைத்தோம். நமது கணிப்பு தவறானது அல்ல என்பது இப்பொழுது தெளிவாகி விட்டது' என்றார்.

ஜனாப் வை. எம். ரசாக், உதுமா லெப்பை ஆகியோரும் இம்மாநாட்டில் உரை நிகழ்த்தினார்கள். காலை 11-00மணிக்கு ஆரம்பித்த தொழிலாளர் மாநாடு நண்பகல் இடைவேளைக்குப் பின்னரும் தொடர்ந்து நடைபெற்றது.

தொழிலாளர் மாநாட்டிற்கு இடையில் குரும்பசிட்டி இரா. கனகரத்தினம் தம்பதிகளால் முப்பதாண்டுகளாக பத்திரிகைகளிலிருந்து தொகுக்கப்பட்ட தமிழர் வரலாறு பற்றிய பத்திரிகைக் கண்காட்சியை தமிழரசுத் தந்தை அவர்கள் திறந்து வைத்தார்கள்.

### இலக்கிய மாநாடு

தொழிலாளர் மாநாட்டை அடுத்து உமறுப் புலவர் அரங்கில் மட்டுநகர் முதல் பிரதிநிதி நாவலர் திரு. செ. இராசதுரை தலைமையில் இலக்கிய மாநாடு ஆரம்பமாகியது. திரு. இராசதுரை தமது உரையில் இலக்கிய மாநாட்டை அரசியல் மாநாட்டுடன் இணைப்பதற்குக் காரணம் ஒரு இனத்தினுடைய வாழ்க்கை முறையை அறியச் செய்வது இலக்கியமாக இருப்பதே என்றார்.

கவிஞர்கள் நீலாவணன், காசி. ஆனந்தன், திரு. கந்தசாமி, பண்டிதர் கா. பொ. இரத்தினம் பா. உ. ஆகியோரும் உரை நிகழ்த்தினார்கள்.

### மாதர் மாநாடு


இலக்கிய மாநாட்டை அடுத்து திருமதி மங்கை (5-ம் பக்கம் பார்க்க)











படம்-1

மாநாட்டுக்கு வரும் பிரதிநிதிகளை பதிவுசெய்து அவர்களுக்குத் தக்க வசதிகள் செய்துகொடுக்கும் தொண்டர்களின் அலுவலகத்தில் தமிழரசுத் தலைவர்களுடன் மாவட்ட இணைச் செயலாளர்களில் ஒருவரான திரு. செல்லையா காணப்படுகிறார்.

படம்-2

மாநாட்டில் கொடியேற்று விழா நடந்துமுடிந்ததும் எடுக்கப்பட்ட படம் இது. தமிழரசுத்தந்தையின் படம் ஒன்று தமிழரசுத் தந்தைக்கு அன்பளிப்பு செய்யப்பட்டது. கையில் அன்பளிப்புடன் தந்தை இங்கு காணப்படுகிறார்.

படம்-3

மாநாட்டு துவக்க நாளன்று திருமதி மங்கயர்க்கரசி அமிர்தலிங்கம் தமிழரசுத் தேசிய கீதம் பாடுகிறார்.

படம்-4

தொழிலாளர் மாநாட்டுக்கு தலைமை தாங்கிய திரு. வை. பி. சாமன் தனது உரையை நிகழ்த்துகிறார்.

படம்-5

இலக்கிய மாநாட்டில் திரண்டிருந்த மக்கள் கூட்டத்தின் ஒரு பகுதியை இங்கே காணலாம்.

சிறந்தது! சிக்கனமானது! சிந்தனையூட்டுவது!




காரம், மணம், குணம் நிறைந்த யானை பீடி ஸ்பெஷல் புகைப்போருக்கு புத்துணர்ச்சியையும், உற்சாகத்தையும் கொடுக்கவல்லது. தொழிலாளிகளும், திறமைசாலிகளும் தங்கள் ஊதியத்திற்கேற்ப, சிறந்த புகை பிடிக்க யானை பீடியையே புகைக்கிறார்கள். பூரண திருப்திக்கு யானை பீடி ஸ்பெஷலே புகையுங்கள்.

யானை பீடி ஸ்பெஷல்

தயாரிப்பாளர்களும், விநியோகஸ்தர்களும்:

யானை பீடி கம்பெனி,

62, மெசெஞ்சர் வீதி, கொழும்பு-12.

தொலைபேசி 1 7651

# பத்தாவது தேசிய மாநாடு

## இரண்டாம் நாள்

தமிழரசுக் கட்சியின் 10-வது தேசிய மாநாட்டின், இரண்டாம் நாள் காலை நிகழ்ச்சியான அரசியல் மாநாடு 25ந் திகதி காலை 10.30மணிக்கு பாத்திமா கல்லூரி வன்னியசிங்கம் அரங்கில் ஆரம்பமாகியது. மாநாட்டின் இறுதி நாளாகிய அன்று முதல்நாளைக் காட்டிலும் அதிகமான தமிழ்பேசும் மக்கள் பல்லாயிரக்கணக்கில் திரண்டு உள்ளத்தால் ஒருவராகவும் உடலினில் பலராகவும் காட்சியளித்தனர். மாநாட்டுக்குதிரண்டு வந்திருந்த மக்களிடையே புதிய உணர்ச்சியும், தெம்பும் காணப்பட்டன.

அரசியல் மாநாட்டுக்கு டாக்டர் இ. மு. வி. நாகநாதன் தலைமை தாங்கினர். மாநாட்டில் 600க்கு மேற்பட்ட பிரதிநிதிகள் பங்குபற்றினர்கள் கட்சியின் சென்ற ஆண்டுப் பொதுச் செயலாளர் திரு. அ. அமிர்தலிங்கம் தனது அறிக்கையைச் சமர்ப்பித்தார். திரு. அமிர்தலிங்கம் தனது அறிக்கையைசமர்ப்பித்ததைத் தொடர்ந்து அடுத்த நிகழ்ச்சியை அறிவித்த டாக்டர், தனது குறிப்பில், 'தம்பி அமிர்தலிங்கம், தனது உழைப்பையும், நேரத்தையும் கட்சிக்கே செலவழித்து, தமிழரசுக்காகவே தன் வாழ்வை கொடுத்துக்கொண்டிருக்கிறார்' என்று குரல்கம்ம எடுத்துக் கூறினர்.

### தீர்மானங்கள்

பின்னர், தீர்மானங்கள் பல முன் மொழியப்பட்டன. முன்மொழியப்பட்ட தீர்மானங்களில் 7 தீர்மானங்களை மாநாடு ஏற்றுக் கொண்டது. இத்தீர்மானங்களை பண்டிதர் கா. பொ. இரத்தினம், திரு. சி. கதிரவேலுப்பிள்ளை, திரு. வீ. ஏ. அழகக்கோன், ஜனுப் மசூர் மவுலானு, ஜனுப் எம். எஸ். காதர், வி. என். நவரத்தினம், வி. நவரத்தினம், எஸ். முத்துலிங்கம் ஆகியோர் முறையே முன்மொழிந்து வழிமொழிந்தனர். தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டதும், உள்ளூராட்சி அமைச்சர் கனம் மு. திருச்செல்வம் எழுந்து இத் தீர்மானங்களை தான் அரசரங்கத்தின் கவனத்துக்கு கொண்டுவருவதாக கூறினர். பின்னர் கட்சியின் புதிய ஆண்டுக்குரிய பதவியாளர்கள் தெரிவு செய்யப்பட்டனர். அத்துடன் அரசியல் மாநாடு முடிவுற்றது.

### ஊர்வலம்

அன்று பிற்பகல் 3.00 மணிக்கு நீலாவணை சந்தியிலிருந்து மிகப்பெரிய ஊர்வலமொன்று ஆரம்பமாகியது. ஊர்வலத்தில் ஆயிரக்கணக்கான ஆண்களும்பெண்களும், சிறுவர்களும் சிறுமியர்களும் கலந்துகொண்டனர். கைகளிலே மூவர்ணக் கொடிகளையும், இதயத்திலே தமிழுணர்ச்சியையும் வாயிலே வாழ்த்துக்களோ கங்களையும் தாங்கிக் கொண்டு கடமை, கண்ணியம் கட்டுப்பாடு என்ற வழிமுறையே வீரநடைபோட்டு வந்த அந்த ஊர்வலத்துக்கு தளபதி திரு. அ. அமிர்தலிங்கம், டாக்டர். இ. மு. வி. நாகநாதன், ஜனுப் மசூர் மவுலானு ஆகியோர் தலைமைதாங்கி வழி நடத்திச் சென்றனர். கல்முனை நகரின் பல வீதிகள் வழியாகவும் ஊர்வலம் சென்றபோது மக்கள் ஆங்காங்கு திரண்டு நின்றுதலைவர்களுக்கு வாழ்த்திவைத்தும், மாலைகள் அணிவித்தும், பூரணகும்பம்வைத்து வரவேற்பளித்தும் ஆரத்தியெடுத்தும் பூரிப்புடன்வரவேற்பளித்த காட்சி என்றுமே மறக்கமுடியாத நிகழ்ச்சியாகும். இந்தஊர்வலம் கூட்டம் நடைபெறும் கல்முனைக் கடற்கரையை 6.00 மணியளவில் வந்தடைந்தது. ஏற்கெனவே கல்முனைக் கடற்கரையில் திரண்டிருந்த மக்களுடன், ஊர்வலத்தில் வந்த மக்களும் சேர்ந்தவுடன், கூடியிருந்த மக்கள்தொகை ஏறத்தாழ ஒரு இலட்சம் என மதிப்பிடப்பட்டது.


### பிரதமர் வருகை

இதற்கிடையில் பி. ப. 4 மணிக்கு தமிழரசு மாநாட்டு விசேட விருந்தினராக மட்டக்களப்பு விமான நிலையத்தில் வந்திறங்கிய பிரதமர் திரு. டட்லி சேனநாயக்காவை தமிழரசுத் தந்தை திரு. சா. ஜே. வே. செல்வநாயகமும், மட்டக்களப்புப்பிரதிநிதி திரு. செ. இராசதுரையும் எதிர்கொண்டழைத்து, மலர்மாலையணிவித்தனர். இதன் பின்னர் சுமார் 400 கார்கள் பின்தொடர ஊர்வலமாக அழைத்துவந்தனர். இந்த ஊர்வலம், வலையிறவுசந்தி ஆசுப்பத்திரி சந்தி, மறியவீட்டு சந்தி ஆனைப்பந்தி சந்தி வழியாக கல்முனை மாநாட்டு அரங்குநோக்கி வந்தது. மட்டக்களப்பிலிருந்து கல்முனை மாநாட்டரங்குக்குவரும் வழியெல்லாம் தமிழ் பேசும் மக்கள் வீதிகளின் இருமருங்கிலும் திரண்டு நின்று, தமிழரசுத் தந்தைக்கும், பிரதமருக்கும் மலர் மாலை சூட்டி வரவேற்றனர். ஊர்வலம் பட்டிருப்புக்கு வந்த சமயம், பட்டிருப்புப் பா. உ. திரு. சி. மூ இராசமாணிக்கமும் பிரதமருடன் சேர்ந்து கொண்டார். வழிநெடுக 12 அலங்கார வரவேற்புப் பந்தல்கள் போடப்பட்டிருந்தன. தமிழரசுத் தந்தையும் பிரதமரும் கூட்டமைதானத்தை அடைந்த சமயம். திரு. அ. அமிர்தலிங்கம் பேசிக் கொண்டிருந்தார். பிரதமர் அந்தப் பிரமாண்டமான சனசமுத்திரனூடாக வந்து மேடையல் அமைதியாக ஏறினர். அலைகடலென திரண்டு நின்ற அந்த மக்கள் கூட்டம், ஆரவாரித்து எழுந்து கண்ணியமற்ற முறையில் நடக்காமல், தளபதியின் ஆணைப்படி கண்ணியம் காத்து கட்டுப்பாட்டுடன் விளங்கியது பிரதமருக்கே பேராச்சரியத்தை விளைவித்து மூக்கின் மேல்விரல் வைக்கச்செய்தது. இதைப் பிரதமரும் தமது பேச்சில் குறிப்பிட்டார்.

### பிரதமருக்கு வரவேற்பு

பிரதமரை வரவேற்று முதலில் டாக்டர் நாகநாதன் ஆங்கிலத்தில் வரவேற்புரை நிகழ்த்தினர். அதை ஜனுப் மசூர் மவுலானு தமிழில் மொழி பெயர்த்தார். அதைத் தொடர்ந்து தமிழரசுத் தந்தை பிரதமரை வரவேற்று தமிழில் உரையாற்றினர். தமிழரசுத் தந்தையின் தொனி அன்றையதினம் தெளிவாக இருந்ததுடன், அவரது பேச்சும் உறுதி நிறைந்த ஒன்ருக அமைந்திருந்தது. தந்தையின் பேச்சை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தார் தளபதி. அதன் பின்னர், வரவேற்புக் குழுத் தலைவர் ஜனுப் மசூர் மௌலானு பிரதமருக்கு மலர் மாலை சூட்டியதைத் தொடர்ந்து பிரதமர் உரையை ஆங்கிலத்தில் நிகழ்த்தினர். பிரதமரது உரையை திரு. அமிர்தலிங்கம் அழகாக தமிழில் மொழி பெயர்த்தார். பிரதமர் திரு. சேனநாயகா தமது முப்பதாண்டு கால அரசியல் வாழ்வில் கட்டுப்பாடும் கண்ணியத்தோடும் இப்படிக் காட்சியளித்த மக்கள் கூட்டத்தைக் காணவில்லையென்றும், தமிழரசு மேடையில் பேசிய அன்றைய தினம் தமது வாழ்வில் மறக்க முடியாதநிகழ்ச்சி என்றும் குறிப்பிட்டார்.

பிரதமரின் பேச்சைத் தொடர்ந்து மட்டக்களப்புப் பிரதிநிதி திரு. இராசதுரை உரையாற்றினர். பின்னர் திருமதி. மங்கையர்க்கரசியின் தேசியகீதத்துடன், தமிழரசுக் கட்சியின் 10 வது தேசிய மாநாடு நிறைவெய்தியது.



கல்முனைக் கடற்கரையில் நடைபெற்ற மாநாட்டுப் பொதுக் கூட்டத்தில் பிரதமர் திரு. டட்லி சேனநாயகா பேசுவதையும், திரு. அ. அமிர்தலிங்கம் அதைத் தமிழில் மொழிபெயர்ப்பதையும் படத்தில் காணலாம். மேடையில், தமிழரசுத் தந்தை, ஜனுப் மசூர் மௌலானு, டாக்டர் நாகநாதன், திரு. சி. மூ. இராசமாணிக்கம், அமைச்சர் கனம் திருச்செல்வம், திரு. வி. ஏ. அழகக்கோன், திரு. செ. இராசதுரை, திரு. ஜி. பி. வின்சன்ட், திரு. சி. கதிரவேற்பிள்ளை, திருமதி சி. எக்ஸ். மாட்டின் ஆகியோர் இருப்பதையும் காண்க.

## கல்முனை மாநாடு; 'இந்து' கருத்து

எட்டு வருட சச்சரவுகளுக்குப் பின் இலங்கையில் மீண்டும் பல்வேறுஇன மக்களுக்கிடையில் உருவாகி வரும் நட்புறவும் ஐக்கியமும் நிரந்தரமானதாக இருக்கும் என்பதற்கு தமிழரசுக் கட்சியின் கல்முனை மாநாடும் அம் மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றிய பிரதமர் திரு. டட்லி சேனநாயக்காவின் சொற்பொழிவும் அழகான எடுத்துக்காட்டுகளாக அமைந்துள்ளன என்று ஜூன் மாதம் 28-ம் திகதிய இதழில் சென்னை இந்து பத்திரிகை எழுதியுள்ள ஆசிரிய தலையங்கம் கூறுகிறது.

## இலங்கைத் தமிழ்....

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

யர்க்கரசி அமிர்தலிங்கம் தலைமையில் மாதர் மாநாடு நடைபெற்றது. திருமதி அமிர்தலிங்கம் பேசுகையில் கூறியதாவது: 'கட்சி எடுக்கும் எல்லாநடவடிக்கைகளிலும் பங்கு கொள்ள தாய்க்குலம்தயாராக இருக்கிறது. வருங்காலக் குழந்தைகள் தன் மானத்துடன் வாழவேண்டும் என்பதே எமது விருப்பம்' என்று கூறினர்.

### கலை விழா

மாதர் மாநாட்டை அடுத்து கவிஞர் நீலாவணன் தலைமையில் கவியரங்கம் ஒன்று நடைபெற்றது. 'உன்னைத் தொடர்கையிலே...' என்ற தலைப்பில் கவிஞர்கள் சடாட்சரன், எருவில் மூர்த்தி, காசி. ஆனந்தன், நுஃமான் பாண்டியூரன், மருதூர்க் கனி, இ. வா. ஜீவரட்ணம் ஆகியோர் கலந்துகொண்டனர்.

கவியரங்கத்தை அடுத்து விபுலானந்தர் அரங்கில் பட்டிருப்பு பா. உ. திரு. சி. மூ. இராசமாணிக்கம் தலைமையில் கலைநிகழ்ச்சிகள் நடைபெற்றன. வின்சன்ட் மகளிர் மாணவிகளின் வில்லுப்பாட்டும் நாட்டுக் கூத்தும் கலை நிகழ்ச்சிகளில் சிறப்பம்சமாக அமைந்திருந்தன. கலை நிகழ்ச்சிகள் விடியற் காலை ஒருமணிவரை நடைபெற்றன.


T. K. அமிர்தா ஜீரண சக்தி லேகியம்

மனிதருக்கு நோய்கள் அண்டாமலிருக்க தினசரி மலப் பிரவர்த்தி யாதொரு தடையின்றி வெளியாகி குடல் சுத்தம் ஏற்பட வேண்டும். அது இல்லாதிருக்குமானுல், அதுவே சகல நோய்களுக்கும் காரணமாகி விடுகிறது. மலம் சரியாக தினசரி வெளியாகாதிருந்தால் உண்டாகும் வாதம், மூலநோய்கள், அஜீரணம், வயிற்றுப் பொருமல், வலி, உஷ்ண ரோகங்கள், தாது நஷ்டம், சொறி சிரங்கு, முதலிய நோய்களுக்கு பலன் கொடுக்கும் சிறந்த மருந்து. பத்தியமின்றி உபயோகிக்கலாம்.

குறிப்பு: மூல இரத்தப்போக்கு, குடல்வாயு, இடுப்புவலி: இவைகளுக்கு ஒருதின உபயோகத்திலேயே குணம் செய்யும்.

அமிர்தா ஜீரண சக்தி லேகியம்

சிறிய புட்டி ஒன்றுக்கு ரூபா 3-00
பெரிய புட்டி ஒன்றுக்கு ரூபா 5-50
தபால் செலவு வேறு.

விபரங்களுக்கு:
செல்லராஜா அன்கோ
பாக்கியலெட்சுமி வைத்தியசாலை
170, செட்டியார் தெரு. கொழும்பு-11.

# சொர்க்கத்துக் குறம்

மருதமுனை அல்-மனூர் மகாவித்தியாலயத்தில் நடைபெறும் இஸ்லாமிய தமிழ் இலக்கிய விழாவை யொட்டி இச்சிறப்புக் கட்டுரை பிரசுரிக்கப்படுகிறது. இவ்விழா இன்று (2-7-66) காலை 9-00 மணிக்கு வித்தியாரத்தினம் எம் முகம்மது உவைஸ் தலைமையில் ஆரம்பமாகிறது. இந்து முஸ்லிம் பெரியார்கள் பலர் இவ்விழாவில் உரை நிகழ்த்துகிறார்கள். 'நமது இலக்கியப் பாதை' என்ற தலைப்பில் ஜனாப் எஸ். இஸட் எம். மசூர் மௌலானா அவர்களும் ஒரு சொற்பொழிவுநிகழ்த்துவார்.

## அல்லாஹ் எம். எம். இப்ருஹிம்

இஸ்லாமியத்தின் ஐம்பெரும் கிரியைகளான கலிமா, தொழுகை, ஸக்காத்து, நோன்பு, ஹஜ்ஜுக்களை விளக்குவதுடன் அவற்றை நடைமுறையில் எடுத்து நடக்கத்தவறுவதினால் ஏற்படுந் தீமைகளையும, மறுமை நாளில் அநுபவிக்க வேண்டிய துயரங்களை விளக்கிக் கூறுகிறான் குறமாது. தொழுகை திரும்பத்திரும்ப வற்புறுத்தப் படுகின்றது.

மேலும் இறைவனுடைய வல்லமைகளையும், தத்துவங்களையும், அவருடைய இயற்குணங்களையும் அறிவுறுத்தும் பாடல்கள் அநேகம் உள்ளன. இதைபற்றிய மறைவான அறிவுகளைப் புகட்டும் பாடல்களும், மெய்ஞான விளக்கந் தரும் கவிகளும் அநேகமாகவுள்ளன.

> நாலு வகையா லிறையை
> நயந்தறிய வேண்டும்
> நல்ல ஷரீ அத்து வழி
> நட படிகளறிந்தே
> மேலுந் தரீகத்து வழி
> விளப்பமதை யறிந்தே
> விள்ளு மதி னிலை யறிந்து
> யக வணங்க வேண்டும்.

என்னும் பாடலைத் தொடர்ந்து இறைபற்றிய தப்பபிப்பிராயங்களுக்குக் குறமாது குறிப்பிடும் பதில் நலல கருத்தோடமைந்துள்ளது.

> ஆதி நம்மிடத்தி லென்பார
> றிந்திடாரறிவில்லதா
> ரோதினோர் தாமுஞ்சொல்லா
> ருரை மென்றுற் கோபஞ்
> செய்வா
> ராதிதானுறைந்த வாசற
> யறிந்துதான் வணங்க
> வோர்க்கு
> வேதனையின்றிச் சொர்க்க
> மேன்பதி கிடைக்குந்தானே.

### குறமாதின் பாக்கியம்

பெருமானார் முன்னிலையில் சிறந்த தத்துவங்களையும், இஸ்லாமியக் கருத்துக்களையும் அள்ளி வீசிய குறமாது இறைதூதர் (ஸல்) அவர்களுடைய கேள்விக்கிணங்கத் தனது பூர்வீக வரலாற்றையும் தனக்குள்ள ஒரே ஆசையையும் விபரிக்கின்றாள்.

> ஏழையடியாளெண்ணம்
> நிறைவேற வின்பஞ்
> சூழ மணமாலை சூட்டுங்க
> ளென்றுரைத்தாள்.

நபிகட்டிலகம் (ஸல்) அவர்கள் இறைவனின் பெருவிருப்பமுமதுவாயிருந்தமையின் குறைமாதைத் தமது மனைவியருளொருவராக ஏற்றுக் கொண்டார்கள். விசுவாசிகளின் அன்னையர்களுள் ஒருவராகும் பாக்கியம் பெற்றார் குறமாது. சரித்திரக் கண்ணோட்டத்திற்கு இந்நிகழ்ச்சி சாரமற்றதாகத் தோன்றினும், இலக்கிய இரட்சணையுடன் நோக்கும்போது இனிய சுவையை நாம்பெற்று ஆனந்திக்க முடிகிறது. குறமகள் என அறியப்பட்ட போதிலும் தமது நாடுகளிற் காணப்படுபவர் போன்ற குறவினத்தராக அவர் இருந்திருக்க மாட்டார். மாலைபுறத்துப் பெண்ணாக இருந்தமை பற்றிப் புலவர் குறமாது என்று அவருக்கு ஒரு புனைப் பெயர் சூட்டியிருக்கின்றார்.

### சிறந்த இலக்கியம்

அறபாத்துக்கு அணித்தாயுள்ள மலையகமங்கையெனக் கூறப் படுவதால் அவர் அறபு நாட்டைச் சேர்ந்தவராகவே இருக்கலாம். "உம்முஹாத்துல் மூமினீன்"களுள் ஒருவருக்கு 'ஹிந்த்' என்னும் பெயர் வழங்கப்பட்டிருந்திருக்கிறது. ஒரு வேளை அவர் ஹிந்து மானிலத்தைச் சேர்ந்தவராக இருக்கவும் கூடும். இவையெல்லாம் பூரணமான ஆதாரங்களுள்ள கூற்றுக்களல்ல. அற்பமான ஒரு செய்தியை வைத்துக் கொண்டு மிகவும் பிரமாதப் படுத்தி நூல் செய்து விடுவது புலவர்களின் வேலை. நமது குறமாதின் கர்த்தா மீரான் கனி அண்ணாவி அவர்கள் இதற்கு விதிவிலக்கானவரல்லர். தென்னாட்டு மகாஞானி சதகதுல்லா அப்பா அவர்கள் உரை தந்ததாகப் புலவர் கூறுவதிலிருந்து இது ஆதாரமற்ற செய்தியெனத் தள்ளி விடுதற்கில்லை. புலவர் தமக்குக் கிடைத்த ஆதாரங்களை வைத்துக் கொண்டே ஒரு சிறந்த இலக்கியத்தைப் படைத்து நிறைந்த வெற்றி வையீட்டியுள்ளார்.

# மன்ற வரலாறு

மருதமுனை அல் - மனூர் - மஹா வித்தியாலயத்தின் பாடசாலைச்சஞ்சிகைக்கு வித்திட்ட பெருமை முன்பு தலைமையாசிரியராகவும் தற்பொழுது வித்தியாதரிசிதாகவும் இருக்கும் அல்-ஹாஜ் ஏ. எம். தரிபுத்தீன் அவர்களையே சாரும். அச்சஞ்சிகை, எமது பாடசாலையில வருடந்தோறும் நடைபெறும் "வித்தியாவிளக்கு" வெளியீட்டு விழா மூலம் சுடர்விட்டுப் பிரகாசிக்கின்றது. இத்துறையில் ஊக்கமும் உற்சாகமும் கொண்ட எமது தற்பொழுதைய அதிபர் ஜனாப் ஏ. அகமது லெப்பை அவர்கள் தொடர்ந்து சஞ்சிகையைச் சிறப்பித்து வருகிறார்கள். வித்தியா விளக்குச் சஞ்சிகையில் ஆசிரியர்களுடையவும் மாணவர்களுடையவும் கவிதை, சிறுகதை, உருவகக்கதை, கட்டுரை என்பனவும் விளையாட்டுப் போட்டி, பாடசாலைச் சாரணீயம் போன்ற இன்னோரன்ன நிகழ்ச்சிகள் பலவும் இடம் பெற்று வந்தன. எமது வித்தியாலய இலககிய மன்றம் வருடந் தோறும் பேச்சுப் போட்டி விவாதப் போட்டி என்பன நடாத்திப் பரிசுகள் கொடுத்து மாணவர்களை ஊக்கப்படுத்தியது.

### மலர் வெளியீடு

சென்ற ஆண்டில் வித்தியாவிளக்கு வெளியீட்டு விழா கல்முனை வட்டார வித்தியா தரிசிகர், ஜனாப் ஐ எம். எஸ் எம். பளீல் மௌலானா அவர்களின் தலைமையில் நடந்தேறியது. அவ்வமயம் ஆசிரிய சிரோன்மணி வே. சாமித்தம்பி, ஜனாப் எஸ். இஸட், எம். மஷூர் மௌலானா ஆகியோர் உட்படப் பலர் சொற்பொழிவாற்றினார்கள். வித்தியாதரிசிகர் ஜனாப் பளீல் மௌலானா அவர்கள் 'இஸ்லாமியக்கலை விழா' ஒன்றனை இவ்வாண்டில் நடாத்த வேண்டுமென எங்கள் ஆசிரிய மன்றத்தாரைக் கேட்டுக் கொண்டார்கள். அன்னாரின் வேண்டுகோட் இணங்கி, இவ்வாண்டில் 'இஸ்லாமிய தமிழ் இலக்கியவிழா' ஒன்றை வெகு சிறப்பாகக்கொண்டாடுவதற்கு முன் வந்த எமது ஆசிரிய மன்றத்தாருக்கு, அன்னாரும் நிறைந்த ஒத்துழைப்பைத்தந்தார்கள்.

### நோக்கம்

இலக்கியப் பாடங்களைப் போதிக்கும் எங்கள் ஆசிரியர்கள் சிறந்த இலக்கிய இரசிகர்களாகவும் எழுத்தாளர்களாகவும் இருந்த காரணத்தாலே தான் இத்தகைய பெரும் 'இஸ்லாமிய தமிழ் இலக்கிய விழா' ஒன்றினை வெகு சிறப்பாக நடாத்துவதற்கு, முன் வந்தார்கள். மறைந்து கிடக்கும் இஸ்லாமிய இலக்கியங்களைத் துலங்கவைப்பதே எமது பெரு நோக்காகும். அதன் பெறுபேறு தான் ஆடித்திங்கள் இரண்டாம் நாளில் பல கல்விமான்கள், பேரறிஞர்கள், பண்டித மணிகள், பேச்சாளர்கள் பங்கு பற்றிச் சிறப்பிக்கும் எமது 'இஸ்லாமிய தமிழ் இலக்கிய விழா'வாகும்.

இஸ்லாமிய இலக்கிய விழா:-

மறைந்துகிடக்கும் கடந்த கால இஸ்லாமிய தமிழ் இலங்கியங்களை இத்தகைய விழாக்களின் மூலம் வெளியிட்டு முஸ்லீம் பெரும் புலவர்கள் படைத்தளித்த காவியங்களை என்றென்றும் வாழச் செய்வதே எமது குறிக்கோளாகும். இவ்விழாவில் பதினைந்து இஸ்லமிய இலக்கியங்களைப் பற்றிய ஆய்வுரைகளும் முஸ்லீம் பெருமக்களின் இலக்கியப் பணிபற்றிய ஆராய்ச்சிக் கருத்துக்களும் இடம் பெறும். மேலும் இவ்விழா ஒரு பெரும் இஸ்லாமிய இலக்கிய ஆராய்ச்சி மாநாட்டை முஸ்லிம் பெருமக்களைக் கொண்டு நடாத்தக் கால் கோளாகவும் இருக்கும்.

— எஸ். ஏ. செய்யிது
ஹஸன் மௌலானா,
விழா அமைப்பு நிர்வாகி


ஜீ. சீ. ஈ.
(சா. த.)

ஆசிரியர் கலாசாலைப் பிரவேச பரீட்சை
புதுமுறை வினா விடை

பயிற்சிக் கோவைகள்

- தமிழ் பாஷை 5-00
- எண் கணிதம் 5-00
- பூமி சாஸ்திரம் 5-00
- சரித்திரம் 5-00
- குடியியல் 5-00
- உடனலவியல் 5-00
- இஸ்லாம் 5-00
- 101 கட்டுரைகள் 7-50
- பொது அறிவும் பொது விவேகமும் 5-00

சர்வகலாசாலை போதனா கழகம்,
540, மருதானை வீதி,
த. பெ. 1079.
கொழும்பு-10.


# மொழிவழி பிரிந்த மூத்த சங்கம்

## புதிய பதவியாளர் அறிமுகம்

மொழி வழித் தொழிற் சங்கங்களுள் மூத்த சங்கமாக இன்று திகழ்வது அரசாங்க எழுது வினைஞர் சங்கமாகும். 1961-ம் ஆண்டு திரு. க. சிவானந்த சுந்தரம் அவர்கள்' மொழி வழி பிரிந்தால் வாழ்வோம் அன்றேல்வீழ்வோம்' என்ற கோட்பாட்டை முன்வைத்து இச் சங்கத்தை உருவாக்கினார். இன்று தமிழ் அரசாங்க எழுதுவினைஞர்களின் ஒரே இயக்கமாக இச் சங்கம் வளர்ந்திருப்பதுடன், பதினெட்டுக்கும் மேற்பட்ட மொழி வழித் தொழிற் சங்கங்களுக்கு வழிகாட்டியாகவும் இருக்கிறது.


செ. ஜீவராசா

கடந்த ஐந்து ஆண்டு காலத்திற்குள் இச்சங்கம் பல குறிப்பிடக்கூடிய சேவைகளை ஆற்றியிருக்கிறது. பிரபல கோடீசுவரன் வழக்கை நடத்திய பெருமையும் இச் சங்கத்திற்கு உண்டு அத்துடன் பொதுத் துறையிலும் தனியார் துறையிலும் மொழிவழித் தொழிற் சங்கங்கள் தோன்றுவதற்கும் இச்சங்கத்தின் முன்னோடிகள் பல வழிகளிலும் உழைத்திருக்கிறார்கள்-உழைத்து வருகிறார்கள்.

### பழையவர்கள்

அ. எ. வி. சங்கத்தின் முதன் தலைவரான திரு. க. சிவானந்தசுந்தரம் அவர்கள் இன்று மலையகத்தில் உள்ள மொழிவழித் தொழிற் சங்கமான இ தொ. கழகத்தின் பொதுச் செயலாளராகக் கடமையாற்றுவது இச் சங்கத்தினரின் சேவை மனப்பான்மையை எடுத்துக் காட்ட நல்ல சான்றாகும். அ எ. வி. சங்கம் ஒரு வகையில் தொழிற்சங்கப் பயிற்சிக் கல்லூரியாகவும் இருந்து வருகிறது என்று கூறலாம். கடந்த ஐந்து ஆண்டு காலத்துள் இச் சங்கத்தின் தலைமைப் பதவியை நால்வர் அலங்கரித்துவிட்டனர். செயலாளர் பதவியை மூவர் அலங்கரித்துவிட்டனர்.


ந. அமிர்தானந்தா


ஆ. தேவராசன்

சங்கத்தின் முதல் செயலாளரான திரு. இ. பாலசுப்பிரமணியம் இன்று உள்ளூராட்சி அமைச்சரின் அந்தரங்கச் செயலாளராகப் பணிபுரிகிறார். இரண்டாவது செயலாளரான திரு. வே. தங்கவேலு இன்று யாழ். மாநகரசபைக் கணக்காளர்களில் ஒருவராவர்.

இச் சங்கத்தின் தலைமைப் பதவியைத் தாங்கியவர்களில் முதல் தலைவரான திரு. க. சிவானந்தசுந்தரம் தவிர்ந்த ஏனையவர்கள் சங்கத்தின் ஆட்சிக் குழு உறுப்பினர்களாக இருந்துகொண்டு புதியவர்களுக்குப் பயிற்சி கொடுத்து வருகிறார்கள். இரண்டாவது தலைவரான திரு. மு. தம்பிமுத்து அவர்கள் பொது வேலைத் திணைக்களத்தில் கடமையாற்றுகிறார். மூன்றாவது தலைவரான திரு. செ. கோடீசுவரன் பி. ஏ. கொழும்புக் கச்சேரியில் எழுதுவினைஞராகக் கடமையாற்றிக்கொண்டிருக்கிறார்.

### புதிய தலைவர்

கடந்த வாரம் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற அ எ. வி. சங்கத்தின் ஆண்டுக் கூட்டத்தில் புதியவர்கள் மூவர் தலைவர், செயலாளர். பொருளாளர் பதவிகளை ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். தலைவர் பதவியை ஏற்றிருக்கும் திரு. செ. ஜீவராசா அவர்கள் இப் பதவிக்குப் புதியவராக இருந்த

(11-ம் பக்கம் பார்க்க)


அவசியமுள்ளவர்கள் யார்?

★ உத்தியோகத்தில் உங்களுக்கு நல்ல வெற்றி வேண்டுமா?
★ எதிரிகளை வெற்றிகொள்ள வேண்டுமா?
★ ஆண், பெண் விருப்பப்படி மணம் புரிய உதவி வேண்டுமா?

இலவச ஆலோசனைகளுக்கு இன்றே எங்களுக்கு கடிதமெழுதுங்கள்.

விலாசம்:-
பண்டார மந்திரச்சாரியார்
அன் கம்பெனி,
தலாவ (வழி) அநுராதபுரம்.

# இலங்கையின் இன்றைய இழிநிலைக்கு வகுப்பு வாதிகளே காரணம்

## தமிழரசுத் தலைவரின் தலைமைப் பேருரை

“இந்த நாட்டின் இழி நிலைக்கு சிங்கள வகுப்பு வாதிகளே காரணமானவர்கள். எதுவுமறியாத சிங்களப் பொது மக்களிடம் சென்று இலங்கையைச் சூழ்ந்து தமிழர்களே வாழ்கின்றார்கள் என்றும் அவர்களால் சிங்கள இனத்திற்கும் பௌத்த மதத்திற்கும் ஆபத்து ஏற்படப்போகிறது என்றும் தப்பான பிரச்சாரத்தை மேற்கொண்டிருக்கிறார்கள். இதனால் இந்நாட்டின் பொருளாதாரமும், கல்வியும் பாழடைந்து விட்டது. இந்த வகுப்புவாதிகள் நாட்டின் துரோகிகள்” என்று இலங்கைத் தமிழரசுக் கட்சியின் புதிய தலைவரான டாக்டர் இ. மு. வி. நாகநாதன் அவர்கள் கடந்த 21-ம் திகதியன்று கல்முனை வன்னியசிங்கம் அரங்கில் நடைபெற்ற இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பத்தாவது தேசிய மாநாட்டில் தமது தலைமையுரையை நிகழ்த்துகையில் குறிப்பிட்டார்.

டாக்டர் நாகநாதன் அவர்கள் நிகழ்த்திய தலைமையுரையின் முழு விபரம் வருமாறு:

“இலங்கைத் தமிழரசுக் கட்சியின் இந்தப் பத்தாவது தேசிய மாநாட்டில் திரண்டு நிற்கும் எம் கட்சிப் பேராளர்களுக்கும் ஏனைய தமிழரசுக் கட்சி உறுப்பினர்க்கும் எம்மை ஆதரித்து என்றும் எம்முடன் அணிதிரண்டு நிற்கும் எமது நலன் விரும்பிகட்கும் எமது அன்பழைப்பை ஏற்று இங்கு வந்திருக்கும் கௌரவம் மிக்க விருந்தினர்க்கும் எமது கட்சியின் சார்பில் நான் முதற்கண் எனது நெஞ்சார்ந்த நல்வரவைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

“இந்தப் பெரிய மாநாட்டிற்குத் தலைமை வகிக்க என்னை ஒருமனதாகத் தெரிவு செய்ததன் மூலம் கட்சி எனக்களித்த கௌரவத்தை நான் நன்குக உணருகிறேன். ஆனால் எமது சரித்திரத்தில் மிகவும் மலைப்பும் மனத் துடிப்புங்கொண்ட இக் கட்டத்தில் எமது தேசிய நிறுவனத்தை வழிகாட்டி நடத்தும் பெரும் பொறுப்பு என் தலைமீது சுமத்தப்பட்டிருக்கிறதென்பதை அதனிலும் மேலாக நான் உணருகிறேன்.

“பதினேழு நீள் வருடங்களாக — இலங்கைக்குச் சுதந்திரங்கிடைத்த நாட்தொடக்கம் — எம்மிடமிருந்து பிடுங்கப்பட்டு வரும் எமது தன்னுரிமைத்தையும் அடிப்படை உரிமைகளையும் மீண்டும் பெறுவதற்கும் எமது தேசியத் தன்மதிப்பைப் பேணிக் கொள்வதற்கும் நாம் எமதனைத்தையும் அர்ப்பணித்து ஒரு நீண்ட போராட்டத்தை நடத்த வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு ஆளாக்கப்பட்டோம். இந்த நீடித்த போராட்டத்தில் உடலூறு பட்டவர்களும் பொருளூறு பட்டவர்களும் மிகப் பலர். எமது தோழர்களுட் சிலர் தமது இலட்சியப்பற்றின் காணிக்கையாகத் தமது இன்னுயிரையும் அர்ப்பணித்தனர்.

### தியாகிகள்


“திருவாளர் வன்னியசிங்கத்துடன் தொடர்பான ஒரு சம்பவம் எனக்கு இக் கட்டத்தில் நினைவுக்கு வருகிறது. அவர் பிரிவுக்கு ஒரு மாதத்திற்கு முன் உடல் நிலையைப் பரிசோதித்த பின் அவரைக் குறைந்தது நாலு மாதங்கட்காவது நிறைவான ஓய்வு பெற்றுக்கொள்ளும்படி எச்சரித்தேன். கண்களில் நீர் மல்க அவர் என் கரம் பிடித்துக் கூறிய அந்தப் பதில்! “எவ்வித ஓய்வையும் நான் பெறுவதெப்படி? நீங்கள் தானும் ஓய்திருப்பதுதான் எப்படி? செய்யவேண்டியது மலைபோன்றிருக்கின்றது; செய்து முடித்ததோ சொல்லக்கூடியதாயில்லை; எம்பணியிற் தம்மை அர்ப்பணித்தோர் தொகையும் மிக அற்பம். இல்லை வைத்தியரே! பெருந் தொகையில் எமது இளைஞர்களும் இளம் பெண்களும் முழு இதயத்தோடு எமது இயக்கத்திற் சேரும் வரை அல்லது இறைவன் தன் கருணையில் எமக்கு நிரந்தர ஓய்வு அளிக்கும் வரை நம்முள் எவரும் ஓய முடியாது; ஓய்வு பெறவும் மாட்டோம்.

“திருவன்னியசிங்கத்தைத் தொடர்ந்து திரு. ஏகாம்பரம், திரு. இராசவரோதயம், திரு. கந்தையா ஆகியோர் இன்று நிரந்தர ஓய்வு பெற்றுவிட்டனர்.

### போராட்டத்தின் போது...

“எம்மைத் துன்புறுத்தியவர்களின் வெறியாட்டம் உச்சக்கட்டத்தை அடைந்த போதும் எமது தேசியப் போராட்டத்தின் பொழுதும் நாம் எமது பரம அரசியல் எதிரிகள் மீது மனக்கசப்போ பகைமையோ காட்டியதில்லையென்பதையும் அதற்கு எமது பண்புயர்ந்த தலைமையே காரணம் என்பதையும் நான் இங்கு தவறற்ற பெருமையுடன் பொறித்து வைக்க விரும்புகிறேன். இதற்கு மாறாக எமது பெரும் கொள்கைகளிலிருந்து மயிரிழைதானும் பிசகாது நடந்து கொண்டும் அதே சமயம் கட்சி அடிப்படையிலும் மக்கள் அடிப்படையிலும் நாம் எம்மோடு உடனுறையும் சிங்களச் சகோதரர்களுடன் நட்புரிமையும் உடன் பாடும் தேடி என்றும் அயராது உழைத்தும் வந்துள்ளோம்.

“இவ்வாறு எமது நெஞ்சுறுதியாலும் உயர்வுள்ளத்தாலும் நாம் காலஞ்சென்ற பிரதமர் திரு. பண்டாரநாயக்காவுடனும் அவரது அரசாங்கத்துடனும் 1957லும் பின்னர் திருமதி சிறிமா பண்டாரநாயக்காவுடனும் அவரது கட்சியுடனும் ஏப்பிறில் 1960லும் ஒப்பந்தங்கள் செய்து கொள்ள முடிந்தது. ஆனால் இவ்விரு சந்தர்ப்பங்களிலும் எமக்கு நம்பிக்கைத் துரோகம் இழைக்கப்பட்டு விட்டதென்பது இப்பொழுது சரித்திரம். இத்துரோகத்தின் விளைவாக நாம் அனுபவித்த சோதனைக்கும் வேதனைக்கும் அளவில்லை. ஆனால் தமிழ் பேசும் மக்கள் எம்மீது வைத்த நம்பிக்கையை நாம் கடைசிவரை காப்பாற்றி எமது இலட்சியத்தை உறுதியுடன் பேணிநின்றோம்.



### இன்றைய நிலை

“இன்று நிலைபரம் வேறு. நீதியிலும் நேர்மையிலும் உள்ளார்ந்த பற்றுள்ள திரு. டட்லிசேநாயக்காவின்தெம்பூட்டும் தலைமையில் நாம் ஓர் தேசிய அரசாங்கத்தை நிறுவுவதிற் பங்கு கொண்டு பெருமளவில் தேசிய ஒற்றுமையை ஏற்படுத்தியுள்ளோம். இவருடைய பிரதம தளபதியான திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன கடந்த ஒரு வருடமாக தாம் உரமும் உணமையுங் கொண்ட ஒரு நண்பனென நிரூபித்து விட்டார். இவருடைய ஆற்றலும் அறிவுத்திறனும் தேசிய அரசாங்கத்திற்குக்கிடைத்த ஒரு பெரு முதலாகும். இருந்தும் உடன் காலத்தைப் பற்றி நான் மிகுசொகுசாக வாணிப்பதோ எதிர்காலத்தைப்பற்றிக் கற்பனைக் கனவைத் தூண்டிவிடுவதோ முற்றிலும் சரியாயிருக்கமுடியாது. அவ்வாறு நான் செய்வது எனது கடமையிற் தவறுவதாகும்.

“நெஞ்சுறுதியுடனும் கட்டுப்பாட்டுடனும் நாம் ஆற்ற வேண்டிய நேர்மையான பணிகளும் தாங்கவேண்டிய கஷ்டங்களும் மிகப்பல. நாம் தவிர்க்கவேண்டிய பொறிக்கிடங்குகளும் பல. அதன் பின்னர்தான் நாம் சிங்கள மக்களுக்கும் தமிழ் பேசும் மக்களுக்குமிடையே அறிவார்ந்த கருத்திணக்கத்தின் அடிப்படையில் நீதி நிறைந்த நிலையான சமாதானத்தை ஏற்படுத்தும் எமது குறிக்கோளை அடைய முடியும்; இதன் மீதுதான் முற்றான பொருளாதார வளர்ச்சியையும் தேசியத் தன்நிறைவையும் நாம் காண முடியும்; இதுவொன்றின் மீது தான இலங்கை மக்கள் அனைவரினதும் செழிப்பையும் செல்வத்தையும் மனநிறைவையும் நாம் ஒரு பத்துவருட காலத்துள் உறுதிப்படுத்த முடியும்.

### இரண்டு நோக்கங்கள்

அரசியல் வனாந்தரத்திலும், நாட்டுமன்றத்து எதிர்க் கட்சிகளிடையேயும் நீண்டகாலமாக வாழ்ந்து வந்த நாம் இன்றைய தேசிய அரசாங்கத்தை நிறுவ உதவியபொழுது இரண்டு எண்ணங்கள் எமது மனதில் மேலோங்கி நின்றன.

“ஒரு கௌரவம் நிறைந்த கனவானுடனும் அவரது கட்சியுடனும் ஒரு கௌரவம் நிறைந்த கருத்தொருமைப்பாட்டை ஏற்படுத்திச் சிங்கள மக்களுக்கும் தமிழ் பேசும் மக்களுக்குமிடையே ஒரு கௌரவமான சமாதானத்தை நிறுவுவோம் என்பது ஒரு நோக்கம்.

“இரண்டாவதாக, அடுத்தடுத்து வந்த மூன்று முன்னாள் அரசாங்கங்கள் தள்ளிவீழ்த்திவிட்ட நிர்க்கதியிலிருந்தும் பொருளாதாரப் படுகுழியிலிருந்தும் விவசாயத் துறையிலும் அதோடணைந்த சிறு கைத்தொழில்களிலும் குடிசைக் கைத்தொழில்களிலும் திட்டமிட்ட, தன்னலமற்ற, பணித்திறன் மூலம் இன்னுயிராம் எமது தாய் நாட்டை மீட்கவேண்டும் என்பது மற்றொன்றாகும்.

### நமது நிலை

‘அமைச்சர் பதவிகளை நாம் தேடி நிற்கவில்லை. அரசாங்கத்தில் நாம் தொடர்பு கொண்டுள்ளோம் என்பதற்கு அடையாளமாக குறைந்த பட்சம் ஒரு அமைச்சையாவது ஏற்றுக்கொள்ள வேண்டுமென்பதைத் தவிர திரு. டட்லி சேனநாயகா எமக்களித்த அமைச்சரவைப் பதவிகளை நாம் ஏற்கமறுத்து விட்டோம்.

‘அமைச்சரவைப் பொறுப்புகளை நாம் ஏற்கமறுத்தமை குறித்துப் பலதரப்பட்ட கண்டனங்கள் தெரிவிக்கப்பட்டன. எமது இம் முடிவின் விளைவாக தம்மை அர்ப்பணித்துக்கொண்ட திறமைசாலிகளின் இயக்கவாற்றல் நிறைந்த சேவை நாடாளும் அரசாங்கத்திற்கு மறுக்கப்பட்டுவிட்டது என்பது இக் கண்டனங்களுள் சில சமயம் மிக முக்கியமானதாகவிருக்கலாம்’ ஆனால் அந்தக் கட்டத்தில் நாம் அமைச்சர் பதவிகளை ஏற்றிருந்தாற் பொது மக்கள் அதைத் தப்பர்த்தம் செய்திருப்பார்கள். உயர்ந்த கொள்கைகளை அடித்தளமாக வைத்து நீண்ட காலமாக எதிர்ப்புக் காட்டிவந்தவர்களைத் திரு. டட்லி சேனநாயகா பதவிகொடுத்து விலைக்கு வாங்கிவிட்டார் என்று பலர் கருதியிருப்பார்கள். இவ்விடயத்தில் நாம் நடந்து கொண்ட விதம் காரணமாகச் சிங்கள மக்களுள் மிகப் பெரும் பகுதியினர் எம்மை மேலும் மதிக்கத் தெரிந்துகொண்டார்கள் என்றே நான் நம்புகிறேன்.

‘உடனெதிர் காலத்தைப் பற்றி மிகு சொகுசாக வர்ணிக்க முடியாது என்று நான் கூறியிருந்தேன். தமிழ்பேசும் மக்களுக்கும் சிங்கள மக்களுக்குமிடையே இருக்கும் நிலைமையைத் தெளிவாகப் புரிந்துகொள்வதானால் அதன் பின்னணியை நாம் நேர்மையுடன் அலசிப்பார்ப் பார்த்துக்கொள்ள வேண்டும்.

### பின்னணி

‘இந்த நாட்டிற் தமிழ் பேசும் மக்கள் வாழ்ந்து கொண்டு வருவது ஒவ்வொரே சிங்கள இனத்தின் பொருளாதாரத்திற்கும் மதத்திற்கும் கலாச்சாரத்திற்கும் அதனது பாதுகாப்பிற்கும் ஆபத்தானது என்று பல வருடங்களாகச் சிங்கள மக்களுக்கு—குறிப்பாகச் சிங்களக் குழந்தைகளுக்கு—நாடகங்கள், புத்தகங்கள், பிரசுரங்கள், மூலம் போதிக்கப்பட்டு வந்திருக்கின்றது.

‘போதிய கல்வி வாசனையற்ற, வஞ்சகமற்ற பெருந்தொகையான சிங்கள மக்கள் மனத்திற் சூழ்ச்சி வகுக்கும் அரசியற் சந்தர்ப்பவாதிகள் இந்தப் பொய்யான, உண்மையிலேயே நஞ்சுத்தனமான, படத்தைப் பொறித்துவிட்டிருக்கிறார்கள். சேர்மனியைச் சுற்றிலும் பகைவர்கள் சூழ்ந்திருக்கிறார்கள் என்றும் சேர்மனியின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதானால் இப் பகைவர்களை வருடனும் போரிட்டுச் சாத்தியமானால் அவர்களைத் தனித் தனியே தோற்கடிக்க வேண்டும் என்றும் கணக்கிட்ட பிரசாரத்தின் மூலம் கிட்லர் சேர்மன் மக்கள் மனத்தில் வலுச் சண்டைச் சிந்தனையையும் போர்க் கோலத் தீயையும் வளர்த்துவிட்டான். அதே போல எம் நாட்டிலும் தீவினை அஞ்சாத சில அரசியல் வாதிகள் மக்கள் மனதில் நஞ்சூட்டி வந்திருக்கிறார்கள்.

### தப்பான பிரச்சாரம்

‘வடக்கே வட இலங்கையிலும் தென் இந்தியாவிலும் கிழக்கே மலேசியாவிலும் மேற்கே மோரிசுத் தீவிலும் சான்சிபாரிலும் கிழக்காபிரிக்காவிலும் தமிழர் வாழ்வதினால் நாற்புறமும் சூழப்பட்ட சிங்கள இனத்திற்கும் பௌத்த மதத்திற்குமே ஆபத்து ஏற்பட்டுவிட்டதென்று நாளும் பொழுதும் சிங்கள மக்கள் மனதில் வெறியேற்றி வந்திருக்கிறார்கள். வஞ்சகமற்ற ஏழை மக்கள் தமது மதத்திற்கும் நாகரிகத்திற்கும் ஆபத்து ஏற்பட்டுவிட்டதென்று உண்மையிலேயே நம்புகிறார்கள். திரு. பண்டாரநாயக்கா, திருமதி பண்டாரநாயக்கா ஆகியோரினதும் அவர்களது பழிகேடான நண்பர்களின

(11.ம் பக்கம் பார்க்க)


## உங்கள் குறைகள் என்ன?

★ உத்தியோகத்தில் உங்களுக்கு நல்ல வெற்றி வேண்டுமா?
★ எதிரிகளை வெற்றிகொள்ள வேண்டுமா?
★ ஆண், பெண் விருப்பப்படி மணம் புரிய உதவி வேண்டுமா?

இலவச ஆலோசனைகளுக்கு இன்றே எழுதுங்கள்:
மஹா மாந்திரீக கலாநிதி
**பி. எம்; திசாநாயக**
(அரசாங்கப் பதிவுசெய்யப்பட்ட மாந்திரீக வைத்தியர்)
நாலு தேவாலய பிரதம தர்மகர்த்தா
கம்பளை, போன்: 454

# சுதந்திரன்

SUTANTIRAN

1966 யூலை மாதம் 2-ந் தேதி

194 ஏ, பண்டாரநாயக்க வீதி, கொழும்பு-12.
தொலைபேசி எண் - 3411 த. பெ. 1183


## மாநாடு பெரும் வெற்றி

ஆல்முனையில் கடந்த வாரம் நடைபெற்ற தமிழரசுக் கட்சியின் தேசிய மாநாடு இலங்கை வரலாற்றிலேயே பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய சம்பவமாகும். இம்மாநாடு தமிழரசுக் கட்சிக்கும், தமிழ் பேசும் மக்களுக்கும் மாபெரும் வெற்றியாகும்.

கல்முனை மாநாடு தமிழ் பேசும் மக்களுக்குப் புத்துணர்ச்சியையும், புதிய உத்வேகத்தையும் அளித்திருப்பதுடன் புதிய நம்பிக்கையையும் கொடுத்துள்ளது.

சிங்களவர் — தமிழர் ஒற்றுமை மென்மேலும் வளர்ச்சி பெற மாநாடு ஆக்கமளித்துள்ளது. இந்த அரசாங்கம் தோற்றுவித்த தேசிய ஐக்கியம் கல்முனை மாநாட்டிலே தெளிவாக எதிரொலித்தது. அத்துடன் தமிழ் பேசும் மக்களின் அணியில் அசைக்க முடியாத ஐக்கியத்தையும் இம்மாநாடு ஏற்படுத்தியுள்ளது. இதனால் தமிழ் — முஸ்லிம் மக்களின் ஒற்றுமை அணி உரம் பெற்றுவிட்டது. எனவே இதனை ஓர் "ஒற்றுமை மாநாடு" என்று கூறின் மிகையாகாது.

அத்துடன் இது ஒரு வகுப்புவாத — ஒழிப்பு மாநாடுமாகும். மாநாட்டு நிகழ்ச்சிகளும், பிரதமரின் பேச்சும், தலைவரின் பேருரையும் வகுப்புவாதப் பிசாசுக்குக் குழி தோண்டிவிட்டன. வகுப்புவாதிகளின் பேயாட்டம் இனிப் பலிக்காது என்பதை மாநாடு எடுத்துக்காட்டியுள்ளது.

தமிழ் பேசும் மக்கள் இழந்த ஏனைய உரிமைகளை மீட்பதற்கான ஒரு சிறந்த அரசியற் சூழ்நிலையையும் கல்முனை மாநாடு உருவாக்கியிருக்கிறது. இது மாநாட்டின் மூலம் தமிழ் பேசும் மக்கள் பெற்ற இராஜதந்திர வெற்றியாகும்.

பிரதம மந்திரி மாநாட்டுக்கு விஜயம்செய்ததால் சிங்கள மக்களின் கவனத்தையும் மாநாடு ஈர்த்தது. அவரது பேச்சு தமிழரசுக் கட்சியின்பால் சிங்கள மக்கள் கொண்டிருந்த தப்பபிப்பிராயத்தைப் பெருமளவு நீக்கிவிட்டது. தேசிய ஐக்கியத்தின் அவசியத்தை வற்புறுத்திய தலைமைப் பேருரையும், இரு பெரும் இனங்களிடையே நல்லெண்ணத்தையும் நட்பையும் வளர்க்கும் நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டமைந்த மாநாட்டு நடவடிக்கைகளும் சாதாரண சிங்கள மக்களிடையே ஓரளவு மனமாற்றத்தை ஏற்படுத்தியுள்ளன. இந்த மனமாற்றமும் நல்லெண்ணமுமே தமிழ் பேசும் மக்கள் தங்களின் உரிமைகளைப் பெறுவதற்கான அடிப்படையாகும்.

கடந்த காலத்தில் தமிழ் பேசும் மக்கள் நடத்திய உரிமைப் போராட்டங்கள் சிங்களவர்களுக்கெதிராக நடத்தப்பட்டவையல்ல என்று பிரதமர் மாநாட்டில் கூறியிருப்பது சிங்கள மக்கள் உண்மையை உணர்வதற்கு உதவியுள்ளது. உரிமைகளை மீட்பதற்காக நடத்தப்பட்ட இப்போராட்டங்களைச் சிங்களவர்களுக்கெதிரான போராட்டங்களாகச் சித்திரித்து சிங்கள மக்கள் மத்தியில் வகுப்புவாதிகள் பிரசாரம் செய்து வந்தனர். இத்துவேஷப் பிரசாரத்தைப் பிரதமரே நொறுக்கித் தள்ளிவிட்டார். இனி அது தலைதூக்க முடியாது.

தேசிய அரசாங்கம் தமிழ் பேசும் மக்களின் கலாசாரப் பாரம்பரியங்களைப் பாதுகாக்கும் என்று பிரதம மந்திரி ஒரு இலட்சத்துக்கு மேற்பட்ட மக்கள் சமுத்திரத்தின் மத்தியில் நின்று வாக்குறுதி அளித்துள்ளார். "இந்நாட்டில் பல்வேறு இன மக்களிடையே ஒற்றுமையையும் பரஸ்பர நல்லெண்ணத்தையும் உருவாக்கும் பணியை மகிழ்ச்சியுடன் நிறைவேற்ற நான் என்றும் தயாராயிருக்கிறேன்" என்றும் அவர் முழங்கியிருக்கிறார்.

இந்த வாக்குறுதிகளே தேசிய அரசாங்கத்தின் அடிப்படை நோக்கமாகக் கருதப்பட வேண்டும். இவற்றை நிறைவேற்றுவதற்காக இடையிடையே வீசும் தேசத்துரோகச் சூறாவளிகளுக்குப் பணிந்து கொடுக்காமல் இறுதிவரை துணிவுடன் பாடுபட வேண்டியது பிரதமரினதும் தேசிய அரசாங்கத்தினதும் கடமையாகும்.

கல்முனை மாநாட்டில் பிரதமருக்குத் தமிழ்பேசும் மக்கள் அளித்ததைப்போன்ற ஒரு மகத்தான வரவேற்பை இதற்குமுன்பு வேறு எந்தப் பிரதமருக்கும் அவர்கள் அளித்ததில்லை. நல்ல நோக்கங்களையும் நல்லெண்ணத்தையும் கொண்டவர்களை வரவேற்பதில் தமிழ்பேசும் மக்கள் என்றும் மகிழ்ச்சியடைவார்கள் என்று தமிழரசுத் தந்தையே இத்தகைய வரவேற்புக்கான காரணத்தை இக்கூட்டத்தில் சுட்டிக்காட்டியுள்ளார். நாட்டு மக்களிடையே நல்லுறவை வளர்ப்பதற்காகப் பிரதமமந்திரி தமிழ்பிரதேசங்களுக்கு அடிக்கடி விஜயம்செய்ய வேண்டியது அவசியமாகும்.

இந்நாட்டில் நிரந்தர அமைதியை ஏற்படுத்தி இனங்களிடையே நல்லுறவை நிலைநிறுத்தி சுபீட்சம் நிறைந்த இலங்கையைக் கட்டியெழுப்புவதற்குச் சமஷ்டி ஆட்சி முறை அத்தியாவசியமாகும் என்ற அடிப்படைக் கொள்கையைக் கல்முனை மாநாடு மீண்டும் வலியுறுத்தியுள்ளதென்பது குறிப்பிடத்தக்கது.

அத்துடன், தமிழ்ப்பேசும் மக்கள் உடனடியாக எடுக்க வேண்டிய நடவடிக்கைகளையும் மாநாடு ஆராய்ந்துள்ளது. தமிழ்மொழி விசேட சட்டவிதிகளை அமுல் நடத்துவதற்கு உடனடியாக நடவடிக்கை எடுப்பதற்கு மாநாடு முடிவுசெய்ததுடன் மாவட்டசபை அமைப்பு, தமிழ் பல்கலைக்கழக அமைப்பு ஆகியவற்றில் தீவிர கவனம் செலுத்தவும் தீர்மானித்துள்ளது. தமிழ்பேசும் பிரதேசங்களின் பொருளாதாரப் பிரச்சினைத் தீர்க்கும் வழிவகைகளைப் பற்றியும் மாநாடு ஆராய்ந்திருக்கிறது. இத்தீர்மானங்களை அமுல் நடத்துவதற்காக காலம் தாழ்த்தாது தீவிர நடவடிக்கை எடுக்கவேண்டியது தமிழரசுத் தலைவர்களின் கடமையாகும்.

# தமிழரசுத் தீர்மானங்களும் அரசாங்கத்தின் நிலையும்

## புதிய சூழலில் கூடிய மாநாடு நல்ல முடிவையே கொண்டு வரும்

இலங்கைதமிழரசுக்கட்சியின் பத்தாவது தேசியமாநாடு எதிர்பார்த்த முறையில் சிறப்பாக நடந்து முடிந்துவிட்டது. இந்த மாநாட்டின் முடிவை அனைவரும் எத்தனை ஆவலுடன் எதிர்பார்த்திருந்திருந்தார்களோ, அத்தனை ஆவலுடன் இன்று விமர்சனமும் செய்யத் தொடங்கிவிட்டார்கள்.

தமிழரசுக்கட்சியின் முந்திய மாநாடுகளுக்குஇல்லாத ஒரு தனிச் சிறப்பு இந்த மாநாட்டுக்கு இருந்தது. காரணம், முந்திய ஒன்பது மாநாடுகளையும் நடத்துகின்ற நேரத்தில் தமிழரசுக் கட்சி இந்நாட்டின் எதிர்க் கட்சிகளில் ஒன்றாக இருந்தது எதிர்க்கட்சி என்ற நிலையில அதன் தீர்மானங்களும் முடிவுகளும் நிச்சயமாக அரசாங்கத்தைக் கண்டிப்பனவாக இருக்கும் என்பதை முன்கூட்டியே ஆருடம் கூறிவிடலாம். இன்று தமிழரசுக் கட்சி அதன் வரலாற்றில் முதல் தடவையாக ஆளும் கட்சிவரிசையில் அமர்ந்திருக்கிறது. இதனால் இம்மாநாட்டு முடிவுகளை நாட்டு மக்கள் அனைவரும் மிகவும் ஆவலுடன் எதிர்நோக்கினார்கள் இன்று கூர்ந்து கவனிக்கிறார்கள்.

### புதிய சூழல்

தமிழரசுக்கட்சி முந்திய மாநாடுகளை நடத்துகின்ற நேரத்தில் எல்லாம் போராட்டமனப்பான்மைகொண்டு இருந்தது. சில மாநாடுகள் போராட்டங்களின் மத்தியில் நடைபெற்றிருக்கிறது. பத்தாவதுமாநாடு போராட்டக் கருவிகளை ஒருபுறம் வைத்துவிட்டு, அமைதியான சூழ்நிலையில் நடைபெற்று முடிந்திருக்கிறது.

இந்த மாற்றத்தினால் கட்சியின் அடிப்படை நோக்கங்களில் ஏதாவது மாற்றம் ஏற்பட்டிருக்கிறதா என்பது முதற்கண் நோக்கவேண்டிய ஒன்றாகும். தமிழரசுக்கட்சி ஆரம்பித்த நாளிலிருந்து நாட்டின் ஆட்சி முறையின் அடிப்படையில் பெரியதவறு இருக்கிறது என்றும், அதில் மாற்றம் ஏற்படாதவரையில் நாட்டின் பிரச்சினைகளுக்கு நிரந்தரபரிகாரம் காண முடியாது என்றும் கூறிவந்திருக்கிறது.

### இலட்சியத் தீர்மானம்

இரு மொழிகளைப் பேசுகின்ற மக்கள் வாழும் இலங்கையில் நிலைத்த ஒற்றுமையும், நீடித்த அமைதியும் ஏற்பட வேண்டுமென்றால் முதலில் இன்று நடைமுறையில் இருக்கும் ஒற்றையாட்சிக்குப் பதிலாக கூட்டாட்சி முறையை ஏற்படுத்தவேண்டும் என்பது தமிழரசுக்கட்சியின் தலையாய லட்சியமாகும்.

ஆனால் ஒற்றையாட்சி முறையின் கீழ் நிறுவப்பட்டிருக்கும் அரசாங்கத்தில் தமிழரசுக்கட்சி அங்கத்துவம் வகிப்பதனால் அதன் தலையாய லட்சியத்தைக் கைவிட்டுவிட்டதா என்றகேள்வி அண்மைக்காலத்தில் ஆங்காங்கேசலசலக்கத் தொடங்கியது. வட-கிழ் மாகாணங்களிலும் இக்கேள்வியைச்சிலர் எழுப்பியிருக்கிறார்கள்.

தமிழரசுக்கட்சிதனது நிலையைப் பல சந்தர்ப்பங்களில் விளக்கியிருந்த போதிலும் அதனை ஏற்றுக்கொள்ள அவர்கள்மறுத்துவிட்டார்கள். ஒவ்வொரு அரியணை உரையின் போதும் தமிழரசுக்கட்சி கொண்டுவந்த திருத்தங்களில் ஒன்றாக சமஷ்டி அரசியலும் இருந்து வந்திருக்கிறது. ஆனால் கடந்த அரியணை உரையின்போது இத்திருத்தத்தை தமிழரசுக்கட்சி முன்வைக்கவில்லை. இதுவும் தமிழ

சுதந்திரன் அரசியல் நிருபர்

ரசுக்கட்சி சமஷ்டிக்கொள்கையைக் கைவிட்டுவிட்டதா என்ற கேள்வியை அரசியல் வட்டாரத்தில் எழுப்பியிருந்தது.

### இது பிரிவினையல்ல

இந்தச் சூழ்நிலையில் தமிழரசுக்கட்சியின் பத்தாவது மாநாடு மீண்டும் சமஷ்டிக் கொள்கையை வலியுறுத்தி எதிரிகளின் எதிர்ப்பிரச்சாரத்திற்கு ஆப்பு வைத்திருக்கிறது. இந்த மாநாட்டில் சமஷ்டி அரசியல் பற்றிய தீர்மானம் நிறைவேற்றப்படாது இருந்திருந்தால் இரண்டு பெரும் தவறுகளைச் செய்த குற்றத்திற்கு தமிழரசுக்கட்சி இலக்காகியிருக்கும், ஒன்று தமிழரசுக்கட்சிதனது தலையாய லட்சியத்தைக் கைவிட்டுவிட்டது என்ற குற்றச்சாட்டு. மற்றது சமஷ்டி என்றால் பிரிவினை என்று கூறிவந்த எதிர்க்கட்சியினரின் பிரச்சாரத்திற்கு மீண்டும் ஒரு சந்தர்ப்பம்கிடைத்திருக்கும்.

அரசாங்கக் கட்சியில் சேர்ந்ததும் தமிழரசுக் கட்சி தனது சமஷ்டித் திட்டத்தைக் கைவிட்டு விட்டது. காரணம் பிரிவினையை தமிழரசுக் கட்சி அரசாங்கத்தில் இருக்கும் நேரத்தில் பகிரங்கமாக வற்புறுத்த முடியாமையினாலேயேஎன்று எதிர்க்கட்சிகள் சமஷ்டி அரசியல் முறைக்கே ஒரு களங்கம் கற்பித்திருப்பார்கள். இந்த இரண்டு பழிச் சொல்லுக்கும் இடமில்லாமல் தமிழரசார் மீண்டும் சமஷ்டிக் கோரிக்கையை வலியுறுத்தியிருப்பது பாராட்டக் கூடியதாகும்.

### தமிழ்மொழிச்சட்டம்

தமிழ் மொழி சட்ட அமுல், மாவட்ட சபைகள், தமிழ் சர்வகலாசாலை, தீண்டாமை ஒழிப்பு போன்ற பிரச்சினைகளையிட்டும் இந்த மாநாட்டில் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன.

தமிழ் மொழிச் சட்டம் எத்தனையோ இன்னல்களுக்கும் இடர் பாடுகளுக்குமிடையில் நிறைவேற்றப்பட்டது என்பதை நாடு அறியும். இத்தனை இன்னல்களுக்குமிடையில் நிறைவேற்றப்பட்ட அச்சட்டத்தை அமுல் நடத்தாது வைத்து வேடிக்கை பார்ப்பதன் காரணம் தான் என்ன? தேசிய அரசாங்கம் பட்ட கஷ்டங்கள் இப்படி வீணாக வேண்டுமா?

தமிழ் மொழிச்சட்டத்தை அமுல நடாத்துகிறோம் என்று வெறுமனே கூறிவிட்டால் போதாது. அச்சட்ட அமுலை கவனிக்க தனிப்பகுதி நிறுவப்பட்டேயாக வேண்டும். இதனை இப்பத்திகளில் நாம் பல முறை வற்புறுத்தியுள்ளோம். இப்பொழுது ஒரு மாநாடே வற்புறுத்தியிருக்கிறது. இனியாவது சம்பந்தப்பட்ட அமைச்சு உடன் நடவடிக்கை எடுக்கும் என்று நம்புகிறோம்.

### தீண்டாமை ஒழிப்பு

தீண்டாமை ஒழிப்புப் பற்றி மாநாடு தோறும் தமிழரசுக் கட்சியும் தீர்மானம் நிறைவேற்றி வருகிறது. இடையிடையே பல இயக்கங்களையும் தமிழரசுக்கட்சி நடாத்தியிருக்கிறது. சமூக ஒற்றுமைவாரம், தீண்டாமை ஒழிப்பு வாரம், பாதயாத்திரை, வன்னியசிங்கம் வாரம் இப்படி பல வாரங்களை இச்சாபக்கேட்டை எம்மவர் மத்தியிலிருந்து ஒழிப்பதற்காக தமிழரசுக் கட்சி நடாத்தியிருக்கிறது.

இத் தீர்மானத்தின் மீது கோப்பாய் பிரதிநிதி கதிரவேற்பிள்ளை பேசுகையில் தீண்டாமையை ஒழிக்கசட்ட மூலம் நடவடிக்கை எடுக்க வேண்டுமெனக் கேட்டிருக்கிறார்கள். இன்று தமிழரசுக் கட்சி அதற்கான முயற்சிகளிலும் முனைய வேண்டும். மக்களின் மனக்கதவு திறந்தால் தான் இச்சாபக்கேடு நம்மைவிட்டு முற்றாக நீங்கும். என்றாலும் பொது இடங்களில் பேதமை காட்டுவதை நீக்க சட்ட மூலம் சில வழி வகை எடுப்பதும் நல்லது.

### நல்ல முடிவு

மாவட்ட சபைகள் பற்றி சம்பந்தப்பட்ட அமைச்சரான திரு. திருச்செல்வம் அவர்களே ஒரு காலக்கெடு கொடுத்திருக்கிறார். இக் காலக்கெடுவில மீண்டும் மாற்றம் ஏற்படாது இருந்தால் போதும்.

மாநாட்டுத் தீர்மானங்களை அரசாங்கத்திடம் சமர்ப்பிப்பதுடன், அவற்றைப் பற்றி வலியுறுத்திக் கூறுவேன் என்றும் உள்ளூராட்சி அமைச்சர் மாநாட்டில் கூறியிருக்கிறார். இத்தனை காலமும் தமிழரசு மாநாட்டுத் தீர்மானங்களை அரசாங்கம் ஆராய்ந்ததற்கும், இம்முறை ஆராயப்போவதற்கும் நிறைய வேறுபாடு இருக்கிறது. கடந்த காலங்களில் குரோத நோக்கத்துடன் அத்தீர்மானங்கள் ஆராயப்பட்டன. இம்முறை அரசாங்கம் தீர்மானங்களை ஆராயப்போகும் முறையே வேறு. எனவே சில நல்லமுடிவுகளைநாம்அரசாங்கத்திடமிருந்து எதிர்பார்க்கலாம் என நம்புகிறோம்.

தமிழரசுக்கட்சித் தலைவர் டாக்டர் நாகநாதன் தமது தலைமையுரையில், பிளவுபடுத்தும் சக்திகளையும், தேசாபிமானமற்ற கும்பல்களையும் திருப்திபடுத்தும்கொள்கையைப் பிரதமரும் தேசிய அரசாங்கமும் கையாளக்கூடாதென்று கேட்டுக்கொண்டுள்ளார் இது ஒரு முக்கியமான வேண்டுகோளாகும் இன ஒற்றுமையையும், நிரந்தர அமைதியையும் நாட்டிலே நிலைநிறுத்தவேண்டுமானால், தேசத்துரோகக்கும்பல்களுக்கும் வகுப்புவாத சக்திகளுக்கும் தேசிய அரசாங்கம் பணிந்துவிடக்கூடாது. டாக்டர் நாகநாதனின் இந்தவேண்டுகோளுக்கு அரசாங்கம் செவிசாய்க்குமென்றே நம்புகின்றோம்.

மத்திய வங்கி

# பெயர்ப் பிரச்சினையில் புதிய திருப்பம்

—o—

## சட்ட அமைச்சு அலுவலகம் மாற்றத்தை ஏற்க மறுக்கிறது



பிரதமர் திரு. டட்லி சேனநாயகாவுக்கு மட்டக்களப்பு விமான நிலையத்தில் அளித்த வரவேற்பில் ஒரு காட்சி.

இலங்கை மத்திய வங்கிப் பெயர்ப் பிரச்சினை இப்பொழுது ஒரு புதிய திருப்பத்தை எடுத்திருக்கிறது. 'ஸ்ரீ லங்கா மகா வங்கி' என்று எழுதுவது சட்டப்படி தவறுனதாகும் என்று சட்ட அமைச்சு அலுவலகம் மத்திய வங்கிக்கு கடந்த வாரம் சுட்டிக் காட்டியிருக்கின்றது. இதனுல் கடந்த ஆண்டுக்கான ஆண்டறிக்கை மொழி பெயர்ப்பு (தமிழ்) தடைப்பட்டுள்ளது என்று அறியப்படுகிறது.

இலங்கை மத்திய வங்கியிலிருந்து சட்ட அமைசசின் கீழ் உள்ள சட்ட அமைப்புப் பகுதிக்கு அனுப்பப்பட்ட ஒரு தமிழ் மொழி பெயர்ப்பில் 'ஸ்ரீ லங்கா மகா வங்கி' என்று குறிப்பிடப்பட்டிருந்ததாம். சட்டமைப்புக் காரியாலயம் 'ஸ்ரீ லங்கா மகா வங்கி' என்பதை சிவப்பு மையினுல் அடித்து 'இலங்கை மத்திய வங்கி' எனத் திருத்தி அனுப்பியிருப்பதாகவும் அறியப்படுகிறது. இதைத் தொடர்ந்து மத்திய வங்கி நிர்வாகிகள் நீண்ட நேரம் கூடி ஆலோசித்திருக்கிருர்களாம். நீண்ட ஆலோசனையின் பின்னர் அத்திருத்தத்தைப் பொருட்படுத்தாது 'ஸ்ரீ லங்கா மகா வங்கி' என்று எழுதும்படி மொழி பெயர்ப்பு பகுதிக்கு வாய் மூல உத்தரவு இடப்பட்டதாகவும் வாய்மூல உத்தரவை மொழி பெயர்ப்புப் பகுதியினர் ஏற்கமறுத்து எழுத்து மூலம் அவ்வுத்தரவை அனுப்பும் படி கூறினுர்கள் என்றும் தெரிகிறது.

இதைத் தொடர்ந்து மீண்டும் வங்கி நிர்வாகிகள் கூடி ஆலோசனை நடாத்திவிட்டு எந்த உத்தரவையும் எழுத்து மூலம் வழங்காது, தமிழ் மொழி பெயர்ப்புகளை தற்காலிகமாக நிறுத்தி வைத்திருக்கிருர்களென்று அறியப்படுகிறது.

இதற்கிடையில் திறைசேரி 686ம் இலக்க சுற்று நிருபத்தை வங்கி ஊழியர்களுக்கு விநியோகிப்பதிலும் வங்கி நிர்வாகம் ஒரு புதிய முறையைப் பின்பற்றி தமிழ் ஊழியர்களைப் பழி வாங்குவதுடன், அரசாங்கத்தின் முடிவுக்கும் மாருகச் செயற்படுகிறதாம். இச் சுற்றறிக்கையின் ஆங்கில, தமிழ்ப் பகுதிகளை ஒரு தாளில் அச்சிட்டு ஆயிரக்கணக்கில் ஒவ்வொரு ஊழியர்க்கும், தொழிற் சங்கங்களுக்கும் விநியோகிப்பதாகவும், தமிழ்ப்பகுதியைத் தனியாக 24 பிரதியெடுத்து வங்கியின் எட்டுப் பகுதிகளின் தலைவர்களுக்கும் ஒருவருக்கு மூன்று விகிதம் அனுப்பியிருக்கிருர்களென்று தெரிகிறது. இந்த முறையினுல் தமிழ் ஊழியர்கள் புறக்கணிக்கப்பட்டிருப்பதுடன் தேசிய அரசாங்கத்தின் மொழிக் கொள்கையும் உதாசினப்படுத்தப்பட்டிருக்கிறது. அதே நேரத்தில் தமிழ் மொழியிலான சுற்றறிக்கையை தனியாக அச்சிட்டதில் ஒரு அரசியல் தந்திரம் மறைந்திருப்பதாகவும் மத்திய வங்கிப் பேச்சாளர் ஒருவர் நமது நிருபரிடம் விளக்கியுள்ளார். தமிழ் மொழியிலான சுற்றறிக்கை சிங்கள வகுப்புவாத தினசரிகளின் பார்வைக்குக் கிட்டினுல், அவர்கள் அதைப்படம் பிடித்து 'இதோ மத்திய வங்கியில் தமிழ் தனியாக ஆட்சி செய்கிறது' என்று பிரச்சாரம் செய்யவும் வசதியேற்படுமாம்.

## தமிழரசுக்கட்சி தலைவர் உரை பற்றி ஜனதின

தமிழரசு மாநாட்டில் நிகழ்த்திய டாக்டர்நாகநாதனின் தலைமைப் பேருரை அரசியல் முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.

நிகழ்காலம் மகிழ்ச்சிகரமானதென்பதை எடுத்துக் காட்டி எதிர்காலம் சுபிட்சம் நிறைந்ததென்று படம் பிடித்துக் காட்டுவதற்கு டாக்டர் நாகநாதன் விரும்பவில்லை. இதிலிருந்து தெரிவதென்னவெனில், இரகசிய ஒப்பந்தம் முழுவதும் பூரணமாக அமுல்நடத்தப்படும்வரை அவர்கள் தங்களின் பேரம் பேசும் போக்கைக் கைவிடமாட்டார்கள் என்பதே.

திருவாளர்கள் திருச்செல்வம், நாகநாதன் கூறுவதின்படி பார்த்தால், அவர்கள் எல்லாவற்றையும் விட உயரே தூக்கிப் பிடிப்பது தாங்கள் 'தமிழர்கள்' என்பதைத்தான். 'முதலில் நாங்கள் தமிழர்கள். அதன் பிறகுதான் மற்றவை' என்பது அவர்களின் தாரக மந்திரம். அத்தகைய நபர்களுடன் சேர்ந்து தேசிய ஒற்றுமையைக் கட்டி எழுப்புவது நொறுங்கிவிழும் நிலையிலுள்ள கூரையின்மீது அத்திவாரக்கல் நாட்டுவதுபோலாகும்.' இவ்வாறு 'ஜனதின' (28-ˎ-66) எழுதியுள்ள தலையங்கத்தில் குறிப்பிட்டுள்ளது.

இத்தலையங்கத்தில் மேலும் குறிப்பிடடிருப்பதாவது:-

'டாக்டர் நாகநாதன் தலைமையுரையில் திரு. டட்லி சேனநாயக்காவையும், திரு. ஜயவர்த்தனவையும் வெகுவாகப் பாராட்டியுள்ளார். தங்களைப் பின்பற்றுபவர்களின் மத்தியில் அவ்விருவர்கள் மீதும் நம்பிக்கை ஏற்படுத்தவேண்டும் என்பதற்காகவே அவர் அவ்வாறு பாராட்டியுள்ளார்.

தமிழ்மொழிக்கு நியாயமான அந்தஸ்து வழங்கும் முயற்சியை நாசமாக்குவதற்காகத் திரு. ஜெயவர்த்தன கண்டிக்குப் பாதயாத்திரை ஏற்பாடு செய்தார் என்பது தமிழ்மக்களின் நினைவிலிருக்கிறது. அத்துடன் 1956ல் வகுப்புவாத மோதலுக்குத் தலைமை தாங்கியவை திரு ராஜரத்தினவின் விமுக்தி பெரமுனவும் ஐ.தே. கட்சியும் என்பதும் தமிழ் மக்களுக்கு ஞாபகமிருக்கிறது. ஆகவே பதவி ஆசையால் ஏழுகட்சிக் கூட்டுடன் சேர்ந்ததை மூடி மறைப்பதற்காகவே மேற்கண்டவாறு கூறவேண்டியது டாக்டர் நாகநாதனின் கடமையாகியுள்ளது.

அந்தந்த மாகாணங்களில் வசிப்பவர்களின் மொழியை ஆங்காங்கு உத்தியோக மொழியாக்குவது தமிழரசுக் கட்சியின் நோக்கமாதலின், அது நிறைவேறியிருப்பது கண்டு அவர்கள் மகிழ்ச்சி தெரிவிக்கின்றனர்.

இதுபற்றி பிரதமர் என்ன கூறுகிருர். பருத்தித்துறையிலிருந்து தேவேந்திர முனை வரை சிங்களம் உத்தியோக மொழியாக்கப்பட்டுள்ளது என்று திரு. டட்லி சேனநாயக்கா வெற்றிக்கோஷம் எழுப்பும்போது, அந்தந்த மாகாணங்களின் மொழியை உத்தியோக மொழியாக்குவதற்கு பிரதமர் இடமளித்துள்ளார் என்று டாக்டர் நாகநாதன் கூறுகிருரென்ருல் இவ்விருவரில் பொய் சொல்லுவது யார் என்பதைப் பிரதமர் வெளியிட வேண்டும்.

கடந்த சில வருடங்களில் இலங்கை பொருளாதாரத்தில் வங்கரோத்து நிலைக்கு வந்துவிட்டதென்று டாக்டர் நாகநாதன் கூறுகிருர். வட பகுதிமக்கள் 100க்கு 70பேர் அரசாங்கத்துக்கு செலுத்த வேண்டியவரிகளைச்செலுத்தவில்லை என்று முதலாளித்துவப் பத்திரிகைகள் அண்மையில் ஒரு செய்தியை வெளியிட்டிருந்தன. அந்தவரிகளைச் செலுத்திவிட்டால் இலங்கையின் வங்கரோத்து நிலைமையை ஓரளவு தவிர்த்துவிட முடியும்.'

### டாக்டர்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தேரோ தமிழரசுக் கட்சித் தலைவர் டாக்டர் இ. மு. வி. நாகநாதனிடம் கூறியுள்ளார்.

கல்முனை மாநாட்டிலிருந்து கொழும்பு திரும்பும் வழியில் டாக்டர் நாகநாதன் அவர்கள் மாநாயக்க தேரோவை தொடர்புகொண்டு இல்லம் சென்று சிறிது நேரம் பல அரசியல் விடயங்களையிட்டுக் கலந்துரையாடினுர்.

மாநாயக்கா அவர்கள் தமிழ் - சிங்கள மக்களின் உறவு பலம்பெற நாம் அனைவரும் முயற்சி எடுக்க வேண்டும் என்று கூறினுராம். அப்பொழுது டாக்டர் அவர்கள் இது சொல்லளவில் மட்டும் இருந்துவிட்டால் போதாது, செயலில் நாம் இறங்கவேண்டும் என்று கூறிவிட்டு, தமிழ் மொழிச் சட்டவிதிகள் நிறைவேற்றப்பட்ட பொழுதிலும் அது இதுவரை பூரணமாக அமுல் நடத்தப்படவில்லை என்று கூறினுர். இதைக் கேட்ட மாநாயக்கா அவர்கள் இச்சட்டவிதிகளை உடன் அமுல் நடாத்துவதுபற்றித் தாம் பிரதமருடன் கதைப்பதாகக் கூறினுர்.

மேலும் பல விடயங்களைப் பற்றி இருவரும் பேசிக் கொண்டிருக்கையில் பல்கலைக் கழகப் பிரச்சினை எழுந்தது. அப்பொழுது டாக்டர் அவர்கள் இந்தப் பல்கலைக் கழகக் கோரிக்கையைக் குறிப்பிட்ட சிலரே எழுப்புகிருர்கள் என்றும், தமிழ்ப் பல்கலைக் கழகம் நிறுவப்பட்டால் அங்கு சகல மத போதனைகளுக்கும் வசதி ஏற்படுமென்றும் தெரிவித்தார். அப்பொழுது மாநாயக்கா அவர்கள் தாம் சயாம் நாடு செல்ல இருப்பதாகவும், அங்கிருந்து திரும்பியதும் தமிழ் பல்கலைக்கழகம் பற்றிப் பிரதமருடன் பேசுவதாகவும் கூறினுராம்.

## அடிமைகளாக........

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

★ "தமிழ் பேசும் மக்கள் அரசாங்கத்துடன் என்றுமே அவசியமில்லாமல் மோதிக் கொள்ளும் குணமில்லாமல் இருக்கிருர்கள் என்பதை பிரதமருக்கு அளிக்கும் இவ் வரவேற்பில் தெரிவிக்கவிரும்புகிறேன்"

★ பிரதமர் டட்லி சேனநாயக்கா கொள்கை அடிப்படையில் செயலாற்றுபவர். நேர்மைக்கும் மனச்சாட்சிக்கும் அவர் கட்டுப்பட்டவர். பதவி ஆசை அற்றவர்"

★ "எங்களைப் பொறுத்த வரையில் நாம் என்றுமே கொள்கையைக் கடைப்பிடிக்கிருேம்"

★ "பிரதமர் அவர்களின் மற்றுமொரு பெரிய குணம் 'நான் செய்வேன்' என்பதைச் செய்து முடிக்கும் மன உறுதியாகும்"

கல்முனையில் நடைபெற்ற இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மாநாட்டுக்கு வருகை புரிந்த பிரதமர் டட்லி சேனநாயக்கா அவர்களை வரவேற்றுப் பேசுகையில் மேற் கண்ட கருத்துக்களை தமிழரசுத் தந்தை திரு. சா. ஜே. வே. செல்வநாயகம் கூறினுர்கள்.

## கல்முனையில் பிரதமர்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

உரை நிகழ்த்த இன்று கிடைத்த சந்தர்ப்பம் என்பதை உள்ளம் திறந்து கூறுகின்றேன் '

"எங்கள் ஆட்சிக் காலத்தில்எந்த ஒரு இன மக்களுக்காவது தீமை நேர்ந்தால் எனது பதவியைத் துறக்க சிறிதும் தயங்க மாட்டேன்"

' திரு சா. ஜே. வே. செல்வநாயகம் அவர்கள் கடந்த காலத்தில் நடாத்திய போராட்டங்கள் சிங்கள மக்களுக்கு எதிரான போராட்டங்களல்ல"

கல்முனையில் நடைபெற்ற இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பத்தாவது தேசிய மாநாட்டின் இறுதி நாள் நிகழ்ச்சியில் கலந்து கொண்டு உரை நிகழ்த்திய பிரதமர் திரு. டட்லி சேனநாயக்கா அவர்கள் மேற் கண்ட கருத்துக்களைக் கூறினுர்.

### அடுத்த இதழில்

★ கொழும்பு விவேகானந்த சபை மண்டபத்தில் 28-6-66 அன்று உள்ளூராட்சி அமைச்சர் கனம் மு. திருச்செல்வம் கலந்து கொண்ட ஒரு புத்தக வெளியீட்டு விழாவில் 'தம்பிக்கும்' 'துரைக்கும்' நடைபெற்ற சொற்போர்களும், வேறு பல சுவையான தகவல்களும்,

★ தமிழரசுத் தந்தையுடன் திரு டட்லி சேனநாயக்கா சேர்ந்து தோன்றும் புகைப்படத்துடன், கல்முனை மாநாட்டில் பிரதமரும், தமிழரசுத் தந்தையும் நிகழ்த்திய முழுப்பேச்சுகளும் (பேணிப் பாதுகாக்கக் கூடிய முறையில்) இடம் பெறும்.

# காலைப் பூக்கள்

சந்திரனை வரவேற்பதற்காக இயற்கைக்கன்னி வான மேடையை வண்ணக் கோலங்களால் அலங்கரிக்கத் தொடங்கி விட்டாள். நட்சத்திரங்கள் நகை முகங் காட்டி மலர்ந்து மின்னின. பலவர்ண முகிற் திரைகள் வான மேடையில் தவழ்ந்தாடி கண்ணைக் கவர்ந்தன.

இரவு மணி எட்டடித்தது.

மலை மாதாவின் வெப்ப மூச்சு இழைந்து வந்தது. சந்திரனின் சிரிப்பில் அது குளிர்ந்தது. நான் மெல்ல எழுந்தேன். சுகானந்த நிலவை சுவைத்துக் கொண்டே நடந்தேன். எத்தனையோ நாட்களுக்குப்பின் இன்றுதான் இயற்கையின் இனிய இரவில் உலவி வர முடிகிறது.

நினைத்துப் பார்த்தேன்; நினைவு இனித்தது. மனப் பூவில் உணர்வு மணம் பரப்புகின்றது. அந்தி மல்லிகையின் மணம் மூச்சைத் துளைத்தது. மனக்குளத்தில் நினைவுப் பூக்கள் நகைகின்றன...... "கோதை...!"

இதயத்தில் மணந்து கொண்டே இருக்கும் அந்த அழகிய பெயர்-பெயருக்கு உரியவளின் முல்லைச் சிரிப்பில் ஒளிருகின்ற இன்ப ஜாலம்...

'கோதை...! இன்னும் ஒரே ஒரு மாதம்...என் இதயத் தடாகத்தில் மலர்ந்து விடுவாய்...வாடாமலர் நீ... வண்ணமலர் நீ...'

என் நினைவில் கோதை அழகாகச் சிரித்துக் கொண்டு தோன்றினாள். நினைவுக் கண்ணாடியில் அவள் முகம் ஜொலித்தது. பார்த்துக் கொண்டே இருந்தேன். நேரத்திற்கு கால்கள் இருப்பது நினைவில் படவேயில்லை.

மணி பதினொன்றடித்தது.

வீடு சென்று படுத்தேன். உறக்கம் வரவில்லை. நினைவுப் பூக்கள் மலர்ந்தன.

இனிமை தவழும் குரல். நிமிர்ந்தேன். கண்கள் அகலவில்லை. 'இனி ஒழுங்கா கொழுந்து எடுக்குறேனுங்க...இன்னக்கி மட்டும் மன்னிச்சுக்கங்க கணக்கப் பிள்ளை ஐயா..."

பச்சைக்கிளி போல் அழகு; அவள் குரலில் பயமும், பணிவும் கலந்து வந்தன. தோட்டத்துக்குப் புதிதாக வந்தவள். ஐந்து மொட்டைப் பிடுங்குங்காக அன்றைய அவளது உழைப்பைப் பறித்துக் கொள்வது மனிதத்தன்மையாகுமா?

'சரி...சரி...இந்த தட்டவை மட்டும் மன்னிக்கிறேன்... இனிமே ஒழுங்கா வேலை செய்யணும்...'

'சரிங்க...'

அவள் பறந்து போய் விட்டாள். எனக்குச் சிரிப்பு வந்தது.

அதன் பிறகு அவள் குற்றமில்லாமல் கொழுந்தெடுப்பாள். சின்னக்குற்றங்கள் இருந்தாலும் 'அப்படிச் செய்யக்கூடாது' என்று குறையைச் சுட்டிக் காட்டுவேன். அது கடமையல்லவா? சிறு பிழைகளுக்காக பல இருத்தல் கொழுந்துகளை இல்லாமல் செய்து, 'அரைப்பெயர்' போட்டு 'வேண்டிய'வர்களுக்கு 'புனர்ஜென்மம்' அளிப்பது என் கொள்கைக்கே முரணானது.

மலைத்தாயின் மலர்ந்த முகத்துக்காக, கண்ணீர்சிந்தி பட்டினி கிடந்து-துரும்பாய் இளைத்து உழைக்கின்ற கூட்டத்தினைக்காணும் போது உள்ளத்தின் ஒரு பகுதியில் அழுகுரல் ஒலிக்கின்றது. 'பசிக்கிறது' என்ற துன்பக் குரல்களும்-'உடுப்பில்லை' என்கிற துயரக்குரல்களும், 'பிரஜா உரிமையில்லை' யென்ற உரிமைக்குரல்களும்-'தோட்டக்காட்டான்' என்ற நாகரிகவாதிகளின் ஏளனக் குரலும் கேட்டுக் கேட்டு எங்களுக்குப் புளித்துப்போய் விட்டவைகள். இவற்றைஎன் நண்பன் உமாபதி சுவராசியத்துடன் விவாதிக்கும் போது என் கண்கள் பல முறைகலங்கியிருக்கின்றன. உழைக்கும் அந்தக் கூட்டத்தில் நானும் ஒருவன் தானே?

அன்றும் அப்படித்தான் அவனும் நானும் கதைத்துக் கொண்டிருந்தோம். அடுத்த 'லயத்தி'லிருந்து பெருங்கூச்சல் எழுந்தது. எழுந்து ஓடினோம். ராசுவின் 'காம்பரா' வைச்சுற்றி ஒரு கூட்டமே இருந்தது. ராசு பெரிதாக அழத் தொடங்கினான்.

'பெரிய கணக்கப்புள்ளக் கிட்ட கேட்டுத்தானுங்களே இந்தக் காம்புராவுக்கு வந்தேனுங்க...இப்ப வெளியப் போவச் சொல்றீங்களே... இது நியாயங்களா? கடவுளுக்கே அடுக்காது!' என்றான் ராசு. எனக்கு எதுவுமே தோன்றவில்லை.

'விசயத்தை ஒழுங்கா சொல்லுங்க...' என்றேன், வந்திருந்தவர்களைப்பார்த்து. கையில் பூட்டு வைத்திருந்தவன் கூறினான்.

இவங்க வந்து ஒரு மாசமாகலே...போன கெழமை வரைக்கும் பணியா லயத்தில இருந்தாங்க...மூந்தாநாள் தொரை உத்தரவு இல்லாம இந்த காம்பராவுக்கு வந்திட்டாங்க...அதான் தொரை இந்த காம்பராவுக்கு பூட்டுப் போடச் சொன்னாருங்க...' என்றான்.

நான் ஒரு முறை அவனைக் கூர்ந்து நோக்கினேன். அவன் விழித்தான்.

'துரைக்கு எப்பிடி இவுங்க இந்த காம்பராவுக்கு வந்தது தெரியும்?' என்று கேட்டான். அவன் கள்ள விழி விழித்தான்.

'ஏன், உனக்கு காம்பரா வேணுமின்னா, துரையிடம் பந்தம் பிடிக்கணுமா? போன மாசம் நீதானே காம்பரா கேட்டது?' என்றேன்.

'ஆம்' எனத்தலையாட்டினான் அவன். ராசுவின் பக்கம் திரும்பினேன். 'ராசு...நீ ஏன் அந்தக் காம்பராவை விட்டு இந்தக் காம்பராவுக்கு ...துரை உத்தரவு இல்லாம வந்தே...' என்று கேட்டேன்.

'பெரிய கணக்கப்பிள்ளைக் கிட்டக் கேட்டுத்தானுங்க வந்தோம்...நேத்து அவரு ஆசையை மறுத்ததால தொரைக்கிட்ட எனக்குத் தெரியாதுன்னுட்டாரு... ஆசையை நெறைவேத்தி வைக்காட்டி நீதிகூட செத்துப்போகுது...'

எமது சிறுகதை

திடுக்கிட்டு நிமிர்ந்தேன். கோதையின் குரல். அவள் துயரம் வழிய நின்று கொண்டிருந்தாள். திகைப்புநீங்கு முன்னர் தொடர்ந்தாள் அவள். 'சின்னக்கணக்கப் பிள்ளை ஐயாவே அந்த வீட்டைப் போய்ப்பாருங்க... விடா அதுண்ணு... ஒரே இருட்டு... மழை பெஞ்சா பொத்து ஊத்துது...அதுல எப்பிடிங்க இருக்கிறது...?'

நிச்சயமாக அது வீடல்ல தான் என்பது பார்த்த உடனேயே தெரிந்தது. ஆயிரம் பொத்தல்கள். சூரிய ஒளி ஈட்டிகள் போல தகரத்தைப் பொத்துக் கொண்டு பாய்ந்த வண்ணமிருந்தது. காற்று புகுவதற்கு ஒரு யன்னலைக் கூடக்காணோம்! வெளியில்விறகுக் குச்சிகள்போடக் கூட வசதியில்லை. அந்த 'லய'த்தில் உள்ள மற்ற மூன்று காம்பராக்களும் அதே நிலைதான். யாருமே அங்கு குடியிருக்கவில்லை.

அடுத்த நாள் சிபாரிசின் படி துரைவந்து லயத்தைப் பார்வையிட்டார். அவருக்கே உண்மை அப்போதுதான் தெரிந்தது. 'சரி இருக்கிற காம்பராவிலேயே இருக்கட்டும்...' என்று கூறிப்போனார்.

அன்று ஒரே தலைவலி. அரைநாள் லீவு எடுத்துக்கொண்டு வீட்டில் படுத்துக் கிடந்தேன். எனது அம்மா வேலைக்குச் சென்றிருந்தாள்.

மலையிலிருந்து தண்ணீர் குடிக்க வந்த இரு பெண்களின் பேச்சில் 'சின்னக் கணக்கப் பிள்ளை' என்ற பேச்சு அடிபட்டது. அடுத்த வீட்டுப் பெண்ணின் சிரிப்பும் செவியில் மோதியது. கூர்ந்து கேட்டேன். என்னடியம்மா இது...? அதுக்குள்ளே சின்னக் கணக்கப்பிள்ளை ஐயாவை சொக்குப் பொடி போட்டு மயக்கிட்டாளே...' என்றாள் ஒருத்தி. என் உள்ளம் வேதனையடைந்தது.

கோதை என்ன லேசுப்பட்டவளா? மாகெட்டிக்காரி...ஆனாப் பாவம் கணக்கப் பிள்ளை...' அவர்கள் போய் விட்டார்கள்.

தலைவலியை விட உள்ளத்தின் வலியைத்தான் பொறுங்க முடியவில்லை.

என்ன உலகம் இது? அபவாதங்களை பரப்புவதில் ஏன் தான் இவர்களுக்கு இத்தனை ஆவலோ? கோதை மயக்குக் காரியா? இருக்கவே முடியாது! கள்ளமில்லா அவள் முகத்தைப் பார்த்தாலே பசி பறக்குமே... அவளா கெட்டவள்? என உள்ளத்தில் ஒளியேற்றிய கோதையா கெட்டவள்? ச்சீ! புற உடம்பில் அழகும் அகத்தில் அசிங்கமும் சூழ்ந்த கொடுமையான உலகம்! 'எதனைத்தான் கூறினாலும்... என் கோதை...! நீ என்னுடையவள்...நீ எனக்கே உரியவள்...'

என் தலைமயிரில் பூவிரல்கள் அளைந்தன. விழித்த போது என் கோதை சிரித்துக்கொண்டே குனிந்தாள். அவள் கைகளைப் பற்றிக் கொண்டேன்.

என்னவோ சொன்னீர்களே...யாரும் எதுவும் சொன்னாங்களா?'

'இல்லை கோதை...மதியின் மீது மாசு கற்பிக்க முயல்வது அதன் அழகைத்தான் மிகைப்படுத்துகிறது... மதி தனக்கு வரும் துன்பத்தினை கண்டு துளியும் அஞ்சாது... கோதை என்ற எனது மதியும் இதோ புன்னகை ஒளியை வீசிக்கொண்டு நிற்கிறதே'''.

'புத்தகத்தில் படிச்சதையெல்லாம் பாடமும் ஆக்கிக்கிட்டீங்க போலருக்கே... தலை இன்னம் சுடுதே...வலிக்குதா தலையை?'

நெற்றியில் பட்ட மொட்டு விரல்களின் ஸ்பரிசத்தில் தலைவலி இன்னும் கூட நிற்கப் போகிறதா?

'மதியில் எப்போதும் குளிர்ச்சிதான் நிறைந்திருக்கும்!'

கன்னங்குழிய ஒரு முறை அழகாக என் கோதை சிரித்தாள். 'என்னங்க...எத்தனை நாளக்கித்தான் ஊர்ப்பேச்சைக கேட்டுக்கிட்டு இருக்கிறது? கண்ணுச்சாமி மகனுக்கு என்னைய கட்டிவைக்க அண்ணா முடியாதின்னுட்டாரு...அதான தொரைக் கிட்ட பந்தம் புடிச்சிட்டான்... இப்ப கண்டதெல்லாம் சொல்லி நம்ப பேரைக் கெடுக்க முனைஞ்சிருக்கான்... இதெல்லாம் வர்றதுக்கு முன்னுக்கே...'

அவள் நிறுத்திவிட்டு மறுபுறம் முகத்தைத் திருப்பிக் கொண்டாள்.

'அன்னக்கி வீட்டை வாங்கிக் குடுத்தது பெருசில்ல... என்னைய நெரந்தாமா ஒங்க வீட்டில வச்சிருக்கிறதுதான் பெருசு...'.

'உன் அண்ணனிடம் நேற்றே கதைத்துவிட்டேன்...அடுத்த மாசமே நம்ம ரெண்டு பேருக்கும் கல்யாணம்...'

சொல்லிவிட்டு நிமிர்ந்த போது என் கோதை இல்லை. பொன் வண்டு பறந்துபோய் விட்டது. என் உள்ளத்தில் இன்பப் பூக்கள் மலர்ந்தன... கோதை ஒரு மாசம் பொறு—அப்புறம் என்னுடையவள்...துன்பக்குழியில் இன்பத்தைப் பொதித்த கோதை... மனப்பூவிலே மணம் பரப்ப விரைந்து வா...'.

நினைவுப் பூவின் வாசனையோடு உறங்கிவிட்டேன்.

(4)

தேயிலைத் தளிர்கள் செழுமையுடன் வளர்ந்து கிடந்தன. அதைப் பறித்து கூடைக்குள் போடும் கன்னியரின் கை விரல்கள்...என் கோதை நினைவுக்குள் இருந்து தலையைச் சாய்த்து சிரித்தாள்.

இன்னும் அவள் வரவில்லையே...

ஒரு சின்னப்பையன் என்னை நோக்கி ஓடிவந்தான். 'என்ன' என்று கேட்டேன்...

'கணக்கப்பிள்ளை ஐயா...! கோதை அக்கா...அக்கா... செத்துப் போயிடுமாம்...ஒங்களை கூட்டியரச் சொன்னிச்சி...'

ஐயோ...! என் கோதை!', விரைந்து ஓடினேன்.

என் கரங்களுக்குள் முகத்தைப் புதைத்துக்கொண்டு அழுதாள் கோதை. என் இதயத் தடாகம் வற்றியது அதில் மலர்ந்திருந்த என் கோதை என்னும் பூ...வாடிக் கிடந்தது.

'ஏன் கோதை... அண்ணன் எங்கே? என்ன வந்தது உனக்கு?'

'அண்ணவா...? டாக்டரை கூட்டியாரப் போயிருக்காரு...வீண் வேலை...

எனக்கு வேற எடத்தில... பணத்துக்காக கலியாணம் நடக்கப் போவுது...நான்... நான்...நஞ்சு சாப்பிட்டேன்...பொழைக்க மாட்டேன்...என்னைய மன்னிச்சிடுங்க... காலையில பூத்து அந்திக்கி வாடுற பூ...நான்...' அவள் சாய்ந்துவிட்டாள். 'கோதை...!' என்று நெஞ்சு வெடிக்கக் கத்தினேன். ஆனால் என் கோதை திரும்ப கண் விழிக்கவேயில்லை. அவளது அண்ணன் வந்து கதறினான்.

என் இதயத் தடாகத்தைப் பார்த்தேன். அங்கு துளியளவு நீர் கூட இல்லை. பூ வாடி உதிர்ந்தது.

வைகறைப் பொழுதில் மலர்ந்து பனித் துளிகள் மறையு முன்னமே வாடி விட்ட மலர்போல என் கோதை கிடந்தாள்...எனது கண்கள் சொரிந்த துளிகள் அந்தப் பூவுடலின் மீது சிந்தின...என்றாலும் என் பூ மலராதே...ஆனால் மணம்... மறையாதே...

ஆசைக் குழி தூர்ந்து போய் கிடந்தது. தள்ளாடி நடந்து கொண்டே இருந்தேன். காலின் அடியில் ஏதோ மென்மையாக... குனிந்து பார்த்தேன்...ஒரு பிடி தேயிலை அரும்புகள்! அப்போதுதான் பறிக்கப்பட்டவை. அதிலிருந்து காலைப் பனித்துளிகள் சிந்தின!

கோதை...! என்னை தவிக்க வைத்து நீ மட்டும் போய் விட்டாயே...'

என் கையிலிருந்த இளந் தளிர்கள் ஒவ்வொன்றாக கீழே உதிர்ந்தன!

(யாவும் கற்பனை)

சி. பன்னீர்ச்செல்வம்

**ஆனந்தா லேகியம்**

இதன் குணத்தை ஒரே நாளில் அறிந்து கொள்ளலாம்.

நிர். 174, ஆனந்தா வைத்தியசாலை என்ற விலாசத்துடன் இந்த அடையாளத்தைப் பார்த்து வாங்குங்கள்

ஆனந்தா லேகியம் நாள் தோறும் மலசலத்தை சுகமாகக் கழித்து அசதி, சோம்பல், மேல் கால், கை, கணுக்களில் வலிகள், அஜீரணம், பசியின்மை, பித்த வாய்வு, புளியேப்பம், வயிற்றுப் பொருமல், வயிற்று வலி, இடுப்பு வலி, நெஞ்சு வலி, சிரங்கு பற்றுகள், சொறி, தேமல், நெஞ்சு எரிவு, திரேகம் காந்தல், கண் எரிச்சல், உள்ளங்கால், கை எரிச்சல், வாய்வுக் குத்து, நெஞ்சடைப்பு, சகலவித வாய்வுகள், வாதக் கடுப்புகள் முதலிய அநேக வியாதிகள் தீரும். சிலகாலம் சாப்பிட்டு வந்தால் மூல வியாதி அடியோடு தொலைந்து போகும். பத்தியமில்லை.

பெரியது ரூபா 6-00 சிறியது ரூபா 3-25

இத்துடன் "ஆனந்தா தைலத்தை" த் தேய்த்து வந்தால் அதிக உஷ்ணம், கண் எரிச்சல், மூலச் சூடு, பித்த மயக்கம், கை கால் எரிவு முதலான அநேக வியாதிகளை நீக்கி மூளைக்குக் குளிர்ச்சியையும் கண்ணுக்குப் பிரகாசத்தையும் கொடுக்கும். சகல வியாதிகளுக்கும் விபரமடங்கிய கேட்லாக் எழுதினால் இனாமாக அனுப்புவோம்.

பெரியது ரூபா 6-00 சிறியது ரூபா 3-25

வி. பி. பி. செலவு வேறு.

தயாரிப்பாளர்:

ஆனந்தா வைத்தியசாலை,

நிர். 174, செட்டியார் தெரு, கொழும்பு-11

# இலங்கையின் இன்றைய...

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

தும் ஆட்சி காலத்தில் இந்தத் தந்திரோபாயங்கள் சந்தேகத்தையும் வெறுப்புணர்ச்சியையும் பகைமையையும் வளர்த்து இனக் கலவரங்களைக் கிளறிவிட்டன.

'ஒரே நாட்டில் வாழும் பல்வேறு மக்களிடையே சந்தேகம், ஒற்றுமையின்மை, குழப்பங்கள்; மோதல்கள் இருந்தால் அந்நாடு பல துறைகளிலும் சீர் குலைந்து சிதைந்தொழிந்து போய்விடும். இதற்குப் புறநடை எதுவுமேயில்லை என்பது காலந்தோன்றிய காலமுதல் வாழ்ந்த நாடு ஒவ்வொன்றினதும் சரித்திரமும் கூறும். பொருளாதாரத்துறை அழிந்துபடும்; கலாச்சாரத் துறையில் பொது வாழ்வும் நன்னெறியும் இழிநிலை அடையும். இலங்கைத் திருநாட்டின் சரித்திரமும் கடந்த சில வருடங்களாக இதே மாதிரித்தானாயிற்று. பொருளாதாரத்துறையில் நாம் அழிவின் விழிம்புக்கு வந்திருந்தோம்; கலாசாரத்துறையில் சோம்பலும் தேக்க நிலையும் ஏற்பட்டது. பாடசாலைக் கல்வியில் ஏற்பட்டிருக்கும் பெருங் குழப்பத்தையும் பல்கலைக் கழகங்களின் வீழ்ச்சியையும் திரும்பிப் பாருங்கள். பொது வாழ்வில் எமது நாடும் மக்களும் இவ்வளவு கடை நிலைக்குள் ஒருபோதும் வீழ்ந்ததில்லை. அற்பத்தனமான அரசியல் இலாபத்துக்காக அநீதிக்கும் மனக்கசப்புக்கும் இனக்கலவரத்துக்கும் தூபமிடத் தயாராயிருந்த நாட்டுத் துரோகிகளே இந்த நிலைமைக்குக் காரணமாயிருந்தார்கள்.

## துரோகிகள்

'தமது சுயமைத் தனமான நோக்கங்களுக்காக மதத்தைக் காட்டிக் கபடக் கூக்குரல் எழுப்பி அப்பாவி மக்களை ஏமாற்றி மோசடி செய்வதில் எமது நாட்டுக்கும் நாட்டின் எதிர்காலத்துக்கும் துரோகிகளாயிருக்கும் இவர்கள் இம்மியும் வெட்கமடைகிறார்களில்லையே என்பதை நினைக்க மனம் பெரிதும் வேதனையடைகிறது.

'நாடெங்கணும் வெறுப்புணர்ச்சியை விற்பனை செய்து வரும் இந்தப் போலித் தீர்க்கதரிசிகள் நாட்டு மக்களுக்கு இன்னுமொரு படுபாதகம் இழைத்து வந்திருக்கிறார்கள்.

முதலாளியாயிருப்பவர்கள் அரசாங்கமாயிருந்தாலும் சரி தனியார் துறையாயிருந்தாலும் சரி இவர்களைக் கண்டிப்பாகத் தொழிலாளிகள் தமது விரோதிகளாகக் கருத வேண்டும், அவர்களின் வீழ்ச்சிக்காகப் பாடுபட வேண்டும் என்ற எண்ணத்தைத் தொழிலாள வர்க்கத்தினரிடையே பரப்பிவிட்டிருக்கிறார்கள் இவர்கள்.

"இரண்டு விடயங்களை இங்கே குறிப்பிட விரும்புகிறேன். ஒன்று இலங்கையிலே தொழிற்சங்கத் தலைவர்களாயிருப்பவர்கள் தம்மிலே தொழிலாளர்களல்லர். இரண்டு, தொழிற்சங்கங்கள் தடை செய்யப்பட்டு வேலை நிறுத்தம் செய்ய முயலுபவர்கள் இராசத் துரோகிகளாகக் கருதப்பட்டுத் தூக்கிலிடப்படும் உருசிய, சீன வாழ்க்கை முறையின் சீடர்களாகவும் பிரசாரகர்களாகவும் இருக்கிறார்கள் இந்தத் தலைவர்கள் இந்த நிலையைக்காணும் போது எவர்க்கும் உடனே சிரிப்புத்தான் தோன்றும். ஆனால் சிரிப்பதற்கான ஒரு விடயமல்ல இது. நாட்டில் நிகழ்ந்து வரும் ஒரு சோக நாடகம் இது.

"இன்று இலங்கையில் ஓர் அவசர நிலை இருக்கிறது. ஆனால் இந்த அவசர நிலை பொருளாதாரத் துறையிலேயன்றி அரசியற்றுறையிலல்ல; வங்குரோத்து நிலை, பண வீக்கம், அதிகரித்து வரும் வேலையின்மை, அவசிய பொருட்களிற் பற்றுக்குறை ஆகியவை எம்மை நாற்புறமும் சுற்றிவளைத்து நிற்கும் இக்கட்டத்தில், உடலுழைப்பாளிகள் வெண்ணுடை ஊழியர்கள், நிர்வாகிகள், ஆட்சித்துறையினர், திட்ட வல்லுனர்கள், கொள்கை வகுப்பவர்கள் ஆகியோர் அனைவரும் அணிதிரண்டு ஒருமித்துப் பணியாற்றுவது இப்போது பெருந்தேவையாகிவிட்டது.

"பொருளாதாரச் சீர் குலைவிலிருந்து நாட்டை மீட்டுக் குறுகிய காலத்தில் தேசிய வளர்ச்சியிலும் சுபீட்சத்திலும் துரிதமான மாற்றங் காண வேண்டுமாயின் நாமனைவரும் எம்மை இப்பெரும் பணியில் அர்ப்பணித்து நெற்றி வியர்வை நிலத்தைக் குளமாக்க உழைக்க வேண்டும். தேர்ச்சி பெற்ற தொழிலாளிகளும் சாதாரண தொழிலாளிகளும் உட்பட அனைவரும் இந்த ஒன்றுபட்ட உழைப்பின் இலாபத்தில் தத்தமக்குரிய நியாயமான பங்கைப் பெறவேண்டும்.

"வேலையில் சிரத்தையின்மைக்கோ தொழிலாளர்களின் மந்தகெதித் தந்திரங்களுக்கோ கவனமின்மைக்கோ தகுதியின்மைக்கோ ஒன்றிணைப்பின்மைக்கோ கூட்டுப் பணியின்மைக்கோ எமது இந்தப் போர் முனையில் இடமளிக்க முடியாது.

"தேசிய வளர்ச்சியையும் செல்வச் செழிப்பையும் நோக்கி முன்னேறும் இம்முயற்சியை வியர்த்தமாக்கும் எந்த ஆட்கூடத்தையோ, நிறுவனத்தையோ அவர்களது தேசத் துரோகச் செயலுக்காக ஈவிரக்கமின்றி நசுக்கியெறிய வேண்டும். அதேபோல வெறுப்பையும் இனக் குழப்பத்தையும் ஊக்குவிக்கும் கூட்டத்தினரையும் வேரோடு களைந்தெறிய வேண்டும்.

எமது தேச நலனுக்கு அத்தியாவசியமாயிருக்கும் இன ஒற்றுமைக்கும் தொழிலாளர் உற்சாகத்திற்கும் தீங்கு விளைக்கும் தற்போதய கூட்டு எதிர்க்கட்சியினரோ குறைந்தது அவர்களின் தலைவர்களோ தாம் செய்யும் பெருந்துரோகத்தை நன்ருக உணர்ந்து கொள்ள வேண்டியது அவசியம்.

"எமது மக்கள் அடிப்படையில் நற்குணம் கொண்டவர்கள் என்பதிலும் சமாதானத்திலும் நல்லெண்ணத்திலும் பற்றுடையவர்களென்பதிலும் துரிதமான முன்னேற்றத்திலும் சுபீட்சத்திலும் பெரு விருப்பம் கொண்டவர்களென்பதிலும் எனக்குப் பூரண நம்பிக்கையுண்டு. அப்பொழுது தான் அவர்கள் சாந்தமும் செழிப்புங் கொண்ட ஒரு நாட்டைத் தமது குழந்தைகளுக்கும் குழந்தைகளின் குழந்தைகளுக்குமாகப் பின் விட்டுச் செல்ல முடியும்.

"தெளிவாகவும் துணிவாகவும் நாம் கூறுவதை எமது மக்களுக்குப் புரிய வைத்தோமானால் அவர்கள் பெருந்தன்மையுடன் எமது கூற்றுக்குச் செவிசாய்க்கத் தவறமாட்டார்கள். அரசாங்க நிர்வாகத்திலும் தொழிற்றுறையிலும் உயர் பதவிகளிலுள்ள ஊழியர்கள் தமது சேவையில ஊக்கமும் உணர்ச்சியும் காட்டுவார்களானல் எமது மக்கள் வயிற்றை இறுக்கக்கட்டி மனமுவந்து உழைக்க என்றுந் தயாராயிருப்பார்கள்.

"இன்று உயர்நிலையிலுள்ள அதிகாரிகளிற் சிலருக்கு அவர்களது தரத்திற்கு ஏற்ற குணதிசயமும் வன்மையுமில்லாவிட்டால் அவர்களை அகற்றிவிட வேண்டும். எமது தேசப்பணியில் முக்கிய கேந்திரங்களில் சோம்பேறிகளுக்கும் அரைத் திறமைசாலிகளுக்கும் இடமிருக்க முடியாது. இவ்வாறன தலைமையின் கீழ அணிவகுத்துப் பணி புரியத் தொழிலாளர்கள் உற்சாகத்துடன் ஓடிவருவார்கள் என்பதில் எனக்கு ஐயமில்லை. தொழிலாளர்களுக்குக் கிடைத்த சட்ட பூர்வமான உரிமைகளும் பாதுகாப்புகளும் தொழில் வளர்ச்சிக்கும் தேசிய முன்னேற்றத்திற்குமென்றே அதுவும் ஒரு சனநாயக அமைப்பிற்றன் திரட்டப்பட்டவை என்பதையும் அவற்றைத் தம் தொழிலை அழிக்கவோ அரசாங்கத்தை வீழ்த்தவோ பயன்படுத்தக் கூடாது என்பதையும் தொழிலாளர்கள் அப்போது விரைவில் உணர்வார்கள். குழப்பங்கள் ஏற்பட்டு எதேச்சாதிகார அரசாங்கம் ஒன்று தோன்றுமானல் தொழிற்சங்க இயக்கம் தடை செய்யப்படும். அப்பொழுது தொழிலாளர் தலைவர்கள் வேலை நிறுத்தத்திலோ நேரடி நடவடிக்கையிலோ ஈடுபட முயன்ருல் ஒன்றிற் சிறையிலடைபடுவார்கள் அல்லது தூக்கிலிடப்படுவார்கள்.

இந்தப் பின்னணியில் எமது கட்சியினதும் மக்களினதும் கடமை தான் என்ன?

"முதலாவதாகத் தமக்கோ பிறர்க்கோ அநியாயம் இழைக்கப்படும் போது அதை ஒரு போதும் பார்த்துக்கொண்டு நிற்காதிருக்கக்கூடிய கட்டுப்பாடும் ஒற்றுமையுங் கொண்ட மக்களை நாம் உருவாக்க வேண்டும். ஊருக்குபதேசம் செய்யுமுன்னர் எமது வீட்டை நாம் சுத்தமாக வைத்திருக்க வேண்டும். எமது சொந்தச் சகோதரர்களுள் ஒரு பகுதியினருக்கு எமது மூதாதையோரும் நாமும் சாதியின் பேரில் இழைத்துவந்த நீதியீனத்தையும் அவமரியாதையையும் கைவிட்டுவிடுவதுடன் தீண்டாமை என்ற சாபக்கேடையும் அவசரத்தில் நாம் அகற்றிவிட வேண்டும். தமிழ் பேசும் மக்கள் மத்தியில உரிமை குறைந்த ஒரு பிரிவினர் இருக்க விட்டு வைப்பது எமக்கு ஒரு பலவீனமும் எமது கலாச்சாரத்துக்கு ஓர் ஆபத்துமாகும். தனது கலாச்சார ஆத்மீக வாழ்விலுள்ள இந்தக் கறையை அகற்றி எமது இனம் தன்னைத் தானே தூய்மைப்படுத்திக் கொள்ள எனது தலைமைப்பதவி காலத்தில் நான் நெஞ்சார்ந்த முயற்சி எடுப்பேன்.

"தமிழ் பேசும் மக்களின் சாதி, மதம், இனம், வாழ்விடம் எதுவாயிருந்தாலும் இலங்கையிலுள்ள தமிழ் பேசும் மக்கள் அனைவரும் ஒன்றுபட வேண்டும் என்று எப்போதுமே வற்புறுத்தி நின்ற கட்சி இலங்கைத் தமிழரசுக் கட்சிதான் என்று நாம் பெருமையுடன் கூற முடியும். இந்த ஒற்றுமையினல் ஏற்பட்ட பலத்தைக் கொண்டு எம்மோடு பொதுத் தாயகத்தில் வாழும் சிங்களச் சகோதரர்களுடன் நிறைவான ஒற்றுமையையும் கருத்திணக்கத்தையும் ஏற்படுத்த வேண்டும் என்பதே எமது குறிக்கோளும் பிரார்த்தனையுமாகும்.

"எம்மிடையே சாதி மத பிரதேச அடிப்படையில் பிளவுகளை ஏற்படுத்தி அவ்வழியில் பிரதேசத் தலைவர்களாகவோ உள்ளூர்த் தலைவர்களாகவோ அலலது ஒரு பிரிவின் தலைவர்களாகவோ அரசியற் பிரபல்யத்தைப் பெற்று விடலாம் என்று நம்பி உழைக்கும் சில தவருன வழிச்செல்லும் தன்னலம் பேணிகள் எமமத்தியில் இருக்கிறார்களென்பது வேதனைக்குரிய விடயம். அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு! தமிழ் பேசும் மக்களிடையே சாதி மதம் பிரதேசம் என்ற அடிப்படையில் பிளவுகளுக்குத் தூபமிட்டு, நமக்குள் நம்மை மோதவிடுவதன் மூலம் எம்மனைவரையும் அழித்தொழித்துவிட வேண்டும் எனத் திட்டமிட்டுச் செயலாற்றி வரும் ஒரே சிங்கள வகுப்புத் துவேஷத் தலைவர்களின் தீவிர முயற்சிகளை முறியடித்து தமிழ் பேசும் மக்களும் மனிதர்களாய் இங்கு வாழ்வதனல் ஒன்று திரண்டு ஒரு கொடியின் கீழ் பலம் பெற்று நிற்கும் தமிழினம்தான் அதைச் சாதிக்க முடியும். அத்துடன் நாட்டின் சோதனை மிக்க இக்கட்டத்தில் ஒரு கொடியின் கீழ்த் திரண்டு ஒன்றுபட்டு நிற்கும் தமிழினம்தான் திரு டட்லி சேனநாயக்காவுக்கும் அவரது தலைமைக்கும் நிறைந்த ஆதரவும் உரமும் அளிக்க முடியும்.

(மீதி அடுத்த இதழில்)

# மொழி வழி பிரிந்த மூத்த சங்கம்

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

போதிலும் துணைத் தலைவர்களில் ஒருவராகவும் ஆட்சிக் குழு உறுப்பினராகவும் சங்கத்தின் ஆரம்ப நாள் முதல் இருந்து வந்திருக்கிறார்.

திரு. ஜீவராசா அவர்கள் அரசாங்கசேவையில் பழுத்த அனுபவமுடையவர். எழுதுவினைஞர் சேவையில் உள்ள நெளிவு சுழிவுகளை நன்ருக அறிந்திருப்பவர் இவர். ஐந்து ஆண்டுகளுக்கு முன் ஒரே அரசாங்க சேவையில் வெள்ளி விழாக் கொண்டாடி விட்டார். கடந்த பதினெட்டு ஆண்டுகளாக திறைசேரியில் பணியாற்றி வருகிறார். அதற்கு முந்திய 12 வருட காலத்தில் வேறுபல திணைக்களங்களிலும் கடமையாற்றியிருக்கிறார். இன்று இவர் கடமையாற்றுவது திறைசேரியின் ஒரு கிளையான வெளிநாட்டு உதவித் திணைக்களமாகும்.

## புதிய செயலாளர்

பொதுச் செயலாளர் பதவியை ஏற்றிருக்கும் திரு. ந. அமிர்தானந்தா ஏற்கனவே அ. எ. வி. சங்கத்தின் கணக்காய்வுத் திணைக்களக் கிளைச் செயலாளராகக் கடமையாற்றியிருக்கிறார். அரசாங்க சேவையில் பத்து வருட காலமாக இவர் பணியாற்றிவருகிறார். நல்ல துடிப்பும் இனப் பற்றும் மிக்க இளைஞர் திரு. அமிர்தானந்தா. இவர் பதுளையைப் பிறப்பிடமாகக் கொண்டவர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

## புதிய பொருளாளர்

பொருளாளர் பதவியை ஏற்றிருக்கும் திரு. ஆ. தேவராசன் அவர்கள் தொழிற்சங்கத் துறையில்மட்டு மல்லாது இலக்கியத்துறையிலும் மிகுந்த ஈடுபாடு கொண்டவர். பருத்தித்துறை காட்லிக் கல்லூரியில் கல்வி பயின்ற திரு. தேவராசன் 1955-ம் ஆண்டு முதல் அரசாங்க சேவையில் கடமையாற்றிவருகிறார். சங்கத்தின் ஆரம்பகால உறுப்பினரான இவர் சங்க வழக்குகளில் முன்னாள் செயலாளருக்கு வலக்கரமாக இருந்து உழைத்து வந்திருக்கிறார். கொள்கைப் பற்றும், சங்கத்தின் சட்ட திட்டங்களுக்கு கட்டுப்பட்டு நடக்கும் தன்மையும் கொண்டவர் திரு. தேவராசன்.

கல்லூரி மாணவனுக இருக்கும் நாளிலேயே 'தமிழ் ஓசை' என்ற பத்திரிகையையும் இவர் நடாத்தியிருக்கிறார். சுதந்திரன் மூலம் எழுத்துலகில் கால் வைத்த இவர் இன்று ஆங்கில ஏடுகளிலும் அவ்வப்போது பல கட்டுரைகளை எழுதி வருகிறார். கொழும்புத் தமிழ்ச் சங்கத்துடன் நெருங்கிய ஈடுபாடு கொண்டிருப்பதுடன் பன்மொழிப் புலவர் கா. அப்பாத்துரை அவர்களை 1957-ம் ஆண்டு இலங்கைக்கு அழைப்பதற்கு இவர் பெரிதும் பாடுபட்டிருக்கிறார். அனைத்துலகத் தமிழாராய்ச்சி மன்றத்தின் இலங்கைக் கிளை பொதுத் தொடர்புச் செயற் குழு உறுப்பினராகவும் இப்பொழுது இருந்து வருகிறார். மேலைப் புலோலியில் சதாவதானி நா. கதிரவேற்பிள்ளை நினைவாக மன்றம் அமைத்து கடந்த 12 ஆண்டுகளாக இச்சங்கத்தின் செயற் குழு உறுப்பினராகவும் பணியாற்றி வருகிறார். பேராசிரியர் கந்த முருகேசனார், புலவர் பாண்டியனார் ஆகியோரிடம் தமிழ் கற்ற பெருமையும் இவருக்கு உண்டு.

## வள்ளுவர் விழா

இரத்தினபுரி வள்ளுவர் மன்றம் இரத்தினபுரி நகர மண்டபத்தில் 1-7-66 பி. ப. 5 மணிக்கு வள்ளுவர் விழாவைக் கொண்டாடுகின்றது.

வித்துவான் பண்டிதர் சைவபுலவர் க. வேந்தனார் ஈழவேந்தன் அவர்கள் செல்வி வள்ளிமாரிமுத்து நசிமா ஏ. பசீர் ஆகியோர் விழாவில் உரையாற்றுவார்கள்.

SATHYALAYAM'S
KASA NASINI
ஸத்யாலயம் காச நாசனி

"காச நாசனி" எல்லாவித மான இருமல்களையும், அவை, எவ்வளவு நாள் பட்டதானலும், கடுமையானதானலும், விரைவில் சுகப்படுத்துகிறது. பீனிசம், நெஞ்சுச் சளி (ப்ரோங்கைடீஸ்) சயரோகம் முதலிய வருத்தங்களுக்கும் மிகச் சிறந்தது.

"ப்றதிச்சாய தகோகாஸ:
காஸாத் ஸம்ஜாயதேக்ஷய"

என்னும் பிரமாணப்படி, பீனிசத்திலிருந்து இருமலும், இருமலிலிருந்து சயரோகமும் உண்டாகிறது. ஆதலால் இருமலை வளர விடாமல், தகுந்த மருந்தை உடனே பாவிக்க எவரும் கடமைப்பட்டிருக்கிறார்கள்.

நீண்டகால ஆராய்ச்சியின் பயனுகக் கண்டு பிடிக்கப்பட்ட இம் மருந்தின், சீக்கிரமாயும், நிரந்தரமாயும் குணமளிக்கும் தன்மை, மற்றெரு இருமல் மருந்துக்கும் இல்லை என்பதை பாவித்தவர்கள் சொல்லுகிறார்கள்.

அளவு: 15 - 25 சொட்டுகள்
விகிதம் தினம் மூன்று முறை.
விலை: 1 அவு. போ. ரூ. 5/-

என் என் குரு மெடிக்கல் ஹால்
80 புதுச்செட்டித் தெரு
கொழும்பு - 13.

# தரமற்ற படங்கள் தயாராவது ஏன்?

## டைரக்டர் சிறீதர் கருத்து

'சமீபகாலமாக படித்த வர்களும் தூய்மை யுள்ளம் கொண்டவர்களும் பாரதத்தில் குறிப்பாக தமி ழகத்தில் தயாராகும் படங் களை ஏளனம் செய்வதை ஒரு பழக்கமாக்கி கொண்டு விட் டார்கள் தமிழ்ப்படங்கள் மிக மட்டமானதென்றும். அது இளைஞர்களைக் கெடுத்து தீய வழியில் அவர்களைச் செலுத்திவிடுகிறதென்றும் கண்டிக்கிறார்கள். கண்டனம் செய்பவர்கள் தாம் கலை இலக்கிய கருத்துக்கள் நிறைந்த நல்ல படங்களுக்கு ஆதரவு தந்திருந்தால் அப் படிப்பட்ட உயர்தரப் படங் கள் எந்த வகையிலாவது தோலவியடைந்திருக்குமா என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும்' இவ்வாறு ஒரு பேட்டியில் டைரக்டர் ஸ்ரீதர் கூறினார்.



அவர் மேலும் கூறியதாவது:—

'தமிழ்ப் படங்களுக்கு எதிராகத் தொடுக்கப்படும் கண்டனங்களைப் பார்த்தால் திரைப்படத் தயாரிப்பாளர் கள் மனித இனத்தையே அழிக்கப்புறப்பட்டு விட் டார்களோ என்று எண்ணத் தோன்றும். சிலர் உயர்தரப் படங்களைத் தயாரித்தபோதி லும் கண்டனம் செய்பவர் கள் ஒன்றில் பார்த்திருக்க மாட்டார்கள் அல்லது அலட் சியமாக ஒதுக்கியிருப்பார் கள்.

'தமிழ் படமா? மகாமட் டம் என்று கூறுபவர்கள் ஹாலிவுட்டிலிருந்து வெளி யிடப்படும் ஆங்கிலப்படம் என்றால் ஓடோடிச் செல்கின் றனர். ஒரு ஆவா கார்டின ரும் கிளார்க் கேபிளும் உரை யாடும் காதல் காட்சியை உருக்கமாக உணர்ச்சியுடன் காவியமாகப் போற்றிப் புக ழுகிறார்கள்.

'இரசிகர்கள் தமிழ் படங் களில் கவர்ச்சியையும் காதல் காட்சியையும் அதிகம் விரும்புகின்றனர். அவைகள் இல்லாவிட்டால் படம் நன் றாக இல்லை என்று கூறுகின்ற னர். படத்திலுள்ள கதையின் போக்கு, நடிகர் நடிகை களின் நடிப்புத் திறமை, இவற்றை ஆராய்வதில்லை.

'நான் தயாரித்த 'வெண் ணிற ஆடைக்கு ரசிகர்கள் ஆரம்பத்தில் பேராதரவை தரவில்லை. நாட்கள் செல்லச் செல்ல என் படத்தை திட்டிய அதே வாலிபர்கள் திரும்பத் திரும் பத் வந்து பார்த்தனர்.

'கண்டனம் செய்வதி லேயே பொழுதைப் போக் கும் ரசிகர்கள தயாரிப்பாள ருக்கு உதவி செய்யவோ யோசனை கூறவோ முன் வருவதில்லை. நல்ல படங் களை வெளியிட உற்சாக மளிப்பதுடன், அப்படங்கள் வருமானத்தில் தோல்வி யடையாமற்செய்தாற்தான் இப்பணியில் தொடர்ந்து ஈடு படமுடியும்.

'இப்பொழுது வெளிவரும் படங்கள் எல்லாம் வியா பார நோக்கத்துடன்தான் தயாரிக்கப்படுகின்றன. கதையே கிடையாது. பாட் டும் நடனமும் இருந்து அபி மான நடிகர்கள் நடித்துவிட் டால் படங்கள் 'ஓகோ' என்று ஓடிவிடுகின்றன. தயா ரிப்பாளர்கள் இப்படியான படங்களைத் தயாரிக்கக் காரணமென்ன?

'நல்ல ரசிகத்தன்மை பொது மக்களிடம் குறைந்து விட்டது. அதனால் தான் 'பொழுது போக்கு' என்ப தற்காக எல்லாக் கதம்பங் களையும் நிறைத்து-மக்களுக் குப் பயன்படாத-ஜனரஞ்சக மான படங்கள் வந்துகொண் டிருக்கின்றன.

'அறிவுள்ளவர்களும் படம் பார்க்கும் படித்த இர சிகர்களும் முன்வந்து நல்ல படங்களுக்கு ஆதரவு தர வும் மட்டமான படங்க ளுக்கு எதிர்ப்பு அளிக்கும் வகையில் அறிவைப்புகட்டி பிரச்சாரம் செய்து படிக்கா தவர்களையும் நல்ல வழியில் அழைத்துச் செல்ல முன்வர வேண்டும். இம்மாதிரி பொறுப்பை ரசிகப் பெருமக் கள் ஏற்றால் தயாரிப்பாளர் களும் இனி மக்களை ஏமாற்றி முட்டாள்களாக்க முடியாது என உணர்ந்து உயர்தர மான படங்களைத் தயாரிக்க முன்வருவார்கள்'


# டிஸ்பிரின்

## வலியிலிருந்தும் காய்ச்சற் குணத்திலிருந்தும் நம்பிக்கையான துரித நிவாரணமளிக்கிறது.

டிஸ்பிரினை நம்பிக்கையுடன் உட்கொள்ளுங்கள். அது உங்களுக்கு உடனடி நிவாரணம் தரும்.




விரிவான ஆராய்ச்சிகள் செய்து விசேஷ சேர்வம்சங்கள் கொண்ட தாக தனி முறையில் தயாரிக்கப்பட் டது - டிஸ்பிரின். இதனால் தான் டிஸ் பிரின் விரைவாய் இரத்தோட்டத்தில் சேர்ந்து உடன் நிவாரணமளிக்கிறது.

தலைவலி, காய்ச்சற் குணம், உடல் வலி, பல்வலி, மாதவிடாய் முதலி யன தரும் வேதனையிலிருந்து விடு பட, டிஸ்பிரின் உட்கொள்ளுங்கள்.

உலகெங்குமுள்ள டாக்டர்கள் நம் பிக்கையுடன் சிபார்சு செய்வது டிஸ் பிரின்.

டிஸ்பிரினை உட்கொள்ளு தல் சுலபம். அதைத் தண்ணீரிற் கரைத்துக் குடிக்கலாம்; அல்லது வில்லையாகவே விழுங்கி விடலாம்.

றெக்கிற் அன் கோல்மன் தயாரிப்பு.

J.W.T.R.C.91


# ரசிகர்களை மகிழ்வித்த நடன அரங்கேற்றம்

சங்கீத, நடனப் பள்ளி யாக விளங்கும் கொழும்பு கலாலயத்தின் மாணவி ஒருவரின் நடன அரங்கேற்றத்தைக் கண்டு களிக்கும் வாய்ப்பு அண்மை யில் கொழும்பு ரசிகர்களுக்கு கிடைத்தது. இளமைப் பொலிவும் அழகின் அர வணைப்பும் கொண்ட செல்வி லோகாம்பிகை மெய்யப் பன், கொழும்பு லயனல் வென்ட் தியேட்டரில், நீதி அமைச்சர் திரு. விஜயமான முன்னிலையில் தமது பரதக் கலை அறிவை நன் முறையில் அரங்கேற்றம் செய்து நடன ரசிகர்களின் நன் மதிப்பை பெற்றுக்கொண்டார்.

அலாரிப்பு, சப்தம், வர் ணம் ஜதீஸ்வரம் என்ற பர தக் கலையின் பல்வேறு படி யான நடனங்களையும் ஆடிய செல்வி. லோகாம்பிகை, தில்லானா, விருத்தம் ஆகிய வற்றுடன் கச்சிதமாக தமது அரங்கேற்றத்தை பூரணத் துவமாக்கி, தமது கலைத் திறனை நிரூபித்தார்.

பாவங்களையும், அபிநயங் களையும் தாளக் கட்டோடு துரித கதியில் பிரதிபலிக்கச் செய்வது பரதநாட்டியக் கலையின் சிறப்பம்சம் எனி னும், அதில் போதிய பாவ மும் நளினமும் ஒத்திசைவாக இல்லாத பட்சத்தில் அது பூரணத்துவம் எய்தாது. பாத அசைவு மிக மிகத் துரி தமாக தெரிந்ததனால் அதனை மிகைப்படுத்தியது போல் தோன்றிற்று. பரதக் கலை இறைவனுக்கே அர்ப்பணிக் கப்படும் பூசைக் கலையாக இருப்பதனால், அங்கு பக்தி பாவத்திற்கு கூடிய இட முண்டு. வர்ணத்தில் அந்தப் பக்தி பாவத்தை செல்வி யோகாம்பிகை கொஞ்சம் கூடுதலாக பிரதிபலித்திருப் பாரேயானால், இன்னும் சிறப்பாக மிளிர்ந்திருக்கும்.

நாகேஸ்வரி பிரம்மா னந்தா, தனலட்சுமி சண் முகராஜா, ஆகியோரது இனிமை மிகுந்த இசையினு லும் இரத்தினம் (மிருதங் கம்) டி. வி. பிச்சையப்பா (வயலின்) டி. பி. தாஸன் (புல்லாங் குழல்) எஸ். சுப் பையா பிள்ளை (கிளாரி னெட்) ஆகியோரது சிறந்த பக்கவாத்திய ஒத்துழைப் பினாலும் செல்வி சாந்தா ரமணி மகேந்திரா, திருமதி கமலா ஜோன்பிள்ளை, ஆகி யோரின் நட்டுவாங்கத்தின் கீழ் செல்வி யோகாம்பிகை மெய்யப்பனின் நடன அரங் கேற்றம் ரசிகர்களுக்கு மகிழ்ச்சியூட்டுவதாய் அமைந்திருக்கிறது.

—ஜே. எஸ்.

# எனது முன்னேற்றத்துக்கு அறிஞர் அண்ணுவே காரணம்

## புரட்சி நடிகர் பெருமிதம்

“அறிஞர் அண்ணு அவர்களை சாதாரண தலைவராக நான் ஒரு போதும் கருதுவதில்லை. அவர் தனிப்பட்ட எனது வாழ்விலும், பொதுத் துறையிலும் எனக்கு வழிகாட்டிய பெருந்தகை. அவர் காட்டிய பாதையில் சென்றதனுல் தான் என்னுல் இன்று முன்னுக்கு வரமுடிந்தது. அறிஞர் அண்ணு அவர்களே எனது தெய்வம்’ இவ்வாறு மக்கள் திலகம் எம்.ஜி. ராமச்சந்திரன் சென்னை இராசேஸ்வரி திருமண மண்டபத்தில் நடைபெற்ற தனது வளர்ப்பு மகளின் திருமணத்தின் பின்பு நன்றி தெரிவித்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

எம். ஜி. ஆர் அவர்களின் வளர்ப்புமகள் ராதா மணிக்கும், திரு. கோபாலகிருஷ்ணனுக்கும் பேரறிஞர் அண்ணு தலைமையில் திருமணம் நடைபெற்றது. திருமணவிழாவிற்கு, கலையுலகப் பிரமுகர்களுடன், கழகப் பிரமுகர்களும் வருகைபுரிந்தனர். திருமணத்தின் பின்பு நன்றி தெரித்துப் பேசிய மக்கள் திலகம் மேலும் கூறியதாவது:—

‘சுயமரியாதை திருமணங்களை கலைஞர்கள்தான் அதிகமாக நடத்துகிருர்கள். சில கலைஞர்கள் திருமணத்துக்கு திருப்பதி செல்கிருர்கள் என்று ராதா அண்ணன் சொன்ஞர். சிலர் திருப்பதி செல்கிருர்கள் என்ருல்அதில் தவறில்லை. நான் அண்ணுவை கடவுளாக மதிப்பதால் அவரது தலைமையில் திருமணங்களை நடத்துகிறேன். வெங்கடாசலபதியை கடவுளாகக் கொண்டுள்ளவர்கள் அங்கே போகிருர்கள்’

## எம். ஜி. ஆர். மன்றங்கள் 20,001

மக்கள் திலகம் எம். ஜி. ராமச்சந்திரன் பெயரால், தமிழக மெங்கும் உள்ள மன்றங்கள் 20,001 என்று கணக்கெடுக்கப்பட்டுள்ளது.

வேறு எந்த தனி நபருக்கும் இவ்வளவு மன்றங்கள் இன்று வரையில்லையென்பது குறிப்பிடத்தக்கது.



தங்கச்சி, சினிமா உலகிலே உன்னை உயர்த்தி விடுகிறேன் பயப்படாதே. மற்றவர்களுக்கு உதவுவதே என் வேலை’ என்கிருரோ மக்கள் திலகம்? —‘கன்னித்தாயில்’ மக்கள் திலகமும், ஜெயலலிதாவும்.

## நடிகர் ரவிச்சந்திரன் விரைவில் இங்கு வருவார்

தென்னிந்திய சினிமா நடிகர் ரவிச்சந்திரன் மிக விரைவில் இலங்கை தமது இலங்கை விஜயத்தைப் பின்போட்டிருக்கிருர்.

‘காதலிக்க நேரமில்லை’ மூலம் அறிமுகமான ரவிச்சந்திரன் இதயக் கமலம், மோட்டார் சுந்தரம்பிள்ளை, கல்யாண மண்டபம், குமரிப் பெண் ஆகிய படங்களில் நடித்திருக்கிருர். ‘சந்திப்பு தேடி வந்த திருமகள்’ மெட்ராஸ் மைனர், பத்மினி பிக்சர்ஸ் படங்கள் மிக விரைவில் திரையிடப்பட விருக்கின்றன. ‘பகலவன் பிக்சர்ஸ், விஜய கோபால் பிக்சர்ஸ், ஜீவரத்தினம் பிக்சர்ஸ் தயாரித்து வரும் பெயரிடாப் படங்களில் நடித்து வரும் ரவிச்சந்திரன் மேலும் பல படங்களில் நடிக்க ஒப்பந்தமாகியுள்ளார். ‘காதலிக்க நேரமில்லை’ படத்தில் ‘விஸ்வநாதன் வேலை வேண்டும் என்று பாடி ரசிகர்களை மகிழ்வித்தது போல,‘குமரிப் பெண்’ படத்தில் ‘வருஷத்தைப் பாரு அறுபத்தியாறு’ என்று மேல் நாட்டு நடனமாடித் தென்னகத்தில் பெரும் பாராட்டைப் பெற்றிருக்கிருர்.

மலேசியாவைச் சேர்ந்த ரவிச்சந்திரன் சென்னைக்குப் படிக்க வந்து சினிமாவில் ‘ஜாலியான நடிப்புக்கு ரவிச்சந்திரன்’ என்ற நிலையை ஏற்படுத்திவிட்டார். ஆகஸ்ட் மாத முற்பகுதியில் இலங்கை வரும் ரவிச்சந்திரன் யாழ்ப்பாணம், காங்கேசன்துறை, கொழும்பு, கம்பளை, மன்ஞர், மட்டக்களப்பு ஆகிய இடங்களில் நடைபெறும் பொது நிகழ்ச்சிகளிற் கலந்து கொள்வார் என்று குரு விளையாட்டுக் கழகச் செயலாளர் திரு. கு. ஸ்கந்தராஜா தெரிவித்திருக்கிருர்.



அடியவன் அருணகிரிக்கு அறுமுகக் கடவுள் தோன்றி அனுக்கிரகிக்கும் ஆனந்தக் காட்சி. படர்-சினிமாஸ் திரைகளுக்கு வரவிருக்கும் அருணகிரிநாதர்.

# ஆண் வேடம் போட கொள்ளை ஆசை

## ஜெயலலிதா கூறுகிறர்

“எனக்கு ஆண் வேஷம் கனகச்சிதமாகப் பொருந்துகிறது. ஆண் வேடத்தில் நானிருக்கும் போது பழகியவர்களால் கூட என்னை அடையாளம் கண்டு பிடிக்க முடியாமல் போய் விடுகிறது. இவ்வாறு தமிழ்த்திரையுலகின் இளங்கதாநாயகியாக விளங்கும் ஜெயலலிதா கூறுகிருர். அவர் மேலும் கூறுவதாவது:-

‘‘சமீபத்தில் ஈ. வி. ஆர். பிக்சர்ஸ் ஒன்றுக்காக வீட்டிலேயே ஆண் வேஷம் போட்டுக் கொண்டு, ஸ்ருடியோவுக்கு கிளம்பினேன். அப்பொழுது வழக்கமாக என்னை சிறு குழந்தையிலிருந்து அறிந்த தபால் காரர் வந்தார். நான் நின்று கொண்டிருக்கும் போது என்னிடம் கடிதங்களைத் தராமல் வேலைக்காரியிடம் கொடுத்துவிட்டு திரும்பிஞர். அவர் திரும்பும் வரை நான் குரல் கொடுக்கவில்லை நான்கு அடிகள் சென்றிருப்பார். ‘போஸ்ட்மேன்’ என்றேன், என்குரலைக் கேட்டுத்திரும்பிய அவர் என் வேஷத்தைக் கண்டு, ‘‘அம்மா நீங்களா? நான் யாரோ என்றல்ல எண்ணிட்டேன்! அடகொஞ்சம் கூட அடையாளமே தெரியலியே’’ என்று அதிசயித்தார். எங்கள் மானேஜர் ராயனை ஒரு செய்தி சொல்வதற்காக அழைத்தேன். அறைக்குள் வந்தவர் என்னைப்பார்த்துவிட்டு வெளியே என்னைத் தேடி போஞர். அதைப்பார்த்து என் அம்மா சிரித்துவிட்டு அவரைக் கூப்பிட்டு, ‘இது யார்?’ என்று என்னைச் சுட்டிக் காட்ட, அவரும் ‘தெரியலிங்க’ என்ருர். என்னுல் சிரிப்பை அடக்கவே முடியவில்லை. பிறகு தான் என்னைப் புரிந்து கொண்டார். எனக்கு ஆண் வேஷம் போட்டுக் கொள்ளத்தான் மிகவும் ஆசை. இவர்கள் இருவருமே அடையாளம் கண்டு கொள்ளவில்லையென்ருல் வேஷம் கனகச்சிதமாக இருப்பதாகத் தானே அர்த்தம்.’’



முத்துராமனுக்கும், பத்மினிக்கும் அப்படித் தாங்கமுடியாத துயரம் என்னவாக இருக்குமோ?—கே. எஸ். கோபாலகிருஷ்ணனின் வெற்றிப்படமான ‘சித்தி’ சிலோன் எண்டர் டெயின் மெண்ட்ஸ் திரைகளுக்கு வந்ததும் தெரிந்துவிடும்.

## நாய் பிடிக்காத நடிகை

நாய் வளர்ப்பது நடிகைகளுக்கிடையில் ஒரு பெரிய ‘பாஷனுகி’ விட்ட இக்காலத்தில் தமிழ்த் திரையுலகில் நாயைக் கண்டாலே வெறுக்கும் ஒரு பிரபல நடிகை இருக்கிருர் என்ருல் ஆச்சரியமாக இருக்கிறதல்லவா?

ஒருநாள் இந்த நடிகை ஒரு ஸ்டுடியோவில் நடித்துக் கொண்டிருந்தார். படப்பிடிப்பு இடை வேளையின் போது வெளியே வந்து பேசிக் கொண்டிருந்த நேரத்தில் ஒரு சிறிய நாய்க்குட்டி இந்த நடிகையின் கால்களின் இடையில் படுத்துக்கொண்டு நகரமறுத்தது. சேலைத் தலைப்பை வேறு ருசிபார்க்கத் தொடங்கியது. இதைப் பார்த்த இந்த நடிகை நாயின் சேட்டை பொறுக்க முடியாமல் இப்படியும் அப்படியும் எழுந்து சென்ருர். நாய்க்குட்டி விட்டு விடுமா? அதுவும் பின்னுலே சென்று சேலைத் தலைப்பைக் கடித்திழுத்தது.

இதைக் கவனித்த பையன் ஒருவன் நாய்க்குட்டியை அங்கிருந்து அடித்து விரட்டினுன். இதற்குப் பின்பு இந்த நடிகைக்கு நாயைக் கண்டாலே பிடிக்காது. நாய் பிடிக்காத இந்த நடிகைதான் இன்றைய முன்னணி நட்சத்திரமாக திகழும் கே. ஆர். விஜயா.

வரவிருக்கிருர். காங்கேசன் துறை குரு விளையாட்டுக் கழகத்தின் அழைப்பின் மீது தமது காங்கேசன்துறை நண்பருடன் இலங்கை வர ரவிச்சந்திரன் விருப்பம் தெரிவித்துள்ளார். இம்மாதம் அவர் வருவதற்கான, சகல ஏற்பாடுகளும் செய்திருந்த போதிலும் புதிய படப்பிடிப்பு ஒன்றின முன்னிட்டு



தேவரின் வெற்றிச் சித்திரமான ‘கன்னித் தாயில்’ அசோகனும் கவர்ச்சி நடிகை விஜயாவும்—இப்படம் சிலோன் தியேட்டர்ஸ் திரைகளில் திரையிடக் காத்திருக்கிறது.

# மனிதப் புனிதர் முஹம்மத் (ஸல்)

இருள் எங்கும் சூழ்ந்திருந்தது; காணும் இடமெல்லாம் இருளின் ஆட்சியே காணப்பட்டது. இடமெல்லாம் இருள் பெற்றதன்றி இதயமெல்லாம் இருள் பெற்றிருந்தது. உள்ளமெல்லாம் இருளின் சாயல் ஊடுருவிச் சென்றிருந்தது. அந்த நேரத்திலே பேரொளி ஒன்று பிறக்கின்றது; காரிருள் நீங்கி கதிரவன் ஒளி பிறக்கின்றது. மாநிலத்தின் மாநகராம் மக்காவிலிருந்து வெளிப்பட்ட அந்த ஒளி மதீனுசென்று மீண்டும் ஒளி பெறுகின்றது. 'யத்ரிப்' என்னும் பழம் பெரும் நகரை 'மதீனமுனவ்வரா' ஒளி பெற்ற மதீனவாக மாற்றியது. அத்தோடு அந்த ஒளியின் சுடர்கள் ஒளி பெருக்க ஆரம்பித்தன. அண்டை நாடுகளிலும் அதன் ஆற்றல் மின்னித்துலங்க ஆரம்பித்தது. பாலைகளில், சாலைகளில், பனி படர்ந்த நாடுகளில் எல்லாம் அதன் பேரொளி படர்கின்றது. ஒளி தொடர்கின்றது.

மண்ணும் மதி குருடர்க் கண்ணும், மறு உலக விண்ணும் ஒளி யேற்று வீசின. மாநிலம் தனக்கொரு மணி விளக்கைத் தேடிக் கொண்டது; மதீனவில் அதைத் தாங்கிக் கொண்டது. மதீனவில் இலங்கும் மணிவிளக்கு அதன் ஒளிக்கதிர்களை எங்கும் படரவிட்டது. அதனுல் பாலைவனம் சோலை வனமாக, பட்ட மரம் பழுமரமாக, காடுகள் கழனியாக, நாடுகள் நகராக நாகரிகம் பெற்றன.

இலங்கையில் அந்த ஒளி உடனே பிரகாசித்தது. அறிஞர் அல்பிருனியின் கூற்றுப்படி முதலாம் உதயன் இலங்கையை ஆண்ட பொழுது-அதாவது ஹிஜ்ரி 75 அளவில் மதீனவின் இலங்கும் மணி விளக்கின் ஒளி இலங்கையில் வீசலாயிற்று.

## அல்ஹாஜ் எம். பி. எம். மாஹிர்

அந்த ஒளி இன்றும் பேரொளி தந்து கொண்டிருக்கின்றது. மதீனவில் இலங்கிய வண்ணம் மாநிலத்தையே இயக்கிக் கொண்டிருக்கின்றது. அந்த ஒளிதான் ஒளியின் ஒளியாக, விழியின் ஒளியாக, பாகின் சுவையாக பரிணமித்து விளங்கும் பேரொளி. முஹம்மத் என்ற பெயரைத் தாங்கி, முகமதில் ஒளியைத் தாங்கி, அனைவருக்கும் முகமன் கூறும் பேரொளியாக முஹம்மத் (ஸல்) அவர்கள் ஒளி மின்னித் துலங்குகின்றது.

முஹம்மத் (ஸல்) அவர்கள் தம் வாழ்வை ஓர் அறிஞர் பின்வருமாறு குறித்துள்ளார், 'மண்ணிலே பிறப்பதற்கு முன் ஆதரவு தரும் தந்தையை இழந்த மதலை-ஆறுவயது நிரம்புவதற்கு முன் அன்பைச் சொரியும் அன்னையைப் பறிகொடுத்த பாலகர்-ஆடு மேய்த்து வாழ்ந்த மதீனவின் மக்களுடன் புல்வெளியில் திரிந்த சிறுவர்-சீரியா நாடு சென்று சீரிய முறையில் வர்த்தகம் புரிந்த வணிகர்-சூழவாழ்ந்த மக்களின் பாழ்பட்ட வாழ்வைக் கண்டு பதை பதைத்த இளைஞர், வாழ்வுப் பிரச்சினைக்கு வழிகாண விண்ணையும் மண்ணையும் விழிகளை விரித்து விரித்துப் பார்த்த மனிதர்-சுற்றிலும் படர்ந்திருந்த இருளை நீக்க முயல்கையில் கல்லாலும் சொல்லாலும் தாக்குண்டு துன்பமும் துயரமும் ஏற்ற ஏந்தல் கடும் இடும்பைத் தந்தோர், கொடும் வேதனை அளித்தோர் அனைவரையும் வெற்றியின் சிகரத்தில் வீற்றிருக்கும் பொழுது மன்னித்தருளிய மனிதப் புனிதர், ஈடும் இணையுமற்ற நல்லோர் வழிகாட்டிய வேந்தன் ஒளிதந்த உத்தமர்-வாழ்வளித்த வள்ளல்-வளம்தந்த தொண்டல்-நலம் நல்கிய அண்ணல்-மண்ணும் விண்ணும் புகழ்பாடும் பேரும், சீரும், சிறப்பும் பெற்ற செம்மல்-ஆன்ம விளக்கேற்றிய அதிபர், ஆயிரமாயிரம் ஆண்டுகள் வாழும் வான் முதல்' என நனி சிறந்த முறையிலே குறித்துள்ளார் எம் அறிஞர் ஒருவர் பிரபல அறிஞர் முஸ்தபா பஹ்மி அவர்கள்,

'மனிதர்தான்; கண்காதை
வானேரை மிக்கப்
புனிதர்தான்; ஆத்மீகர்,
அழகர்!-எனவே
அவர்க்கு நிகராக ஆருமிலர்
உண்டு
அவர்க்கு அவரே நிகர்'

எனக் குறித்துள்ளது ஈண்டு பொருத்தமாக உள்ளது.

'நபிமணியின் தோற்றம் மனித இனத்திற்குப் புதியதொரு வாழ்வை, புதியதோர் ஒளியை, புதியதொரு நம்பிக்கையை, புதியதோர் உணர்வை, புதியதொரு சமுதாயத்தை, புதியதொரு பண்பாட்டை அளித்தது. இறைவனின் பேரருளைத் துணை கொண்டு மனித இனம் ஒரு புதிய நெடுஞ்சாலையிலே நடை போட்டது' என்று மௌலானா அபுல் ஹஸன் அலி நத்வி அவர்கள் அண்ணலைப் பற்றி அருமையாக விளக்கினர்கள்.

நபிகளில் சிறந்தவராக, சிறந்த மனிதராக, சிறந்த சமாதானப் பிரியராக சிறந்த மறுமலர்ச்சியாளராக, அரசியலில் சிறந்தவராக, சிறந்த நீதிபதியாக, சிறந்த தலைவராக, சிறந்த வீரராக, சுகாதாரத்தை வலியுறுத்திய அண்ணலாக, கல்விக்குயிர் தந்த காவலராக, சிறந்த வியாபாரியாக, சிறந்த வைத்தியராக, ஏழைப் பங்காளராக, விடுதலை வீரராக, சிறந்த வள்ளலாக, சிறந்த குடும்பத்தராக ஈற்றில் சிறந்த முஸ்லிமாக சிறந்து விளங்கினர்கள். சிறந்த மெய்ப்பொருளை அளவிலா மணியைத் தெரிந்து தெளிவு பெற்று வாழ்ந்தார்கள் மதீனவில் இலங்கும்மணி விளக்காம் முஹம்மத் (ஸல்) அவர்கள்.

'அகிலங்களுக்கெல்லாம் அருட்கொடையாகத் தாங்கள் அனுப்பப்பட்டுள்ளீர்கள்' என அருளினன் அல்லாஹ். 'திருநபியின் திருவாழ்வு திரு மறையின் திரு உரு' என்றனர் ஆயிஷா (றலி) அவர்கள் 'என்னருமை முஹம்மதைப் போல் எழிலுருவங் கண்டதில்லை' என்றனர் எந்தலர் தம் தோழர் அபூ ஹுரைரு (றலி) அவர்கள். நபியின் மகத்துவத்துக்கு எல்லையே இல்லை. எனவே, அவர்களை நாவால் எங்ஙனம் வருணிக்க இயலும்? என்றனர் அல்-இமாம் பூஸரீ (ரஹ்) அவர்கள். 'முஸ்லிம்களுக்கு முஸ்தபா (ஸல்) அவர்கள் ஒருவரே போதும்' என்றனர் அல்லாமா இக்பால் (ரஹ்) அவர்கள். கார் குலத்தைக் கண்டவுடன் களித்தாடும் மயில்போலும் சீர் முகத்தைக் கண்டவர்கள் சிறப்படைந்தார் நாயகமே' என்றனர் எம்மறிஞர் கவிஞர் ஒருவர். இவ்வாருக நாம் எவ்வாறு நோக்கினுலும் மேற்குறித்த அனைத்துக் கருத்துக்களுக்கும் இசைந்த பொருத்தத்தை இறைநபி (ஸல்) அவர்கள் வாழ்வில் பரக்கக் காணலாம்.

---

# உங்கள் நோய்?

பதிலளிப்பவர்:

**வைத்தியகலாநிதி என். கந்தையா**

## வாய் நாற்றமடிப்பது ஏன்? மனக் கவலைக்கு பரிகாரம் உண்டா?

வி. செல்வராசா,
மொங்கானப்புலம்.

கே: எனது தாயாரின் வயது 33. அவரின் மூக்கு இருதுவாரங்களும் அடைத்துக் கொண்டு தும்மல் வருகின்றது. நீர் -சளியும் வருகின்றது. மழையில் நனைந்தால் அதிகம். தக்க வைத்தியம் தரவும்.

ப: உடலுக்கு உயிருட்டி 'சி' சத்து அவசியம். எனவே தோடம் பழம், நெல்லிப்பழம் அவசியம் தினசரி வேண்டற்பாலது. அத்துடன் பீனிசரோகத்துக்குரிய ஆரம்பநிலையாக இருப்பதில் இப்போதே தகுந்த வைத்தியம் செய்தல் அவசியம்.

தலைக்கு- நல்லெண்ணையுடன் அகத்தியிலைச்சாறு சேர்த்து தைலம்பக்குவம் செய்து தினசரி வைத்துவரவும்.

செல்வி த. சுகிர்தம்,
சுன்னுகம்.

கே: எனது வயது 17. மாதவிடாய் மாதத்துக்கு இருதரம் வருகின்றது. அத்துடன் ............................ ...... இருக்கின்றது. தக்க முறையான சிகிச்சை கூறவும்.

ப: கர்ப்பப்பைக் கோளாறின் காரணமாக இப்படியான தொந்தரவு ஏற்படுகின்றது. கர்ப்பப்பைக்கு பெலன் கொடுக்கக்கூடிய முறையில் சிகிச்சை அவசியம். எனவே 'லோத்ரா' 'அசோகா' சேர்ந்த மருந்துகள் நல்ல குணத்தைக் கொடுக்கும். அத்துடன் அயுபஸ்பம், அய செந்தூரம் அளவுப் பிரமாணப்படி சாப்பிட வேண்டும்.

சுத்தமான ஆடைகள் அணிவதும், சுத்தமாக இருப்பதும், கடுமையான யோசனை, சஞ்சலம் மனக்கிலேசம் அடையாமலிருப்பதாலும், மற்றைய வியாதியைக் குணப்படுத்தப் போதுமானதாகும்.

க த சுப்பிரமணியம்,
காரைநகர்.

கே: எனது வயது 15. வாய் நாற்றமடிக்கின்றது. பற்கள் நன்றாக இல்லை யாது செய்ய வேண்டும்.

ப: சரியானபடிமலர் போகாத காரணத்தாலும், செமிக்கும் தன்மை குறைவினுலும், வாய், நாக்கு பற்கள் இவற்றை சரியான முறையில் சுத்தம் செய்யாமையாலும் வாய் நாற்றம் ஏற்படலாம். அன்றியும் பழுதான பற்கள் இருப்பதனுலும், ஏற்படும். எனவே உடற்கோளாறு யாதும் இல்லையெனக் கண்டால் பல் வைத்தியரிடம் சிகிச்சை பெறுவது நல்லது.

எஸ். நாதன்,
அங்கும்புற

கே: மணமாகாத எனது வயது 29. இரவில் உமிழ் நீர் ஊறுகின்றது. தூக்கம் குறைவு. தலைப்பாரம். சில சமயங்களில் உடலில் அரிப்பு ஏற்படுகின்றது. மேல் நாட்டு வைத்தியம் செய்தும் குணமில்லை,

ப: இரவில் அதிகம் உண்பதை தவிர்க்கவும். அத்துடன் மாப்பொருள் அதிகம் நன்மை தராது. இலகுவாக மலம் போவதற்கு கடுக்காய் அவித்துக் குடிப்பது நல்லது. மலபந்தம் இல்லாதிருந்தால் தலைப்பாரம் இல்லாது போய்விடும். இலகுவில் சீரணிக்கக் கூடிய உணவு நல்ல பலன் அளிக்கும். கறிவகையில், மிளகு. சீரகம், பெருங்காய், மல்லி மிதமாக பாவித்தல் வேண்டும்.

திருமதி க. நாகரெத்தினம்,
சுன்னுகம்.

கே: என் மகன் வயது 3. பிறந்த நாள் தொடங்கி தலையில் மயிர் இல்லை. தற்போது வருவதும் கொட்டுவதுமாக இருக்கின்றது. யாது செய்ய வேண்டும்.

ப: கவலை வேண்டாம். தலைமயிர் வளர்ச்சிக்குரிய கிரந்திகளின் சுரப்புக் குறைவினுல் இவ்வகைத் தொந்தரவுகள் ஏற்படலாம். அத்துடன் உயிருட்டிச் சத்துள்ள துளி மருந்து கொடுத்துவருவதுடன், நல்ல போஷாக்குள்ள உணவு வகைகளும் கொடுத்து வரவும்.

அ நடராசா,
கொழும்பு-3

கே: என் மனதில் எப்பொழுதும் ஒரு தெளிவற்ற நடுக்கம், அல்லது பயம் நிலவி இருக்கின்றது. உடலில் வருத்த மிருப்பதாக நான் சந்தேகப்படவில்லை. கவலைப்படும் அளவுக்கு பிரச்சனைகளும் இல்லை. நான் மணமாகாதவன். வயது 48 மணம் செய்து கொள்ளப் போவதுமில்லை.

ப: இளமையியோ அன்றேல் வாலிபப் பருவத்திலே ஏதோ ஒரு நிகழ்ச்சி, உங்கள் மனத்தை பற்றிக் கொண்டிருக்கலாம். அந் நிகழ்ச்சி ஒரு துக்கமானதாகவோ, வேதனையுள்ளதாகவோ இருக்கலாம். 48 வயது கடந்தும் இப்படியான நிகழ்ச்சி இருப்பதால் ஏதோ காதல் வயப்பட்டு, அதனுல் ஏற்பட்ட தோல்வியாகவும் இருக்கலாம். எதற்கும் ஒரு மனநோய நிபுணரின் நேரடிச் சோதனை நல்லதென அபிப்பிராயப்படுகின்றேன்.

ஏ. சி. எல். எஸ். குமார்,
யாழ்ப்பாணம்.

கே: எனது வயது 19. எனக்கு அதிகமாக பசி இருக்கின்றது உடல் வளர்ச்சியில்லை. எவ்வளவு சாப்பிட்டாலும் பிரயோசனமில்லை. அடிக்கடி பசி வருகின்றது. அத்துடன் இரவில் மலவாசலில் கடியுண்டு. வயிற்றுக் குமட்டலும் இருக்கின்றது. இதை நீக்க வழிதாருங்கள்.

ப: உங்களுக்கு பொதுவாக குடற்புழு வியாதி இருப்பதாக அனுமானிக்கின்றேன். சிறப்பாக கிரைப்புழு வியாதியாக இருக்கலாம். ஏனெனில் மலவாசலில் இரவில் கடிப்பதால் அப்புழுக்கள் அவ்விடத்தில் வந்து முட்டை இடுவதற்காக கடிக்கின்றன.

எனவே பாகற்காய் கிழமைக்கொருதரம் உண்ணவும் பாகல் இலைசாற்றுடன் பனங்கட்டி சேர்த்து காலை மாலை சாப்பிடுவது நல்லது.

பாகல்இலை சாற்றுடன் ஆமணக்கெண்ணைசேர்த்துக் காய்ச்சி காலையில் வெறு வயிற்றில் குடித்தால் சிறந்த பலன் அளிக்கும்.

பலாசம் விதையை பாலில் அவித்து தோல் நீக்கி தூள் செய்து காலை மாலை, ஒரு தேக்கரண்டி வீதம் பாலுடன் எடுக்கவும்.

இவற்றில் ஒரு வழியை பாவித்து வரின் மிக ஆச்சரியமான குணம் கிடைப்பது உறுதி.

'நடராசன்',
பருத்தித்துறை

கே: எனது முகத்தில் உள்ள பருக்கள் மாறி தழும்புகள் மாறவில்லை. பார்ப்பதற்கு அவலட்சணமாக இருக்கின்றது. வயது. 15.

ப: கவலை வேண்டாம். காலம் வரச் சரியாகும் வெண் சந்தனம் அரைத்து இரவில் பூசி காலையில் குளித்துவரவும்.

**உங்கள் நோய்?**
'சுதந்திரன்'
த. பெ. எண். 1183,
கொழும்பு-12.

# சங்க இலக்கியத்தின் உட் பொருட்கள்

வை. அ. கைலாசநாதன் பி. ஏ.

சங்ககாலத் தமிழ் மக்களுடைய வீர உணர்ச்சிகளின் வெளிப்பாடாய் நிகழ்ந்த வற்றைத் தொகுத்து ஏழு புறத்திணைகளாக வகுத்தனர்.

அவை வெட்சி, வாகை, வஞ்சி, உழிஞை, தும்பை, காஞ்சி, பாடாண் என்பனவையாகும்.

புணர்தல், பிரிதல் முதலிய தூய அக உணர்வொழுக்கங்களுக்குப் புறமாக முதல் ஐந்து திணைகளையும், அகத்துள் அடக்க இனிதற்ற கைக்கிளை, பெருந்திணை ஆகிய இரண்டு ஒழுக்கங்களுக்கும் புறமாகக் காஞ்சி, பாடாண் ஆகிய திணைகளையும் வகுத்தனர்.

தன்னாட்டுப் பசு முதலிய வீட்டு நிரைகளைப் பிற நாட்டு வீரர் கவர்தல் வெட்சி என்றும், அவற்றை மீட்டல் கரந்தை என்றும், பகைவர் மேற் படைகொண்டு செல்தல் வஞ்சி என்றும், அப்படையினை எதிர்த்து வீரர் போரிடல் காஞ்சி என்றும், மதில் காத்தல் நொச்சி என்றும், மதிலை வளைத்து நிற்றல் உழிஞை என்றும், இரு தரப்பினரும் களங் குறித்துப் போரிடல் தும்பை என்றும், போர்க்களத்தில் வெற்றியுற்றவர் சூடுதல் வாகை என்றும் பழைய தமிழ்ப் பாடல் ஒன்று கூறுகின்றது.

'வெட்சி நிரைகவர்தல்
மீட்டல் கரந்தையாம்
வட்கார்மேற் செல்வது
வஞ்சியாம்-உட்கா
தெதிரூன்றல் காஞ்சி யெயில்
காத்த னொச்சி
அதுவளைத்த வாகு
முழிஞை-அதிரப்
பொருவது தும்பையாம்
போர்க்களத்து மிக்கோர்
செருவென் றதுவாகை யாம்'

இம்முறை ஏனைய இலக்கணாசிரியர்களின் கருத்துக்கு மாறுபட்டதாகக் காணப்படுகின்றது.

## பூவால் பெற்ற பெயர்

ஒரு நாட்டின் மீது போர் தொடுக்க விரும்பிய அரசன் பகைவனுடைய நாட்டிலுள்ள ஆ நிரைகளைக் கவர்தல் வெட்சி எனப்பட்டது. இத்திணைப் பெயர் அரசனது வீரர்கள் சூடிச்சென்ற பூவினாற்பெற்றது. ஏனைய வஞ்சி முதலிய திணைகளும் பூவாற் பெயர் பெற்றவையாகும்.

பாலை நிலத்தில் வாழ்ந்த மக்கள் செய்த போர் அவர்கள் சூடிச் சென்ற வாகைந் பூவாற் பெயர் பெற்றது. மறவர் எனப்படும் அந்நில மக்கள் வீரம் மிக்கனராதலின் பிறநாட்டு மக்களுடன் செய்த போர்களில அவர்கள் தோல்வியை அறியவில்லை. ஆதலின் அவர்கள் சூடிச் சென்ற வாகை மலர் வெற்றிக்கு அறிகுறியாகக் கருதப்பட்டது.

முல்லை நிலத்து வீரர் பகைப்புலத்து அரசனைப் பொருதி வெற்றி பெறும் நோக்கமாகப் போர் மேற் செல்தலும், பாடி வீடு அமைத்துத் தங்கியிருந்து போர் செய்தலும் வஞ்சி எனப்பட்டன.

மருத நிலத்து மக்கள் செய்த போர் உழிஞைஎனப்பட்டது. பரந்த வெளியாய், இயற்கை யரண்கள் எவையுமின்றி வளத்தொடு மட்டும் விளங்கிய மருத பூமியில் செயற்கையாக அரண்கள் அமைத்துப் பகைவரிடமிருந்து தம்மைக் காப்பாற்றியவர்கள் மருத நிலத்தமக்கள் அவ்வனம உள்ள கோட்டைகளை முற்றுகையிடுதல் உழிஞைத் திணையாகியது.

'அடிமிளை குண்டு இடங்கின்
நெடுமதில் நிலைஞாயில்
அம்புடை ஆரெயில்
உள்ளழித்து உண்ட
அடாஅ வடுபுகை அட்டுமலர்
மார்பன்'
(பதிற்றுப்பத்து 20)

என்னும் பதிற்றுப்பத்து அடிகள் உழிஞைப் போர் நிகழ்ந்த வரலாற்றைச் சித்திரிக்கின்றன.

## தும்பை

தும்பை என்பது நெய்தல் நிலத்தில் நடைபெற்ற போராகும். வெளியான இடத்தில் மறங்கருதி நிகழ்ந்த போர் இதுவாகும். சோழமன்னன் ஒருவன் பகையரசனுடன் பொருதிய காலை, பகைவருடைய உடம்பினின்றும் பெருகி வழிந்த செங்குருதி கார்த்திகைத் திருவிழாவில் வைக்கப்படும் நிரை விளக்குகளின் ஒளிகளை ஒத்திருந்தன என பின்வரும் பாடல் அடிகள் சித்திரிக்கின்றன.

ஆர்ப்புஎழுந்த காட்டினுள்
ஆள் ஆள் எதிர்த்து ஒடித்
தாக்கி எறிதர வீழ்தரும்
ஒண்குருதி
கார்த்திகைக் காற்றிற்
கழிவிளக்கைப் போன்
றனவே
போர்க்கொடித் தானைப்
பொருபுனல் நீர்ராடன்
ஆர்த்து அமர் அட்ட
களத்து.
(அறவழி நாற்பது 17)

போர் முறைகளுள் மிகச் சிறந்தன உழிஞை, தும்பை என்னும் இருதிணைகளாகும். சங்ககால மக்களுடைய போர் விருப்பையும், அப்போரால் அவர்கள் மாண்ட செய்தியையும் பழைய இலக்கியங்கள் எமக்குப் படம் பிடித்துக் காட்டுகின்றன.

இவ்வைந்து புறத்திணைகளுடன் காஞ்சித்திணை, பட்டிணப்பாலை ஆகிய வேறு புறத்திணைகளும் சங்ககாலப் புலவர்களாற் பாடப்பெற்றுள்ளன. இவை யிரண்டும் கைக்கிளை, பெருந்திணை ஆகிய ஒருதலை, பொருந்தாக் காமங்களுக்குப் புறங்களாகும்.

காஞ்சித்திணை என்பது உலகத்தின் நிலைமையை உணர்ந்து அதற்கேற்ப ஒழுகும் ஒழுக்கமாம். இக்காஞ்சித்திணை பெருந்திணையாகிய அகத்திணைக்குப் புறம். செல்வ நிலையாமை, இளமை நிலையாமை, யாக்கை நிலையாமை என்பன நிலையாமையின் முப் பிரிவுகள்.

உலகியற் பொருள்களான அறம் பொருள் இன்பம் ஆகியவற்றை நுகாவதற்குத் தடையாயிருப்பன இந் நிலையாமைகளே, ஆதலின் இந் நிலையாமைகளை உணர்ந்து அறம் பொருள் இன்பம் ஆகிய முப்பொருளகளையும் அநுபவிக்க முடியும் என்னும் கருத்துத் தெரிவிப்பது இத்திணை.

பாடாண்டிணை கைக்கிளைக்குப்புறம். பாடப்படும் ஆணின் ஒழுக்கத்தைப் பற்றிக் கூறுவது (பாடு + ஆண் + திணை பாடு = பாட்டு + ஆண் + திணை = ஒழுக்கம் = பாடாண்டிணை) பொருள் வேண்டிச் சென்ற புலவர்கள் வள்ளலுடைய - மன்னனுடைய - வீரம் கொடை புகழ் முதலிய சிறப்புக்களைப் பாடுதல் பாடாண்டிணை எனப்பட்டது.

## முதல் கரு உரி

தலைவன் தலைவியருக்கிடையே நிகழ்கின்ற அகவொழுக்கங்களுக்குக் கருவாகவுந் துணையாகவும் விளங்குவன முதல் கரு உரி என்னும் முப்பொருள்களாகும். புறத்திணைக்கும் இவை பொருந்துமாதலின், இவற்றுக்கு விளக்கந் தரவேண்டி அகம் புறம் என்பனவற்றின் பின் வைக்கப்பட்டன.

முதற்பொருள் என்பது நிலமும், காலமும் ஆகிய இரண்டின் இயற்கையாகும். கருப்பொருளும் உரிப்பொருளும் நிகழ்தற்கு ஏதுவாகிய பொருள் எனினும் பொருந்தும். மாயவனைத் தெய்வமாகக் கொண்ட முல்லை நிலமும், முருகனை வணங்குவோர் வாழுங் குறிஞ்சி நிலமும் வேந்தனைப் போற்றுவார் வதியும் மருத நிலமும், வருணனை வாழ்த்துவார் வாழும் நெய்தல் நிலமும் என அவை நால்வகைப்படும் என மொழிவர் தொல்காப்பியர். (இளம் பூரணம் 5) இந் நான்கு நிலங்களும், இவற்றுடன் கூடிய பாலை நிலமும் நிலமுதற் பொருள்களாகும்.

'நானிலம்' என்னும் வழக்குத் தமிழ் நாட்டில இருந்ததால் பாலைக்குத் தனியாக நிலத்தை வகுத்து இலக்கிய, இலக்கண ஆசிரியர்கள் காணவில்லை.

ஆவணி முதலாக இவ்விரண்டு மாதங்களாகப்பிரிக்க வருங்காலக் கூறுபாடுகளைக் கொண்டு, ஓர் அண்டை ஆறு பருவங்களாகப் பிரித்தனர். அவை கார், கதிர் முன்பனி, பின்பனி, இளவேனில், முதுவேனில் என்பனவாகும்.

ஒரு நாளினையும் அவ்வாறே ஆறு நேரங்களாகப் பிரித்துப் பருவ முறை கண்டனர் பழந்தமிழ்ப் புலவர்கள். மாலை, யாமம், வைகறை, காலை, நண்பகல் ஏற்பாடு என்பன அவை.

கார் காலத்து மாலை வேளையில் முல்லை ஒழுக்கமாகிய இருத்தல் நிகழுவதாகவும், கதிர் முன்பனிக் காலங்களின் யாமத்தில் குறிஞ்சி ஒழுக்கமாகிய புணர்தல் நிகழுவதாகவும், வைகறை விடியல் நேரங்களில் மருதத்து ஊடல் ஒழுக்கம் நிதழுவதாகவும், ஏற்படு பொழுதில் நெய்தல் ஒழுக்கம் நிகழ்வதாகவும் பலநெறி வழக்குஞ் செய்தனர். பின் பனி, இளவேனில், முதுவேனிற் காலங்களின் நண்பகல் வேளையில் மாலை ஒழுக்கங்கள் நிகழும். சொல்லப்பட்ட ஆறு பெரும் பொழுதுகளும் மருதம் நெய்தல் ஆகிய இரு நிலங்களும் உரியவையாகும்.

கருப்பொருள் என்பது ஒவ்வொரு நிலத்தும் சிறப்பாகக் காணப்படுகின்ற உணவு' நிர் முதலியனவற்றைக் குறிப்பதாகும். இதனை, தெய்வம், உணவு, விலங்கு, பறவை, மரம், பூ, தொழில், யாழ், பறை, நீர், ஊர் எனப்பலவாறாகப் பிரித்துக் காண்பர் உரையாசிரியர். உதாரணமாக: குறிஞ்சி நிலத்தின் தெய்வம் முருகன். தினையும், ஐவனமும், வெதிர் நெல்லும் உணவு, யானை, புலி, பன்றி, கரடி மிருகங்கள் வேங்கையும், தேங்கும் மரங்கள்: மயிலும், கிளியும் பறவைகள்: வெறியாட்டுப் பறையும், தொண்டகப்பறையும் முரசங்கள்! தேன் எடுத்தல், தினைவிளைத்தல் முதலியன தொழில்கள்: குறிஞ்சிப்பண் இசைக்குறி: வேங்கைப்பூ, காந்தட்பூ குறிஞ்சிப்பூ முதலியன மலர்கள்: சுனைநீர், அருவிநீர் என்பன நீர்வகைகள்!

இவ்வாறே ஏனைய நான்கு நிலங்களுக்கும் இலக்கியங்களின் வருணனை வளங்களைக் கொண்டு தெய்வம் முதலாய கருப் பொருட்களைக் கண்டனர்.

சங்ககாலச் செய்யுட்களுக்கு உயிராய் அமைந்தவை உரிப்பொருள் எனப்பட்டன. ஐந்து ஒழுக்கங்களாகிய புணர்தல், பிரிதல், இருத்தல், இரங்கல், ஊடல் என்பன அவை. அவற்றுடன் அவ்வொழுக்கங்கள் நிகழ்தற்கு ஏதுவாய நிமித்தங்களும் உரிப்பொருளின் உள்ளடங்குவனவா.

இக் கட்டுரைக்கு பயன்பட்ட நூல்கள்!

(i) தமிழர் பண்பாடு
- எஸ். வையாபுரிப்பிள்ளை
(ii) இளம் பூரணம்
(தொல்காப்பிய உரை)
(iii) தொல்காப்பியர்
காலத் தமிழர்
— புலவர் குழந்தை

---

# 'சடங்கு'

## வாசகர் நோக்கு

### கலைகளின் ஆதாரம்

கதைகள் படிப்பதில் இப்பொழுது என் மனம் செல்வதில்லை. தங்கள் பத்திரிகையில் வெளிவந்த அன்பர் எஸ் பொன்னுத்துரை அவர்களின் 'சடங்கு' என்னும் தொடர் கதையோ என்னை எங்ஙனமோ ஈர்ந்துவிட்டது.

அஃது ஓர் உயிர் ஓவியம். கதாவஸ்துவையும் கதாபாத்திரங்களையும் ஆசிரியர் கையாளும் ரீதி பாராட்டத்தக்கது. அழிந்தொழிந்து போகும் கிராமிய வழக்கங்கள், ஆசாரங்கள், மொழிவளம் யாவும் எழுத்துருப் பெறும்போது அவை கலைகள் பலவற்றுக்கு ஆதாரம் அளிக்கின்றன.

செல்லப்பாக்கிய ஆச்சியும் அன்னலட்சுமியும் செந்திநாதனும் யாழ்ப்பாணத்தில் எப்பாகத்திலும் இன்றும் நடமாடும் மக்களின் தரங்களே. இவ்வகைச் சிருஷ்டி செந்தமிழ் வளத்திற்கு அவசியம் வேண்டுவதே.

மக்கள் கவிமணி
மு. இராமலிங்கம்,
வட்டுக்கோட்டை.

### 'பாவா'ன பப்படம்!

'சடங்கு' என்ற தொடர் கதையில், 4-5-66 இதழிலும் 11-5-66 இதழிலும் இழிவான, கேவலமான முறையிலே சில பந்திகள் பிரசுரமாகியுள்ளன. காம எழிலையே சிற்சில இடங்களிலே எடுத்துக் காட்டுகின்றார் இதன் எழுத்தாளர். இப்பத்திரிகையை நம் குழந்தைகள் படிக்க வேண்டாமென்பது உங்கள் நோக்கமா? அன்றேல், நடுத்தர வயதுள்ள வாலிபர்களும் பெண்களும் மட்டுமே வாங்கிப் படிக்க வேண்டுமென்பது நோக்கமா? இக்கதையில், தமிழ் நடை இருக்கிறதா? இலக்கணம் திகழ்கிறதா? புனிதக் கருத்திருக்கிறதா? இல்லை. இதைப் படித்தால் எந்த ஒரு மாசற்ற உள்ளமும், பாளாக இடமுண்டு.

ச. கந்தசாமி,
கோப்பாய் தெற்கு.

### சங்கடமான சடங்கு:

தமிழ் இனத்தின் மத்திய தர வகுப்பின் கீழ்த் தட்டிலே ஆதிக்கஞ் செலுத்தும் சாதாரண மக்கள் சிலரைப் பற்றிய நெருங்கிய ஆழமான நோக்கின் பலிதமாகச் 'சடங்கு' அமைந்துள்ள போதிலும், கதையின் இடையில் ஆபாசச் சொற்களையும், கூறமுடியாத செயல்களையும், பச்சையாகக் கூறுவது அதன் தரத்தைக் குறைக்கின்றது.

ஆபாசச் சினிமா காதலர்களிடையே நடைபெறும் செயல்களைக் கூறுகின்றது.

ஆனால், 'சடங்கு' பல வருடங்களாகக் குடும்ப வாழ்க்கையில் ஈடுபட்ட கணவன்-மனைவியின் செய்கைகளைக் கூறுவதால், ஆபாசமல்ல எனச் சிலர் கூறலாம். சுதந்திரன் வாசிக்கும் நேயர்கள் எல்லோருமே மணமானவர்கள் என்றால் மட்டுமே அந்தக் கருத்தை ஓரளவிற்கு ஏற்கலாம். சிறுவர்களின் மனதில் தெரியாத, விளங்கா சில செயல்களை ஆசிரியர் சித்திரித்துக் காட்டி, அவர்களைச் சங்கடத்தில் சிக்கவைக்கிறார்

ச. நடராசா,
மீசாலை.

### பாலல்ல, முப்பால்!

'சடங்கு' வள்ளுவர் கூறிய முப்பால் வழிப்பட்ட ஒரு கதை. 'சடங்கு' பொன்னுத்துரை அவர்களுடைய எழுத்தனுபவத்தையும், கற்பனைக் கருவூலத்தையும் அழகாக எடுத்துக் காட்டுகின்றது.

கே. ரி. ராஜமணி,
மாவநெல்லை.

● எஸ். பொ. பிரச்சினைக்குரிய எழுத்தாளர் அவரின் கதைகளை வரவேற்பவர்களும் இருக்கிறார்கள். அதே நேரத்தில் "ஆபாசம்" என்று ஒதுக்குபவர்களும் இருக்கிறார்கள் "சடங்கு" பற்றி இருதரப்பட்ட கருத்துக்களும் வாசகர்களிடமிருந்து வருமென்று எதிர்பார்த்திருந்தோம். ஆனால் பாதகமான அபிப்பிராயங்களிலும் பார்க்க பாராட்டுதல்களே கூடுதலாக வந்துள்ளன. அவற்றுள் சில வற்றை இங்கு பிரசுரித்துள்ளோம்.



# இப்பொழுது வெற்றியுடன்

## காட்சியளிக்கின்றது!

| கிங்ஸ்லி | பிளாஸா | வெலிங்டன் | விஜயா |
|---|---|---|---|
| (கொழும்பு) | (வெள்ளவத்தை) | (யாழ்ப்பாணம்) | (மட்டக்களப்பு) |

மற்றும் சினிமாஸ் திரைகளில்

- தியாக உணர்ச்சிகளை பிரதிபலிக்கும் சிறந்த திரை ஓவியம் ஸ்ரீதரின் வெண்ணிற ஆடை.
- ஒரு பெண் பைத்தியமாக இருந்த போது எதற்கோ சிரித்தாள்...எதற்கோ...அழுதாள்...ஆனால் மனநிலை தெளிந்த பிறகு எதற்கோ துடித்தாள்...
- கல்யாணப் பரிசின் வசந்தி நெஞ்சில் ஓர் ஆலயத்தின் சீதா, இன்று வெண்ணிற ஆடையின் சோபாவாக மலர்ந்திருக்கிறார்.
- ஸ்ரீதரின் கற்பனைத் தோட்டத்தில் பூத்த மற்றொரு புனித மலர்தான் வெண்ணிற ஆடை!

கவர்ச்சி நடிகை ஜெயலலிதா, ஸ்ரீகாந்த், மூர்த்தி பி. ஏ., நிர்மலா, சுந்தரராஜன், ருக்மணி, ஆஷா நடிப்பது.

சித்திராலயா அளிக்கும்

# வெண்ணிற ஆடை

(ஈஸ்ட்மென் கலர்)

இசை
விஸ்வநாதன் ராமமூர்த்தி

பாடல்கள்
கண்ணதாசன்

கதை, வசனம், டைரக்ஷன்
ஸ்ரீதர்





# இப்பொழுது காண்பிக்கப்படுகிறது!

| எல்பின்ஸ்டன் | ரொக்சி | இம்பீரியல் | நெல்சன் |
|---|---|---|---|
| (மருதானை) | (வெள்ளவத்தை) | (மட்டக்களப்பு) | (திருமலை) |

| நீகல் | வேல்ஸ் | வின்சர் |
|---|---|---|
| (நீர்கொழும்பு) | (கண்டி) | (யாழ்ப்பாணம்) |

கலைக்கதிரவன் எஸ். எஸ். ராஜேந்திரன், கலைமதி விஜயகுமாரி, நாகேஷ், அஞ்சலிதேவி நடித்த

# பூமாலை

கதை வசனம் — கலைஞர் மு. கருணாநிதி
டைரக்ஷன் — ப. நீலகண்டன்
தயாரிப்பு — முரசொலி மாறன்

எதிர்பாருங்கள்! **திருவிளையாடல்**

(வண்ணத்தில்)



# வெற்றி முரசு கொட்டும் 2-வது மகத்தான வாரம்!

திரைப்பட வரலாற்றிலேயே ஒரு புதிய சாதனையை நிலைநாட்டி வருகின்றது!
எட்டுத்திக்கும் மணம் வீச வெற்றிப் புன்னகை புரிகின்றது!

| சென்ட்ரல் | ராணி |
|---|---|
| (மருதானை) | (யாழ்ப்பாணம்) |
| **ஜோதி** | **ராஜேஸ்வரா** |
| (திருகோணமலை) | (மட்டக்களப்பு) |

அட்டூழியம் அழிந்து நீதி நிலைக்கப்படுவதைப் போதிக்கிறது இப்படம். சண்டைக் காட்சிகள் நிறைந்த இப்படம் எம். ஜி. ஆர். பிரியர்கள் விரும்பிப் பார்க்கக் கூடியது. அத்துடன் கே. ஆர். விஜயா, எம் ஆர். ராதா, அசோகன், மணிமாலா கவர்ச்சிப்பாவை ராதா ஆகியோரின் சிறப்பான நடிப்பையும் இப்படத்தில் காணலாம். நாகேஷ்-மனோரமா ஜோடியின் ஹாஸ்யமும் உண்டு.

—நிஷாஜன்—

| ஈரோஸ் | சிகிரி |
|---|---|
| (பாமன்கடை) | (பண்டாரவளை) |
| **டிர்பலி** | **ஓடியன்** |
| (ஹட்டன்) | (கண்டி) |

இப்பொழுது போக்கு அம்சங்களுடன் படத்தை விறுவிறுப்பாக இயக்கி இருக்கிறார். அடுத்து என்ன நடக்குமோ என்ற ஆவலைத் தூண்டும்படி படத்தை திறம்பட டைரெக்ட் செய்துள்ளார் ராமதாஸ்

—மாலை முரசு—

காட்சிக்குக் காட்சி துடிப்பும் விறுவிறுப்பும் கொண்டது. கே. ஆர். விஜயா, எம். ஜி. ஆர். இவர்களின் நடிப்பு உச்ச நிலையை தொடுகிறது. வசனம், பாடல், இசை காட்சித் தொடர்பு எல்லாம் ரசிகர்களுக்குப் பெரும் விருந்தாக அமைந்துள்ளன.

—சினிமா ரசிகன்—



எம். ஜி. ராமச்சந்திரன்
கே. ஆர். விஜயா
நம்பியார், அசோகன், எம். ஆர். ராதா, மணிமாலா, நாகேஷ், மனோரமா, புதுமுகம் ராதா ஆகியோர் திறம்பட நடித்தது.

ஸ்ரீ பாலமுருகன் பிலிம்ஸ்
அளிக்கும்

# தாழம்பூ

இசை
கே. வி. மகாதேவன்

பின்னணி
சௌந்தரராஜன்
சுசிலா

டைரக்ஷன்
என். எஸ். ராம்தாஸ்

துடிப்பும் விறுவிறுப்பும் கொண்ட துப்பறியும் நவீனம்!

கதை, வசனம்:
ஆரூர்தாஸ்

பாடல்கள்
கவிஞர் கண்ணதாசன்
ஆலங்குடிச்சோமு


இப் பத்திரிகை சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிட்டெட்டாருக்காக ஸ்தாபனத்தாரால் கொழும்பு பண்டாரநாயக்க வீதி, 19 ?, இலக்கத்தில் 1965-ம் வருடம் ஜூலை மாதம் ?-ம் திகதி சனிக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.